# SIVA SHRINES IN INDIA & BEYOND

## PART III

IN TAMIL

BY

P. SAMBANDAM, B.A., B.L.

AUTHOR OF

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, The Ideal Wife, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At any Cost, The Fair Ghost, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you Like it, Sati Sulochana, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathi Part II, A Rehearsal or Sabapathi Part III, Sabapathi Part IV, Mixture, Blessed in a Wife, The Dancing Girl, Subadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's Prescription Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, Manohara, The Two Friends, The Knavery of Kalappa, As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I, II, III, IV, V & VI, The Search, Prince Koneri, The Crowd in the Shandy, Ratnavali, The Gypsy Girl, Vaikunda Vaithiyar, Dikshithar Stories, Funny Stories, The Good Sister, Short Stories, Hints to Actors, The Tamil Drama, Humorous Essays, A hand book for Tamil Talkies, Stray Flowers, The Wedding of Valli, Talkie Experiences, The Dead revived, Asthanapura Dramatic Company, Music-Mad, Sabapathi-Zamindar, The Nine Playlets, A Little Spark of Fire, Art *vs* Love, Deepavali Varisai, Hitler *vs* Indian etc. in Tamil,

FIRST EDITION

MADRAS.

PRINTED AT THE RATHNA VILASAM PRESS,
37, ERULAPPAN STREET, SOWCARPET, G. T., MADRAS.

1948

*All rights reserved.*] [*Price Re.* 2

M. S. 16.-C. 500. 17-3-48.

# சிவாலயங்கள்

# இந்தியாவிலும் அப்பாலும்

## மூன்றும் பாகம்

நாடகப்பேராசிரியர்

**ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,**

அவர்களால் இயற்றப்பட்டது.

### இந்த நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்ற நூல்கள் :

லீலாவதி—சுலோசனா, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், மனோஹரன், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப் பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், சதி-சுலோசனா, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, உத்தம பத்தினி, அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல் பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், பேயல்ல பெண்மணியே, புத்த அவதாரம், விச்சுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனா, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன் ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னிமித்ரம், விபரீதமான முடிவு; சுல்தான்பேட்டை சப் அஸிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் — ஆறு பாகங்கள், நாடகத் தமிழ், யயாதி, பிராம்மணனும் சூத்திரனும், வாணிபுர வணிகன், இரண்டு நண்பர்கள், சத்ருஜித், ஹரிச்சந்திரன், மார்க்கண்டேயர், ரத்னவளி, கண்டு பிடித்தல், கோனேரி அரசகுமாரன், சந்தையிற் கூட்டம், வைகுண்ட வைத்தியர், தீட்சிதர் கதைகள், ஹாஸ்யக் கதைகள், குறமகள், நல்லதங்காள், சிறுகதைகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவதெப்படி ?, ஹாஸ்ய வியாசங்கள், தமிழ் பேசும் படக் காக்ஷி, விடுதிப் புஷ்பங்கள், பேசும்பட அனுபவங்கள், வள்ளி மணம், கதம்பம், மாண்டவர் மீண்டது, ஆஸ்தானபுரம் நாடகச் சபை, சங்கீதப் பயித்தியம், ஒன்பது குட்டி நாடகங்கள், சபாபதி ஜமீன்தார், சிவாலயங்கள்-இந்தியாவிலும் அப்பாலும், முதல் இரண்டு பாகங்கள், சிவாலய சிற்பங்கள், மனையாட்சி, தீபாவளிவரிசை, இந்தியனும் ஹிட்லரும், காலக் குறிப்புகள், சுப்ரமண்ய ஆலயங்கள், தீயின் சிறுதிவலை முதலியன.

முதற் பதிப்பு

"இரத்தின விலாஸ்" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது.

காபி ரைட் ] 1947 [ விலை ரூபா [illegible]

Inscribed

to

The Beloved Memory

of

My Parents

P. VIJAYARANGA MUDALIAR

AND

P. MANICKAVELU AMMAL

AND

My Friend

C. RANGAVADIVELU

சீர்காழி :—இதை ஸ்ரீ காளிபுரம் என்பர் சிலர், மஹா காளி பூசித்த க்ஷேத்திரமாதலால் அப்பெயர் பெற்றதாம் சீயாழி என வழங்கப்பெற்றது—தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னை ராஜதானி, இதற்கு பிரமபுரம், வேணு புரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய, சிரபுரம், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம், என மற்றும் பெயர்கள் உளது. திருஞான சம்பந்தர் பிறந்த இடம். மூவர் பாடல்பெற்றது. ஸ்வாமி-பிரமபுரீஸ்வரர், (சுயம்பு லிங்கம்) தோணியப்பர், சட்டைநாதர், தேவி திருநிலை நாயகி, சக்கரை தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், பிரமன் பூஜித்த க்ஷேத்திரம், காளிபூஜித்த ஸ்தலம், பிரமபுரம் அடியிலும், தோணிபுரம் நடுவிலும், சட்டை நாதம் அதன்மேலும் உளது. பிரம்மோற்சவம் சித்திரை மாதம், திருஞான சம்பந்தருக்குத் திருமுலைப்பால் கொடுக்கும் உற்சவம் விசேஷம்; கோயிலில் தோணியப்பர், சட்டநாதர் என்று இரண்டு மூர்த்திகளுண்டு. கர்ப்பக்கிரகத்திற்கு மேலுள்ள நிலையில் சட்டநாதர் சிலையிருக்கிறது, 3 அடி உயரம், வெள்ளிக் கிழமை இரவு 12 மணிக்கு மாத்திரம் பூஜை. கோயில் பெரியது 1078 × 567 அடி விஸ்தீரணம், கோவிலில் பல கல் வெட்டுகள் உள. அர்மன்கோயில் சிலவருடங்களுக்குமுன் முற்றிலும் புதிப்பிக்கப்பட்டது. சிலர் இது ஜடாயுபட்சி யைப்போல் கட்டப்பட்டதென்பர். இங்கு சம்பந்தர் தகப்ப னார் சிவபாத ஹிருதயர் பூசித்த லிங்கம் சோமேஸ்வரம் எனும் கோயிலிலிருக்கிறது. சீர்காழியில் இரட்டைத் தெரு எனும் வீதியில் 11-வது எண்ணுள்ள வீடுதான் திருஞான சம்பந்தா வீடென்று சொல்லப்படுகிறது. இங்கு தர்ம சத்திர மூண்டு. முசாபர் பங்களா உண்டு.

சீயமங்கலம் :—குகைக்கோயில், வந்தவாசி தாலுக்கா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானியிலுள்ளது. முதல் மஹேந்திரவர்மன் காலத்தியது. (600—626) பல் லவ சில்பம், ஸ்தம்பேஸ்வரர் கோயில் ; கல்வெட்டுகளில் ஸ்வாமிபெயர் திருக்கற்றளி மஹாதேவர் என்றும், தர்மீஸ் வரமுடையார் என்றும், அவனிபாஜன பல்லவேஸ்வரர் என் றும் இருக்கிறது. லிங்கம் திரண்ட உருவம்.

**சீயோனிபிரிவு** :—மத்திய மாகாணம், இங்கு சிவாலயம், ஹேமாத்பண்ட் கட்டிடம், இங்குள்ள பைரோந்தன் கிராமத்தில் சிறு குகைக்கோயில் உண்டு, அதற்கு மாத்கோக்கா என்று பெயர். சிவாலயம், சீயோன் பட்டணத்தில் மஹாதேவர் கோயில்—புதிய கட்டிடம்.

**சீவாலயம்** :—இங்கு குச்மேச லிங்கம் எனும் ஜோதி லிங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

**சுகபுரம்** :—பொன்னானி தாலூகா, மலபார் ஜில்லா, சென்னை இராஜதானி, சிவாலயம்-தட்சிணாமூர்த்திகோயில்.

**சுசீந்திரம்** :—திருவாங்கூர் ராஜ்யத்தில் கன்யாகுமரிக்குப் போகும் வழியிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி பெயர் தாணுமாலயன்; (தாணு-சிவன்; மால்-விஷ்ணு; அயன்-பிரம்மா;) தேவி-அறம் வளர்த்த நாயகி; பிரக்ஞா தீர்த்தம், கொன்றை விருட்சம், லிங்கம் மும்மூர்த்தி ஸ்வரூபமுள்ளது-மும்மூர்த்திகளுக்கும் ஆலயமுடையது. இங்குள்ள விஷ்ணுவிக்ரஹம் மதுரை திருமலை நாயகரால் ஸ்தாபிக்கப்பட்டது. பிரம்மோற்சவம் சித்திரைமாதம். கோயில் 1390-ம் வருடம் மார்த்தாண்ட வர்மரால் புதுப்பிக்கப்பட்டது. பெரிய மண்டபம் ராமவர்மா என்பவரால் 1478-ம் வருடம் கட்டப்பட்டது. இங்கு சுமார் 25 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிலை இருக்கிறது. இந்திரன் பூசித்து சாபம் நீங்கிய ஸ்தலம்; அவன் சாபம் நீங்கி சுசியான படியால் சுசீந்திரம் எனப் பெயர்பெற்றது. இங்குள்ள சில்பங்கள் 10 அல்லது 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கோயிலில் ஆயிரம் வருடங்களுக்கு முந்திய கல்வெட்டுகள் இருக்கின்றன. இங்குள்ள ஒரு பெரிய ஸ்தம்பத்தில் சப்தஸ்வரங்கள் பேசும்படியான சிறு ஸ்தம்பங்கள் இருக்கின்றன.

**சுட்டூரு** :—நஞ்சன்கோட் தாலுகா, மைசூர் ராஜ்யம். சோமேஸ்வரர் ஆலயம்.

**சுப்பிரம்மண்யம்** :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இந்த ஜில்லாவில் இதுதான் பிரபல சிவஸ்தலம்.

**சுயம்புநாதர் கோயில்** :—வட இந்தியா, நேபாள ராஜ்யத்திலுள்ளது-சிவாலயம். இங்குள்ள லிங்கத்திற்கு நான்கு முகங்கள் உண்டு.

சுல்தான்பத்திரி :—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, திருநெல்லி விஷ்ணுகோயிலுக்குப் பின்புறம், குண்ணிக தீர்த்தத்தருகில், சிறு சிவாலயமுளது, மலைக்கோயில்.

சுழியல் :—(திரு) சென்னை ராஜதானி, திரிபுவனத்திற்கு 12 மைல் தெற்கிலுள்ளது. சதாநந்தர் பூசித்த ஸ்தலம். பார்வதிதேவி சிவபெருமானை மணம்புரிய பூசித்த ஸ்தலம். ஸ்வாமி திருமேனி நாதேஸ்வரர், தேவி வனமாலையம்மை. சுந்தரர் பாடல் பெற்றது.

சூணம்பேடு :—செங்கற்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-புதிய கட்டிடம்.

சூரத் பிரிவு :—பம்பாய் ராஜதானி. (1) சூரத் பட்டணம், கோபிபுரம் எனும் இடத்தில் சிவாலயம். ஸ்வாமி-மூலேஸ்வர், ராஹியசோனி எனும் இடத்தில் காசி விஸ்வநாதர் கோயில்; இவ்விரண்டு கோயில்களும் தரை மட்டத்திற்கு 15 அடி கீழே இருக்கின்றன. (2) புரோச் பிரிவு பாத்பூத் சிவாலயம். ஸ்வாமி பாதேஷ்வர்.. கோயில் சிறியது 11 அடி சதுரம். (3) கரோட் கிராமம் சிவாலயம், ஸ்வாமி கோடேஸ்வர் அல்லது கோடி விஸ்வேஸ்வர், சிறிய கோயில் 11 அடி சதுரம்.

சூரல் :—தென்மேற்கு இந்தியா, உடுப்பியிலிருந்து 16 மைல்-சிவாலயம்.

சூரியனார்கோயில் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவிடைமருதூருக்கு 2 மைல் சிவாலயம். பூர்வீகப் பெயர் குலோத்துங்க சோழமார்த்தாண்ட ஆலயம், முதல் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது. சூரியன்கோயிலாயிருந்து பிறகு சிவாலயமாக மாற்றப்பட்டதாத எண்ணுகிறார்கள். ஸ்வாமி விஸ்வேஸ்வரர், தேவி விசாலாட்சி-இங்கு லோஹத்தாலாகிய நவக்கிரஹங்களுடைய விக்ரஹங்கள் இருக்கின்றன.

சூளேகேரே :-ஷிமோகா ஜில்லா, மைசூர் ராஜ்யம் ; கன்னட பாஷையில் சூளேகெரே என்றால் தாசிக்குளம் என்று அர்த்தம். ஏரியின் கிழக்குக் கரையில் சிவாலயம். ஸ்வாமி சித்தேஷவர்.

செங்கமா :—சென்னை ராஜதானி, திரு அண்ணாமலை தாலூகா, வடஆற்காடு ஜில்லா சிவாலயம். ஸ்வாமி ரிஷபேஸ்வரர், கல்வெட்டுகளில் திரு இடபத்துறை நாயனார் என்றிருக்கிறது ; தேவி பிரஹத்சுந்தரி.

செங்கல்பட்டு :-(செங்கழுநீர்பட்டு என்பது பழயபெயர்) சென்னை ராஜதானி, மேற்படி ஜில்லா, ஊருக்கு ஒருமைல் கிழக்கில் பூர்வம் சமண சன்யாசிகள் குடியிருந்த ஒரு குகையில், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

செங்கனூர் :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம். சக்தி ரிஷி பூஜீத்த ஸ்தலம். அகஸ்தியர் ஸ்வாமியையும் பார்வதி தேவியையும் பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம். இங்கு முற்காலத்தில் சாக்கியக்கூத்து நடந்த கூத்தம்பலமும், ஐந்துநிலை கோபுரமும் இருந்ததாம், அவை அக்னிக்கு இரையாகிவிட்டனவாம். இக்கோயில் பார்வதி விக்ரஹத்திற்கு மாதவிடாயுண்டாவதாக ஐதீகம்.

செங்காட்டங்குடி :—(திரு) சென்னை ராஜதானி, நந்நிலதகிற்கு 6 மைல் தென்கிழக்கு, சிறுத்தொண்டர் தன் பிள்ளையைக் கறியாகப் படைத்த க்ஷேத்திரம், விநாயகர் கஜமுகாசுரனைக் கொன்ற க்ஷேத்திரம், அப்பாபம் நீங்கும் பொருட்டு அவர் பரமசிவனை பூசித்த ஸ்தலம். ஆலயத்திற்கு கணபதீச்ரம் என்று பெயர். இறந்த அசுரனது ரத்தப் பெருக்கால் பூமி சிவந்தபடியால் செங்காட்டங்குடி என்று பெயர் பெற்றது. ஸ்வாமி கணபதீகார், தேவி திருக்குழல் நாயகி அம்மை. சித்திரைமாதம் பிரமோற்சவம்—அமுது படையல் உற்சவம் விசேஷம். இங்குள்ள விநாயகருக்கு மனித முகம் இருக்கிறது. இங்கு வாதாபி கணபதி என்னும் ஒரு விநாயகர் கோயிலிலுண்டு. அது வாதாபியிலிருந்து கொண்டுவரப்பட்டதாக ஐதீகம். இங்கு இரண்டு மூலஸ்தானங்கள் உண்டு. (1) கணபதீஸ்வரர், (2) உத்தரபதீஸ்வரர் அல்லது உருத்திராபதீஸ்வரர் (?) சிறுத்தொண்டர் காலம் சுமார் கி. பி. 640 என்பர். ஆகவே பூர்வீக கோயில், மிகவும் பழமையானதாம். இங்குள்ள கல்வெட்டொன்றினால் இக்கோயிலுக்கு ஆதியில் 3 பிராகாரங்கள் இருந்ததாக தெரிகிறது. கோயிலிலுள்ள கங்காள மூர்த்தி விக்ரஹம் பார்க்கத்தக்கது. திருஞான சம்பந்தர் அப்பர் பாடல்பெற்ற ஸ்தலம்.

செங்கோட்டை :—ரெயில் ஸ்டேஷன்-திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி குலசேகர நாதர்.

செங்கோடு :—(திரு) சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் - குன்றின்கீழ் கைலாசநாதர் கோயில், குன்றின்பேரில் அர்த்தநாரீஸ்வரர் கோயில்-கோபுரம் 5 நிலையுடையது. இங்குள்ள நிர்த்தன மண்டபம் 17-ம் நூற்றூண்டில் கட்டப்பட்டது, ஊர் பெயர் திருக்கோடி மாடச் செங்குன்றம் என்றும் வழங்கப்படுகிறது. ஊர் சங்கரதுர்க்கம் ரெயில் ஸ்டேஷனுக்கு 8 மைல். வெண்கல அர்த்தநாரீஸ்வரர் விக்ரஹம் பார்க்கத்தக்கது, இதற்கு இரண்டே கைகள். குன்று 1200 படிகளையுடையது. இங்கு 60 படி எனும் இடத்தில் வியாஜ்யக்காரர்கள் பிரமாணம் செய்வது வழக்கம். குன்றின்மீது தீர்த்தங்கள்-பைரவ தீர்த்தம், பாப நாச தீர்த்தம். கோயில்களில் கி.பி. 622-654-ல் ஆண்ட ராஜ கேசரி வர்மன் காலத்திய கல்வெட்டுகளும், கி. பி. 907-952-ல் ஆண்ட பரகேசரி வர்மன் காலத்திய கல்வெட்டுகளும் உள.

செஞ்சி :-சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, திண்டிவனத்திலிருந்து $18\frac{1}{2}$ மைல் சிவாலயம். ஸ்வாமி விஸ்வநாதர். புராணத்தின்படி காசியிலிருந்துவந்த சுர சர்மாவினால் கட்டப்பட்டது என்பதாம்.

செட்டிக்குளம் :-சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, பெரும்பாலூர் தாலூகா. சிவாலயம் - ஸ்வாமி ஏகாம்பரேஸ்வரர், தேவி காமாட்சியம்மை. பிரம்மோற்சவம்-தைமாதம்.

செட்டிப்பட்டி :-சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 24 மைல் தூரம். சிவாலயம் பாழடைந்திருக்கிறது, இங்கு மற்றொரு சிவாலயமுண்டு, இதில் பூஜையுண்டு, இதுவும் தற்காலம் பாழடைந்திருக்கிறது.

செண்பகராமநல்லூர் :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, நாங்குநெறி தாலூகா. சிவாலயம்-ஸ்வாமி ஜகன்னதேஸ்வரர்.

செந்தலை :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூகா, மன்னார் சமுத்திரம் என்றும் பெயர்,

பழய பெயர் பெருந்துறையாம்—தாஞ்சாவூருக்கு அருகி லுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி சுந்தரேஸ்வரர், கல்வெட்டு களில் ஊர் பெயர் சந்திரசேகரர்சதுர்வேதி மங்கலம் என் றிருக்கிறது.

செந்துறை :—(திரு) சென்னை ராஜதானி, திருச்சிராப் பள்ளி ஜில்லா, மேற்படி தாலூகா-குடவாசலுக்கு 4 மைல் வடகிழக்கு-இதற்கு உடையார் கோயில் என்றும் பெயர். சிவாலயம் - தௌம்யர் பூஜித்த ஸ்தலம். கோயில் கி. பி. 10-ம் நூற்றூண்டில் கட்டப்பட்டது. ஸ்வாமி சந்திரசேகரர், இங்கு ஸ்வாமிக்கு பலாப்பழ நிவேதனம் விசேஷம்.

செப்பறை :-சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா சிவாலயம்-ஸ்வாமி தியாகேஸ்வரர், தேவி-சிவகாமி அம்மை, மோட்ச தீர்த்தம்.

செப்ரோலு :—சென்னை ராஜதானி, குண்டூர் ஜில்லா, பாபட்லா தாலூகா. இங்கு 2 சிவாலயங்கள் உண்டு. நாகேஸ்வரர் கோயில், பிரமேஸ்வரர் கோயில்.

செம்பட்ட விடுதி :— புதுக்கோட்டை சமஸ்தானத்தில் உள்ளது. சிவாலயம் பாழுடைந்திருக்கிறது. காராள வேளா ளர்களால் கட்டப்பட்டது. கோயிலில் ஒரு சுரங்கம் இருக் கிறது.

செம்பத்தூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம், புதுக் கோட்டைக்கு 8 மைல் தூரம்; சிவாலயம் கிலமாயிருக்கிறது. இங்குள்ள கல்வெட்டுகளில் இது சாமன் என்பவரால் கட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

செம்பாய நல்லூர் :—( செம்பராய நல்லூர் ? ) தென் இந்தியா, சிவாலயம்-ஸ்வாமி விரூபாட்சீஸ்வரர், தேவி அகி லாண்டம்மன், சரஸ்வதி தீர்த்தம்—பரசுராமர் பூசித்த ஸ்தலம்.

செம்பொனர்கோயில் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்திற்கு 7 மைல் கிழக்கு, செம்பொன்பள்ளி என்றும் பெயர், சிவாலயம்-ரதிதேவி, குபேரன், இந்திரன் பூசித்த ஸ்தலம், ஸ்வாமி சொர்ணபுரீஸ்வரர், தேவி சுகந்த வன நாயகியம்மை, வீரபத்ர தீர்த்தம்-சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

செம்மங்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா திருவாரூருக்கு 5 மைல்-இங்கு 2 கோயில்களுண்டு, அபி புக்தேஸ்வரர் கோயில், சோழபுரீஸ்வரர் கோயில்.

செய்யூர் :-சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, மதுராந்தகம் தாலூகா, அச்சிறுபாக்கத்திற்கு 7 மைல் சிவாலயம். ஸ்வாமி வன்மீகநாதர், தேவி பார்வதி, வராஹ தீர்த்தம், கோயில் சோழ கட்டிடம், இங்கு கைலாச நாதர் கோயில் என்று மற்றொரு கோயில் உண்டு.

சென்னபட்டணம் :—(மதராஸ்) சென்னை ராஜதானி. இங்குள்ள கோயில்களெல்லாம் தற்கால திராவிட சில்ப மமைந்தவை. சிவாலயங்கள் (1) சென்னை மல்லிகேஸ்வரர் கோயில், இது பழைய லைட்அவுஸ் இருந்த இடத்திலிருந் தது, கிழக்கு இந்திய கம்பெனியார், லைட்அவுஸ் அவ்விடம் கட்டுவதற்காக, அதை எடுத்துவிட்டு, தற்காலம் புஷ்பக் கடையிருக்கும் சைனு பஜார் வீதியில் கட்டிக்கொடுத்தனர். இது நடந்தது சுமார் 1760-ம் வருடம். இது மணலி முத்து கிருஷ்ண முதலியார் முயற்சியினால் நடந்தது. இதற்குப் பக்கத்தில் சென்னை கேசவ பெருமாள் கோயில் இதே மாதிரியாகக் கட்டப்பட்டது. இவைகளிரண்டிற்கும் நடுவில் பொதுவான குளம் உண்டு. இரண்டு கோயில்களுக்கும் ரதம் ஒன்றே. ஸ்வாமி சென்னை மல்லிகேஸ்வரர்—பிரம்மோற்சவம் பங்குனி மாதம் (2) ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரர் கோயில், பெத்துநாய்க்கன் பேட்டையிலுள்ளது. ஸ்வாமி ஏகாம்பரநாதர், தேவி காமாட்சி அம்மன்-பிரமோற்சவம் பங்குனிமாதம். 300 வருடங்களுக்குள் கட்டப்பட்டது. (3) மல்லீஸ்வரர் கோயில் லிங்கசெட்டி தெருவில் முத்தி யாலு பேட்டையிலுள்ளது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. ஸ்வாமி மல்லீஸ்வரர், தேவி சுவர் ணாம்பிகை. இக்கோயில் செட்டிமார்களால் கட்டப்பட்டது, பிரம்மோற்சவம் பங்குனி மாதம். (4) கச்சாலீஸ்வரர் கோயில் முத்தியாலுபேட்டையில் அரமனைக்காரன் தெருவி லுள்ளது. புதிய கோயில், ஸ்வாமி கச்சாலீஸ்வரர், தேவி சௌந்தர நாயகி. பிரம்மோற்சவம் சித்திரை மாதம் (5) காசி விஸ்வநாதர் கோயில் கிருஷ்ணாங் குளத்தருகில் உள்ளது, ஸ்சாமி விஸ்வநாதர், தேவி விசாலாட்சி, புதிய

**சேயூர்** :—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, பள்ளடம் தாலூகா, இங்கு இரண்டு சிவாலயங்கள் இருக்கின்றன.

**சேவூர்** :—புதுக்கோட்டை சமஸ்தானம், தென் இந்தியா, திருமையம் தாலூகா, சிவாலயம், ஸ்வாமி ஸ்ரீ பூமீஸ்வரர்.

**சேறை** :—(திரு) சென்னை ராஜதானி, இது உடையார் கோயிலென வழங்கப்படுகிறது, தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணத்திலிறங்கிப் போகவேண்டும். (நாய்ச்சியார் கோயிலுக்கு 3 மைல் தெற்கு) இங்கு சந்திரங்களுண்டு. திருஞான சம்பந்தர் அப்பர் பாடல்பெற்றது. தௌம்ய மகரிஷி பூசித்த ஸ்தலம், சிவாலயம், ஸ்வாமி செந்நெறியப்பர் (சந்நிதியப்பர் என வழங்கப்படுகிறது) தேவி ஞானவல்லியம்மை, மார்க்கண்டர் தீர்த்தம்.

**சைதாப்பேட்டை**:—சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சென்னைக்கு 5 மைல், சிவாலயம்-ஸ்வாமிகாருணீஸ்வரர், தேவி கற்பகாம்பாள், பிரம்மோற்சவம் சித்திரை மாதம்.

**சோண்டி** :—வட இந்தியா, சிவாலயம், இங்குள்ள லிங்கம் வடக்கிலுள்ள 12 ஜோதி லிங்கங்களில் ஒன்றும்.

**சொராய்** :—மைசூர் ராஜ்யம், ஷிமோகா ஜில்லா, சொராப் தாலூகா, சிவாலயம், ஸ்வாமி காட்டேஸ்வரர், இங்கு ராமேஸ்வரர் கோயில் என்று மற்றொன்று உளது.

**சேரபுரம்** :—(திரு) இது தியாகவல்லி என்றும் வழங்கப்படுகிறது, சென்னை ராஜதானி, ஆலம்பாக்கத்திற்கு 2 மைல் கிழக்கு. அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். கோயில் மண்ணினல் மூடப்பட்டிருந்து சுமார் 130 வருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. கடற்கரையிலுள்ளது. ஸ்வாமி சோபுர நாதேஸ்வரர், தேவி சோபுர நாயகி. பிரம்மோற்சவம் பங்குனிமாதம்.

**சோம்பூர்** :—(சோமபுரி ?) மைசூர் ராஜ்யம், ரங்கன் ஹல்லி ஸ்டேஷனுக்கு 2 மைல்-பத்ரை நதிக்கரையிலுள்

ளது. சிவாலயம் சிறியது. லிங்கம் அர்த்தநாரீஸ்வரர் வடிவானது. கோயில் மேற்கு பார்த்தது. சிவராத்திரிதினம் சூரிய நமஸ்காரம்.

**சோம்நாத்பூர்** :—மைசூர் ராஜ்யம், சீரங்கபட்டணத்திற்கு 20 மைல்; காவிரிக்கு இடதுகரையிலுள்ளது. சோமன் என்னும் பல்லவ தளகர்த்தனுல் சுமார் 1270-ஆம் வருடம் கட்டப்பட்டதென்பர். சோமன் என்பவன் ஹொய்சால அரசன் மந்திரி என்பர். கோயில் முழுவதும் கருமையான கற்களால் கட்டப்பட்டது, சுண்ணும்பே கட்டடத்தில் கிடையாதாம். ஹொய்சாலசில்பம், தக்கனுசாரி (?) கட்டியதென்பர், இங்கு தற்காலம் முக்கியமூர்த்தி கேசவப் பெருமாள், இது தற்காலம் காணுமற் போயிற்றென்பர்; ஆயினும் கோயிலில் ஒரு சந்நிதியில், சிவலிங்கம், கணபதி, மஹிஷாசுரமர்த்தனி சிலைகளிருக்கின்றன. கோயில் மூன்று விமானங்களுடைய சளுக்கிய கட்டிடம்.

**சோமநாதபுரம்** :—பம்பாய் ராஜதானி, கத்திவார் பிரிவு, ஜூனகட் ஸ்டேட்டிலுள்ளது, பெரிய சிவாலயம். ஜோதிலிங்கம்-கோயிலுக்குப் பின்புறம் பட்குண்டம் எனும் குளத்தருகில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் மடிந்ததாக இதிகாசம். மகம்மது கஜனியால் 1025-ம் வருடம் இக்கோயில் கொள்ளையடிக்கப்பட்டது. வீராவால் ஸ்டேஷனிலிருந்து போகவேண்டும், அந்த ஸ்டேஷன் வீராவால்-பௌநகர்—கோண்டால—ஜூனகட்—போர்பந்தர் ரெயில்வேயிலிருக்கிறது. இதற்கு பிரபாஸ் படன் என்றும் பெயர். வீராவல் ஸ்டேஷனிலிருந்து 2 மைல் கோயில்—சளுக்கிய சில்பம்-பெரும்பாலும் மணற்கல்லாலாயது.

**சோமூர்** :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, கரூர் தாலூகா, சோமேஸ்வரர் கோயில்.

**சோழபுரம்** :-சென்னை ராஜதானி, வடஆற்காடு ஜில்லா, வேலூர் தாலூகா, சிவாலயம் கிலமாயிருக்கிறது, கல்வெட்டுகள் உடையது.

**சோழமாதேவி** :—சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, உடுமல்பேட் தாலூகா, சிவாலயம்.

**சோழலிங்கபுரம்** :—சென்னை ராஜதானி, சிவாலயம்—சோழலிங்கேஸ்வரர், தேவி பார்வதி, கோயில் சோழ அரசனால் கட்டப்பட்டதென்பர்.

**சோற்றுத்துறை** :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, தஞ்சாவூருக்கு 7½ மைல்; சப்தஸ்தானங்களில் 3-வது. திருவையாற்றுக்கு 3½ மைல், கண்டியூருக்கு 1½ மைல் கிழக்கு. இந்திரன் பூசித்த ஸ்தலம். சிவபெருமான் பக்தனை அருளாளனுக்கு எடுக்க எடுக்க குறையாத சோறு அளித்த ஸ்தலம். இங்கு கிழக்கு கோபுரம் அஸ்திவாரத்துடன் நிறுத்தப்பட்டிருக்கிறது, சிவாலயத்தில் மஹாவிஷ்ணுவுக்கும் ஆராதனம் உண்டு. பழைய கோயில், கர்ப்பக்கிரஹத்தில் பல கல்வெட்டுகள் உண்டு. அம்மன் கோயிலும், ஸ்வாமிகோயிலும் அக்கம் பக்கம்மா யிருக்கின்றன. ஸ்வாமி தொலையாச் செல்வேஸ்வரர், தேவி ஒப்பிலாம்பிகை-மூவர் பாடல்பெற்றது.

**சௌட்டம்பூர்** :—மத்ய இந்தியா, துங்கபத்ரா கரையிலுள்ளது, சிவாலயம். சுமார் 11 நூற்றாண்டில் கருப்புக் கல்லால் கட்டப்பட்டது.

**சௌரத்** :—வங்காள ராஜதானி, தர்பங்கா ஜில்லா, மதுபாணியினின்றும் 8 மைல் சிவாலயம். 1845-ம் வருடம் தர்பங்கா ராஜாவால் கட்டப்பட்டது. கோயிலின் பக்கத்திலுள்ள குளம் அழகியது.

**டாக்கா பிரிவு** :—கிழக்கு வங்காளம், டாக்கா பட்டணம், சிவாலயம். ஷிவ்பாலி எனும் பெயருடையது.

**டிரக் ஜில்லா** :—மத்திய மாகாணம், தேவ் பலோடா கிராமம், சிவாலயம் கிலமாயிருக்கிறது.

**டியோரியா** :—ஐக்கிய மாகாணம், பழைய சிவாலயம், கிலமாயிருக்கிறது.

**டெலிகான்தாம்தேரரே** :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, இங்கு மூன்றுமுக்கிய சிவாலயங்கள் உண்டு. (1) **சித்தேஷ்வரர்** கோயில், கோட்டையைப்போன்ற மதில் சுவர் உடையது. (2) **தக்லேஷ்வரர்** கோயில். (3) **உத்தரேஷ்வர்** கோயில் சுமார்-200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது.

டேராடூன் பிரிவு :—ஐக்கிய மாகாணம், (1) லாக்மண்டல் கிராமம், பழைய சிவாலயம் சிங்கபுரத்து அரசகுமாரியால் கட்டப்பட்டது. இங்கு மற்ளுெரு இடிந்த சிவாலயமுமுண்டு-ஸ்வாமி கேதாரீஸ்வரர் (2) சஹஸ்ரதாரா சிவாலயம்.

டாகினி :-(தட்சிணம்) இங்குஒரு ஜோதிலிங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

டோல்பூர் :—வட இந்தியா, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம்-மஹாதேவர், மஹாதேவி.

டளம்ரேயன் :—வட இந்தியா, இது பூர்வத்தில் கௌதமருடைய ஆஸ்ரமம் என்பர். சிவாலயம், ஸ்வாமி கௌதமேசர், உமாதேவி.

டிவால்வா :—மத்ய இந்தியா, பம்பாய் ராஜதானி, சிவாலயம்.

டில்லி :—வட இந்தியா ரெயில்ஸ்டேஷன், சிவாலயம், ஸ்வாமி தர்மேசர், தர்மராஜர் பூசித்தது.

தக்களூர் :—சென்னை ராஜதானி, தர்மபுரத்திற்கு சமீபத்திலுள்ளது, சிவாலயம், ஸ்வாமி திரிலோகநாதர், தேவி தர்ம சம்வர்த்தினி, வைப்பு ஸ்தலம்.

தக்கோலம் :-திருஊறல் எனவும் வழங்கப்படுகிறது. அரக்கோணம் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி-நந்திவாயினின்றும் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருக்கிறபடியால் திருஊறல் என்பெயர் பெற்றதென்பர். சிவாலயம். ஸ்வாமி உமாபதீஸ்வரர், ஜலநாதேஸ்வரர், தேவி உமையம்மை, கிரிஜா கன்னிகாம்பாள். உமை பூசித்த ஸ்தலம், ஊறல் தீர்த்தம், பார்வதி தீர்த்தம், இந்திரன், யமன், சூரியன், சந்திரன், பாண்டவர்கள், பூஜித்த க்ஷேத்திரம்-திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு சமீபத்தில் மற்ளுெரு சிவாலயமுண்டு, ஸ்வாமி கங்காதரீஸ்வரர், தேவி மோகனவல்லி.

தக்திசுலைமாள் :—வட இந்தியா, காஷ்மீரத்திலுள்ள ஒரு குன்று. இதன் சிகரத்தில் சிவாலயம், 1650-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 1659-ம் ஆண்டில் கட்டிடம் ஔரங்கசீப்

உத்தரவால் நிறுத்தப்பட்டதென்று பெர்கூசன் கூறுகிறார்.

நசண்டவுலு :—ரேபள்ளி தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி லிங்கோத்பவ ஸ்வாமி.

தஞ்சாவூர் :—மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி ரெயில் ஸ்டேஷன், சிவாலயம், ராஜராஜேஸ்வரம் என்பது இதன் பழைய பெயராகும். தஞ்சாசுரனைக்கொன்ற ஸ்தலமாதலால் தஞ்சையெனப் பெயர் பெற்றதென்பர். ராஜராஜனால் கோயில் கட்டப்பட்டபடியால் ராஜ ராஜேஸ்வரம் எனப் பெயர்பெற்றது. (தேவாரப் பதிகங்களில் வழங்கப்பட்ட தஞ்சை என்பது இதன்று, அது வேறு சிவஸ்தலமாகும்). தேவாரக்காலத்தின் பிறகு இக்கோயில் கட்டப்பட்டபடியால் இதற்கு மூவர் பாடல் கிடையாது. திருவிசைப்பா மாத்திரம் உண்டு. அதில் இவ்வூர் தஞ்சை ராஜராஜேஸ்வரம் என வழங்கப்பட்டிருக்கிறது. கோயில் 1003-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு 1009-ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. கோயிலுக்கு பிரஹதீஸ்வரர் கோயில் என்றும் பெயர். ஸ்வாமி பிரஹதீஸ்வரர், (பெரிய ஈஸ்வரர்) பெரிய உடையார் எனவும் வழங்கப்பட்டிருக்கிறது. பெயரிற் கிசையலிங்கம் மிகவும் உன்னதமானது. அபிஷேக அலங்காரம் செய்வதற்கு அருகில் ஏணி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தேவி பிரஹன்னயகி, சிவங்கி (சிவகங்கை) தீர்த்தம் (ஜலம் சிவந்த நிறமுடையது) ராஜராஜனால் வெட்டப்பட்டதென்பர். கோயிலின் விமானம் மிகவும் பிரசித்தமானது ; மிகவும் உன்னதமானது. 216 அடி உயரம் ; தட்சிணமேரு எனும் பெயர் பெற்றது, உத்தம விமானம் என்றும் பெயர் ; மிகவும் அழகியது. சிற்பியின் சாதுர்யத்தால் இதன் நிழலைக் காண்பதரிதாம். இதன் அடிவாரம் 96 அடி சதுரம். விமானத்தின் உச்சியிலிருக்கும் பிரம்மரந்திரம் ஒரே கல்லாலாயது, 80 டன் பாரமுள்ளதென்பர். இச்சதுரக் கல்லின் நான்கு மூலைகளிலும் நான்கு நந்திகள் இருக்கின்றன, இவை ஒவ்வொன்றும் $6\frac{1}{2}$ அடி நீளம் $5\frac{1}{2}$ அடி அகலம். பிரம்மரந்திரத்தைச் சுற்றி ஒரு குதிரை வண்டி

போகும்படியான அவ்வளவு இடம் உண்டு. இப்பிரமரந்திரக்கல்லே, நான்கு மைலுக்கு அப்பாலுமுள்ள சாரப்பள்ளம் எனும் கிராமத்திலிருந்து சாரம் போட்டு கொண்டு போயிருக்கவேண்டுமென்று எண்ணப்படுகிறது. இவ்விமானத்தின் வடப்பக்கத்திய கீழ்பாகத்தில் ஒருடொப்பியணிந்த ஐரோப்பியனுடைய தலே இருக்கிறது. இது மார்க்கோ பொலோவின் தலே உருவம் என்று சிலர் கூறியுளார். அது தவரூகும், மார்க்கோ பொலோவின் காலம் 13-ம் நூற்ருண்டாகும், ஒருகால் இந்த விமானத்தை கட்ட உதவி புரிந்த ஒரு ஐரோப்பியனுடையதா யிருக்கலாம், நிச்சயமாய்ச்சொல்வதற்கில்லே. மிஸ்டர் ஹெமிஸ்கே என்பவர் இது ரோலண்டு கிரிப் எனும் டச்சுக்காரனுடையது என்று எண்ணுகிரூர். இக்கோயிலுக்கு மாடக்கோயில் என்றும் பெயர்; 13 நிலேகளுடையது; விமானத்தின் உச்சியில் இருக்கப்பட்ட கலசம் செம்பினுல் செய்யப்பட்டு பொன் தகடு வேய்ந்ததாகும்; செப்புக்கலச இடை 3083 பலமாம். பொன்தகடு 2926½ கழஞ்சுப்பொன்னுலாயது. இக்கோயிலுக்கு 3 திருவாயில்கள் உண்டு, முதற்கோபுரவாயில் கேரளாந்தகன் எனப்பெயர்பெற்றது, இரண்டவது ராஜராஜன் திருவாயில், மூன்ருவது உள்வாயில் அணுக்கன் திருவாயில் என்றும் பெயர்கொண்டதாம். விமானத்தின் தெற்குவாயிலுக்கு விக்ரமன் திருவாயில் என்று பெயர். வடக்குபுரமும் ஒரு வாயிலுண்டு. இவ்விரண்டு வாயில்களிலும் கம்பீரமான துவார பாலகர்கள் இருக்கின்றனர். தெற்கு வாயிலின் கீழ்ப்பக்கம் லட்சுமியும், வடக்குவாயிலின் கீழ்பக்கம் சரஸ்வதியும் இருக்கின்றனர். கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றிலும் அநேகம் கல்வெட்டுகள் இருக்கின்றன. 1055-ம் வருடம் வெட்டிய கல்வெட்டு ஒன்றினுல் அக்காலம் ராஜராஜவிஜய நாடகம் என்பது கோயிலில் ஆடப்பட்டதென்று அறிகிரூம். பிறகு வந்த மஹாராஷ்டிர அரசனுகிய சரபோஜி என்பவர் இதைமாற்றி சரபோஜி குறவஞ்சி நாடகம் ஆடும்படியாக ஏற்படுத்த, இது தற்காலம் இக்கோயிலில் வைகாசி மாதம் நடக்கும் பிரம்மோற்சவத்தில் 9-வது நாள் அஷ்டக்கொடி தினத்தில் நடைபெறுகிறது. கோயிலின் கோபுரங்களில் உள்ள உருவங்களில் பல வைஷ்ணவ உருவங்களாம். இவை வைஷ்ணவர்களாகிய நாயக்க அரசர்கள் காலத்தில் நிர்மிக்கப்பட்டன என்று எண்ண இட

மூண்டு. கோயில் இரண்டு பிரிவையுடையது, முன்பாகம் 250 அடி சதுரம், பின்பாகம் சுமார் 500 அடி நிகளம், 250 அடி அகலம். தற்காலம் இக்கோயில் விசாரணை பார்த்துவரும் திருவாளர் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் கோயிலின் மொத்த நிகளம் 793 அடியென்றும் குறுக் களவு 397 அடியென்றும் குறிப்பித்திருக்கிறார். கிழக்கு கோபுரம் 1360-ம் வருடம் காஞ்சி அரசர் ஒருவரால் கட்டப் பட்டதென்பர். இங்குள்ள கோபுரங்களுள் இது பழமை யானது. கோயிலின் வடபுரம் சுப்பிரமண்யர் கோயில் இருக்கிறது, மிகவும் சித்திரவேலைப்பாடுள்ளது. பெர்கூசன் என்பவர் தென் இந்தியாவிலுள்ள கோயில்களிலெல்லாம் பிரஹதீஸ்வரர் கோயிலே மிகச் சிறந்ததென்றும், இக் கோயிலுள் சுப்பிரமணியர் ஆலயமே மிகவும் அழகிய தென்றும் கூறியுள்ளார். சுப்பிரமணியர் கோயில் 17-ம் நூற்றூண்டில் கட்டப்பட்டதென்று மதித்துளார். மற்றும் சிலர் 12-ம் நூற்றூண்டின் கடைசியில் கட்டப்பட்டதென்று எண்ணுகிறூர்கள். இது மதுரை நாயக்கர் அரசர்கள் காலத் தில் கட்டப்பட்டிருக்கலாம், இதிலுள்ள ஸ்தம்பங்கள் முதலி யன மதுரை பெரிய கோயிலில் உள்ளவைபோல் இருக் கின்றன. நாயக்க அரசர்கள் மதுரையைவிட்டு தஞ்சா வூரில் சிலகாலம் ஆண்டனர் என்பது இங்கு கவனிக்கத் தக்கது. கோயிலின் அம்மன் சந்நிதி பிற்காலத்தியதாகும். மல்லப்பா நாயக்கர்காலத்தில் 13-ம் நூற்றூண்டில் கட்டப் பட்டதாம். ஸ்வாமி கோயிலுக்கெதிரில் ஒரு பிரம்மாண்ட மான நந்தியிருக்கிறது, ஒரே கல்லாலாயது. 12 அடி உயரம் 19½ அடி நிகளம், 8¼ அடி அகலம். நந்திமண்டபம் நாயக் கர் காலத்தில் கட்டப்பட்டதாம். கோயிலின் பெரிய மதில் சுவர்களில் தற்காலம் 343 நந்திகள் இருக்கின்றன. முற் காலத்தில் இருந்த பல நந்திகள் அழிந்துபோயிருக்கவேண் டும். பிராகாரத்தில் அஷ்டதிக் பாலர்களுக்கு தனித்தனி ஆலயங்கள் உள. தெற்கு திருவிக்ரமன் திருவாயிலின் கீழ் பக்கத்தில் சில பௌத்த உருவங்கள் இருக்கின்றன. கோயிலில் விஷ்ணுவின் சிலையும், நம்பி ஆரூரர், நங்கை பரவை நாய்ச்சியார்கள், திருநாவுக்கரசு, திருஞான சம்பந் தர், சிறுத்தொண்டர், ராஜராஜன், அவரது மனைவி லோக மாதேவி, முதலியவர்களுடைய வடிவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோயிலானது கடந்த

இரண்டு மூன்று நூற்றூண்டுகளில் நடந்த யுத்தங்களில் கோட்டையாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. 1792-ம் வருடம் பிரஞ்சுக்காரர்கள் வெளிப்பிராகாரத்தை ஆயுதங்கள், வெடிமருந்து முதலியன வைப்பதற்குரிய ஆயுத சாலை (Arsanel) ஆக உபயோகித்தனர். கோயில் கோட்டையின் ஒருபக்கமுள்ளது. பெரிய கோயிலின் சுற்று மண்டபங்கள் ராஜ ராஜனது சேனைதிபதியாகிய ராமன் கிருஷ்ணன் மும்முடிச்சேரன் பிரமராயனுல் கட்டப்பட்டதாம். பெரிய விமானத்தின் தென்புறமுள்ள தட்சிணமூர்த்தி கோயில் பிறகு சேர்க்கப்பட்டதாம், 21 படிகள் ஏறி இதைப் பார்க்கவேண்டும். வடக்கிலுள்ள சிறிய சண்டேஸ்வரர் கோயில் விமானம் கட்டியகாலத்திலேயே கட்டப்பட்டது. பெரிய நந்தியும், இரண்டாம் கோபுரமும் அக்காலத்தியதேயாம். விமானத்திற்கு மேற்குபுறம் உள்ள சித்தராகிய கருவூரர் கோயில் புதிய கட்டிடம். சிவகங்கையின் மத்தியில் லோகநாத ஈஸ்வரர் ஆலயம் என்று ஒரு சிவாலயமுளது. அப்பர் ஸ்வாமிகள் பாடியது இதைக்குறித்தாயிருக்கலாம். பெரிய கோயிலின் அர்த்த மண்டபத்தில் சோழ அரசர்கள் காலத்திய வர்ணம் தீட்டிய சில சித்திரங்கள், சிலவருடங்களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டன. சூத்திரர்கள் இந்த அர்த்த மண்டபத்திற்குள்ளும் போகலாம். பெரிய கோயிலிலுள்ள விநயகருக்கு அருமொழி விநயகர்என்று பெயர். பெரி கோயிலில் தியாகராஜர் சந்நிதியுண்டு, ஸ்வாமிக்கு விடங்கர் வீதிவிடங்கர் எனப்பெயர். தியாகராஜர் நடனத்திற்கு அஜபா நடனம் எனப் பெயர். பிரம்மோற்சவம் சித்திரை மாதம் 18 நாட்கள், உற்சவ காலத்தில் ராஜராஜன் விக்ரஹம் ஸ்வாமிக்கு முன்பாகக் கொண்டுபோகப்படுகிறது. ஆ'-வல்லான் என்று ஸ்வாமிக்குப்பெயர். விநயகர் கோயில் 1801-ம் வருடம் சரபோஜி மன்னரால் புதுப்பிக்கப்பட்டது. இரண்டாம் பிராகாரத்து சுற்று மாளிகையிலுள்ள லிங்கங்கள் மஹாராஷ்டிர மன்னரால் பிரதிஷ்டை செய்யப்பட்டவை. உட்பிராகாரத்தின் தளவரிசை சரபோஜி மன்னரால் 1801-ம் வருடம் போடப்பட்டது. இவ்வூரில் பல சத்திரங்கள் உள. (1) ராஜா சத்திரம் ஒரு நாளைக்கு 6 அணு முதல் 2 ரூபாய் வரையில் குடிக்கூலி. (2) நாயக்கர் சத்திரம் ஸ்டேஷனுக்கு 6½ பர்லாங்கு. (3) தேன்கொண்டான் சத்திரம் 2 பர்லாங். (4) கோமுட்டி

சத்திரம் 1 மைல்—முசாபர் பங்களாவும் உண்டு, தஞ்சாவூருக்கு 2 மைல் தூரத்தில் வெண்ணாறுகரையில் ஒரு சிவாலயமுண்டு, ஸ்வாமிக்கு தஞ்ஜேசன் என்று பெயர். (தஞ்சை+ஈசன்) தேவாரத்தில் குறிக்கப்பட்ட தஞ்சை இதுவாகும் என்று சிலர் எண்ணுகின்றனர், தேவி ஆநந்தவல்லி மற்ற சிவாலயங்கள். சதாநந்தேஸ்வரர், புஷ்பமாலிகேஸ்வரர், சங்கரநாராயணர், கொங்கணேசர், விஸ்வநாதர், கச்சபேஸ்வரர், ரத்னகிரீஸ்வரர், கோயில்கள்.

**தடிகல்பூடி** :—எல்லூர் தாலூகா, கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, கங்கேஸ்வரர் கோயில்.

**தண்டலைநீணெறி** :—(திரு) தண்டலைச்சேரி எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, திருத்துறைப்பூண்டி ஸ்டேஷனுக்கு 3 மைல் வடக்கு. அரிவாட்டாய நாயனர் முக்தியடைந்த ஸ்தலம். திருமாலின் கூர்மாவதாரத்தின் அகங்காரத்தை அடக்கி, அதன் ஓட்டை சிவபெருமான் அணிந்த க்ஷேத்திரம். ஸ்வாமி நீணெறி நாதேஸ்வரர், தேவி ஞானம்பிகை. ஓமக தீர்த்தம். ஸ்வாமிக்கு மாவடு நிவேதனம் விசேஷம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

**தண்டங்குறை** :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி கைலாச பசுபதீஸ்வரர், தேவி லோக நாயகி, வைப்பு ஸ்தலம்.

**தண்டந்தோட்டம்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, பேணுபெருந்துறைக்கு 2 மைல், கும்பகோணத்திலிருந்து 8 மைல், ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி பார்வதி, சிவகங்கை தீர்த்தம். பார்வதி பரமேஸ்வரர் மணக்கோலமாக இடப வாகனத்தின்மீது காட்சி அளிக்கின்றனர். ஸ்வாமி இடபத்தின்மீது கையூன்றியவண்ணம் இருக்கிறார். விக்ரஹம் பெரிதாயிருக்கிறது.

**தர்பங்கா பிரிவு** :—(தனுர்பங்கம்) வங்காள ராஜதானி வட இந்தியா, இங்குள்ள சிவாலயங்கள், (1) காக்ரால் கபிலேஸ்வர் மஹாதேவர் கோயில், கபிலமுனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர். (2) மாலிநகர், சிவாலயம், மஹாதேவர், புதிய கோயில், சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (3) சௌரத், சிவாலயம் தர்பங்கா

சமஸ்தானத்தால் கட்டப்பட்டது.—ஞானேசர், ஞானேஸ்வரி.

**தர்மஸ்தலா** :-மேற்கு இந்தியாவிலுள்ளது. மங்களூருக்கு 56 மைல், கார்களுக்கு 20 மைல். சிவாலயம், நம்பூத்ரி பிராமணர்களால் பூஜை.

**தர்மபுரம்** :—(திரு) தென் இந்தியா, காரைக்கால் ஸ்டேஷனுக்கு ½ மைல் மேற்கு, யமதர்மன் சிவபெருமானைப் பூஜித்த ஸ்தலம். பிரம்மாவும், அரம்பையரும் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி யாழ்முறி நாதேஸ்வர், தேவி சதா மதுராம்பிகை அல்லது மதுரமின்னம்மை. கதலி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம் ; பிரம்ம தீர்த்தம்; திருஞான சம்பந்தர் யாழ்மூறிப்பதிகம் (மாதர் மடப்பிடி) பாடிய க்ஷேத்திரம். இங்கு தர்மபுரி ஆதீனமடம் எனும் சிறந்த சைவ மடம் உளது.

**தர்மபுரி** :—மேற்படி தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லிகார்ஜுனர் கோயில். இங்கு முசாபர் பங்களா உண்டு. இவ்வூர்க்கு பழைய பெயர் தகடூர்.

**தர்மவரம்** :—அனந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி, காசி விஸ்வநாதஸ்வாமி கோயில்.

**தரங்கம்பாடி** :—மாயவரம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, மாசிலாமணீஸ்வரர் கோயில், தேவி ரத்னாம்பிகை, கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் மணிவண்ணீஸ்வரமுடையார் என்றிருக்கிறது. இதற்கு அளப்பூர் என்றும் பெயர் உண்டு. வைப்பு ஸ்தலம்.

**தரங்காத்ரா** :—வட இந்தியா, ரெயில்வே ஸ்டேஷன், மஹாதேவர் சிவாலயம்.

**தரணிகோடா** :—சென்னை ராஜதானி, அமரேஸ்வரர் கோயில், 1436-ம் வருடம் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது.

**தாரஸ்** :-வங்காள ராஜதானி-பாம்னு பிரிவு, சிவாலயம், 300 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட மஹாதேவர் ஆலயம்.

தரைக்குடி :—ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி தர்மேஸ்வரர். கோயில் மண்மூடியிருந்ததை சேதுபதியவர்கள் வெளியாக்கினர்.

தபஸ்தானம் :—வட இந்தியா, பிரம்ம கபாலத்திற்கு போகும் வழியிலுள்ளது, சிவாலயம், ஸ்வாமி பரமசிவம் தேவி பாலபார்வதி ; அம்பாள் தபஸ்செய்த இடம்.

தப்பளாம்புலியூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூருக்கு 1 மைல் சிவாலயம். ஸ்வாமி ஏகாம்பரேஸ்வரர், தேவி பார்வதி.

தலகோனு :—சென்னை ராஜதானி, மதனபள்ளியிலிருந்து 70 மைல், காடுகள் மத்தியில் சித்தேஸ்வரர் சிவாலயமுளது, அருகாமையில் பாபவிநாசம் எனும் மலைநீர் வீழ்ச்சியுளது. சிவராத்ரி உற்சவம் விசேஷம்.

தலைக்காடு :—மைசூர் ராஜ்யம், நரசிபூருக்கு 8 மைல், மைசூருக்கு 28 மைல். சோழ அரசர்கள் இங்கு ஆண்ட காலத்தில் இதற்கு ராஜராஜபுரம் என்று பெயர் இருந்தது. இங்கு முக்கியமாக ஐந்து கோயில்கள் உள, அவைகளை தர்சிப்பதற்கு, பஞ்சலிங்க தர்சனம் என்று பெயர். இங்கு காவிரியானது நான்கு திக்குகளிலும் பாய்கிறது. ஊர்மண் மேடிட்டிருந்தது. இங்குள்ள ஐந்து முக்கிய கோயில்களில் நான்கு மண்மூடியிருந்தன. மைசூர் சமஸ்தானத்தார் சுமார் 10,000 ஆட்களைவைத்து கோயில்களையெல்லாம் புனர் உத்தாரணம் செய்தனர். 12 வருடங்களுக்கு ஒரு முறை இந்த ஐந்து கோயில்களையும் தரிசனம் செய்யும் புண்ணியகாலம் வருகிறது. இங்குள்ள முக்கிய தீர்த்தங்கள் இரண்டு, முழுகுதுறை, கோகர்ண தீர்த்தம். ஐந்து முகங்களுடைய சிவபெருமான், கோகர்ணக் குளக்கரையில், வைதீஸ்வரராகவும், காவிரியின் உத்தரவாஹினிக்கரையில் அர்க்கேஸ்வரராகவும், காவிரியின் பூர்வ வாஹினிக்கரையில் பாதாளேஸ்வரராகவும், தட்சிண வாஹினிக்கரையில் சக்தேஸ்வரராகவும், காவிரியின் பஸ்சிமவாஹினிக் கரையில் மல்லிகார்ஜுனராகவும், வீற்றிருக்கிறார். பாதளேஸ்வரர் கோயிலில் சூரியன் பூசித்ததாகவும், சக்தேஸ்வரர் கோயிலில் வாசுகி பூசித்ததாகவும், மல்லிகார்ஜுனர் கோயிலில் பிரம்மாவும் காமதேனுவும் பூஜித்ததாகவும் ஐதீகம். இவ்வூரின் சம்ஸ்கிருதப்

பெயர் தளவனபுரம். ஸ்தலபுராணத்தில் இதற்கு கஜாரண்ய க்ஷேத்திரம் என்று பெயர் உளது. தலன், மாடன் எனும் இரண்டு வேடர்கள் பூசித்த ஸ்தலமாதலால் தலக்காடு எனப் பெயர்பெற்றதென்பது ஸ்தலபுராணம். இதுமிகவும் புராதன மான பட்டணம். கங்கை அரசர்கள் மூன்றாம் நூற்றாண்டில் ஆண்ட இடம். ஆகவே இக்கோயில்களும் மிகவும் புராதன மானவை. வைதீஸ்வரன் கோயில் மிகவும் பழமையானது. கோயில் கிழக்கு பார்த்தது. வெளிப்பிராகாரம் பின்னால் விஜயநகர அரசர்களால் கட்டப்பட்டது, ஸ்வாமி வைதீஸ்வரர், தேவி மனோன்மணியம்மன். கோயில் துவாரபாலகர்கள் 10 அடி உயரம். மல்லிகார்ஜுனர் கோயில் சோம கிரியின் உச்சியிலுள்ளது. குன்று 350 அடி உயரம். தேவி, ஸ்தல புராணத்தின்படி சாமுண்டி, சாதாரணமாக பிரமராம்பிகை என அழைக்கப்படுகின்றது. கோயிலில் ஒரு அழகிய சித்திர மண்டபமுண்டு. அர்க்கேஸ்வரர் கோயில் விஜயபுரத்திலிருக்கிறது, கோயில் பிற்காலத்தியது, சிறியது. இங்கு கௌரிசங்கரர் கோயில் என்னும் ஒரு சிவாலய முண்டு, கல்வெட்டுகளில் இதற்கு மல்லேசர் என்று பெயர். இது மைசூர் சிக்கதேவராய உடையார் என்பவரால் 1706-ம் ஆண்டில் கட்டப்பட்டது. சக்தேஸ்வரர் கோயிலுக்கு மாரணேஸ்வரர் கோயில் என்றும் பெயர் உளது. வைதீஸ்வரர் கோயில் தெற்கில் வீரபத்திரர் கோயில் உண்டு. இங்குள்ள கல்வெட்டுகளில் இங்கு ராஜராஜேஸ்வரம் என்று ஒரு கோயில் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கோகர்ண தீர்த்தத்தருகில் கோகர்ணேஸ்வரர் கோயில் என்று ஒரு சிறு சிவாலயமுண்டு. வைதீஸ்வரன் கோயிலின் பின்பாகம் சாளுக்கிய கட்டிடமாகத் தோன்றுகிறது. முன் பாகம் பிற்காலம் புதுப்பிக்கப்பட்டதா யிருக்கலாம்.

**தலைக்காவேரி** :—மைசூர் ராஜ்யம், மைசூருக்கு 85 மைல் சிவாலயம், ஸ்வாமி அகஸ்தீஸ்வரர். இங்குதான் காவிரிநதி ஆரம்பமாகிறது. காவிரி தீர்த்த ஸ்நானம் விசேஷம். தேவார வைப்பு ஸ்தலம்.

**தலைச்சங்காடு** :—(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா,' திருவலம்புரத்திற்கு 1 மைல் தென் மேற்கு. மாயவரத்திலிருந்து 12 மைல்; சீர்காழியிலிருந்து 10 மைல். ஆக்கூர் ஸ்டேஷனிலிருந்து 2 மைல், மஹாவிஷ்ணு பூசித்து

பாஞ்சஜன்யம் எனும் சங்கம்பெற்ற க்ஷேத்திரம். திக்பாலர்கள், திக்கஜங்கள் பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி சங்கருணதேஸ்வரர் (சங்கு + அருள் = நாதேஸ்வரர்) சங்கராணிபேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகின்றனர். தேவி சௌந்ரேநாயகியம்மை. காவிரி தீர்த்தம், வில்வவிருட்சம்; திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

**தலைஞாயிறு** :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி குற்றம்பொறுத்த ஈஸ்வரர்—தர்மபுரம் ஆதீனம் மேற்பார்வைக்குட்பட்டது.

**தலைச்சேரி** :—தென் இந்தியா, மலையாள தேசம், சிவாலயம், ஸ்வாமி பரமேஸ்வரர், தேவி பார்வதி.

**தவளேஸ்வரம்** :—சென்னை ராஜதானி, கோதாவரி ஜில்லா, சிவாலயம். இதனருகில் கோவ்வூர் எனுமிடத்திலும் ஒரு சிவாலயமுண்டு.

**தலைகோணமலை** :-சென்னை ராஜதானி, கடப்பை ஜில்லா, வாயல்பாடு தாலூகா, சிவாலயம். பாபநாச தீர்த்தம்.

**தலையாலங்காடு** :-(திரு) சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவாரூருக்கு 2 மைல் மேற்கிலுள்ளது. திருக்குடவாயிலுக்கு 5 மைல். கபிலர் பூஜித்த ஸ்தலம். தாருகாவன ரிஷிகள் அனுப்பிய முயலகன் முதுகின்மீது சிவபெருமான் நடித்தருளிய க்ஷேத்திரம். ஸ்வாமி ஆடவல்ல ஈஸ்வரர், தேவி திருமடந்தையம்மை. சங்கதீர்த்தம், சுவர்ண தீர்த்தம்; திருநாவுக்கரசு ஸ்வாமிகள் பாடல் பெற்றது.

**தலையூர்** :—சென்னை ராஜதானி, ருத்திரபசுபதி நாயனார் பூசித்த சிவஸ்தலம்.

**தவளகிரி** :—சிவாலயம், ஸ்வாமி தவளகிரீஸ்வர், தேவி பர்வத வர்த்தினி. பிரமதீர்த்தம்.

**தவளேஸ்வரம்** :—வட இந்தியா, டில்லிக்கு அருகிலுள்ளது. சிவாலயம்.

**தள்ளி**:—வளவநாடு தாலூகா, மலபார் ஜில்லா, தென் இந்தியா, பழைய சிவாலயம் இடிந்துபோய்விட்டது. அழகிய சிவலிங்கம் மாத்திரம் இருக்கிறது.

தன்னூரு :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, குகைக்கோயில்—முன்பு சிவாலயமாயிருந்து தற்காலம் வைஷ்ணவக்கோயிலாக மாற்றப்பட்டிருக்கிறது.

தளவனூர் :—பஞ்சபாண்டவ மலையென வழங்கப்படுகிறது. திண்டிவனம் தாலூகா, ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, பேரணி ஸ்டேஷனுக்கு 5 மைல். சிவாலயம், குகைக்கோயில்—முதல் மஹேந்திரவர்மன் காலத்தியது. (600—625) பல்லவ சில்பம். கோயில் தெற்கு பார்த்தது. ஆயினும் சிவலிங்கம் கிழக்கு பார்த்ததாயிருக்கிறது. லிங்கம் திரண்ட உருவமுடையது. கோயிலின் பழைய பெயர் சத்ருமல்லேஸ்வரம்.

தனியூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்கு புழுகீஸ்வரம் என்றும் பெயர். மாயவரத்திற்கு அருகிலுள்ள சிவாலயம்.

தாசேபல்லே :-கிருஷ்ணா ஜில்லா, சென்னை ராஜதானி, நாகேஸ்வரஸ்வாமி கோயில்.

தாட்பத்ரி :—அனந்தபூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி ராமேஸ்வரர்-விஜயநகர சில்பம். பெர்கூசன் இங்கு இடிந்துபோயிருக்கும் கோபுரத்து அடிபீடத்திலிருக்கும் சில்பங்களை மிகவும் புகழ்ந்திருக்கிறார். இங்குள்ள கல்வெட்டொன்று 1188-ம் வருஷத்தியது, ஆகவே கோயில் அதற்கு முற்பட்டதாம். பெர்கூசன் இது கிருஷ்ணதேவராயருடைய உத்யோகஸ்தராகிய ராமலிங்க நாயுடு என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது, சுமார் 1507-ம் வருஷத்தில், என்று நினைக்கிறார்.

தாடபுரம் :—தென் இந்தியா, பழைய சிவாலயம்.

தாறு பிரிவு :—பம்பாய் ராஜதானி. இங்கு பல சிவாலயங்கள் உள. (1) அகாஷி, சிவாலயம், ஸ்வாமி பவானிஷங்கர் மஹாதேவ். கோயில் 1691-ம் வருஷம் கட்டப்பட்டது. (2) அம்பர்நாத் அல்லது அமர்நாத் கோயில், ஸ்வாமி அமர்நாத்; சாளுக்கிய சில்பம். (3)குல்சுண்டி சித்தேஷ்வர்கோயில். (4) காற்றேரி குகைக்கோயில்-குகை 66 நெம்பருடையதில் ஒரு

சிவாலயமுண்டு. சிவராத்ரியில் மாத்திரம் பூஜை நடக்கிறது. (5) சந்திரபதா சிவாலயம், ஸ்வாமி சாம்பேஷ்வர் அல்லது சோமேஷ்வர் கோயில் 1000 வருடங்களுக்கு முற்பட்டது. (6) லோனுட்-ராமேஷ்வர் சிவாலயம். (7) சால்ஸெட் இங்கு ஆதியிலிருந்த சிவாலயம் போர்த்துகேயரால் மாதாக் கோயிலாக மாற்றப்பட்டது. (7) மாதிரான் பம்பாய்க்கருகில் சிவாலயம் 1880-ம் வருடம் கட்டப்பட்டது. (8) மூர்பாட் சிவாலயம் புதியது. சுமார் 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (9) நிர்மல் இங்கு 3 சிவாலயங்கள் உள. விமலேஷ்வர் கோயில், பூலேஷ்வர் கோயில், சித்தேஷ்வர் கோயில்.(10) சோபாரா —சக்ரேஷ்வர் காமதேவ் கோயில். (11) டில்சே சிவாலயம் தீயினால் அழிக்கப்பட்டது. இங்குள்ள சிவலிங்கம் பெரிய கவசத்தினால் மூடப்பட்டிருக்கிறது. (12) ஷஹிங்கா சிவாலயம்—சிவராத்ரி விசேஷம். (13) வாடா காண்டேஷ்வர் சிவாலயம், கிலமாயிருக்கிறது. (14) கனேஷ்புரி, பீமேஷ்வர் சிவாலயம்.

தாம்பல் :—கடக்கிலிருந்து 13 மைல் தென்கிழக்கு. இங்கு 3 பழைய சிவாலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் தொட்டபாசப்பா கோயில் கவனிக்கத்தக்கது. இதில் அந்தராளத்தின் மேற்பாகத்திலுள்ள சில்பங்கள் மிகவும் வேலைப்பாடுள்ளவை. இக்கோயில் கட்டப்பட்ட காலம் சுமார் 12-ம் நூற்றாண்டாயிருக்கலாம் என்று பெர்கூசன் எண்ணுகிறார். அடிபீடமும் விமானமும் நட்சத்திரத்தைப்போல் கோணங்கள் உடையவை, தூண்கள் அழகியவை. கர்ப்பக்கிரஹத்தின் முக்கிய வாயிலில் மும்மூர்த்திகளின் சிலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலிலுள்ள பிரம்மாவுக்கு 5 முகங்கள் உண்டு. இங்குள்ள நந்தி பெரியது.

தாமல் :—காசீபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம், சோழ கட்டிடம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருப்பற்றீசுரமுடையார் என்றிருக்கிறது.

தர்மபுரம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம், இந்திரன் பூஜித்தது. இதற்கு வில்வாரண்யம் என்று பெயர், யமனால் பூசிக்கப்பெற்றது. ஸ்வாமி தர்மபுரீஸ்வரர், தேவி அபயாம்பிகை. மாயவரத்திற்கு 3 மைல்

கிழக்கு. இங்கு மடாலயத்திற்கு வடக்கில் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் கோயில் உளது. தர்மபுரத்து ஆதீனம் மேற்பார்வை.

தாமோ பிரிவு :—மத்திய மாகாணம், (1) மண்டக்பூர் சிவாலயம், ஸ்வாமி ஜகேஷ்வர் 1711-ம் வருடம் கோயில் பாலாஜி திவான் என்பவரால் கட்டப்பட்டது. தீர்த்தம் அமிர்தகூபம் (2) மட்கோடா மஹாதேவர் சிவாலயம். சங்கிராந்தி உற்சவம் விசேஷம்.

தார்வார் பிரிவு :—பம்பாய் ராஜதானி, இங்கு பல சிவாலயங்கள் உள. (1) மயிலார் குட்டா (குன்று) மயிலார்லிங் ஆலயம். சோமேஷ்வர் கோயில் இது முதலில் ஜெயினர் ஆலயமாயிருந்தது, பிறகு மசூதியாகி, மஹாராஷ்டிரர்களால் 1753-ம் வருடம் சிவாலயமாக்கப்பட்டது. (2) எட்லிபாட் சிவாலயம் செங்கல் கட்டடம். ஸ்வாமி காமேஷ்வர். (3) கடக் இங்கு 3 சிவாலயங்கள் உள, திருகூடேஷ்வர் கோயில், சோமேஷ்வர் கோயில், காமேஷ்வர் கோயில். (4) கால்கநாத் வரதாவும் துங்கபத்ரையும் சங்கமமாகுமிடத்தில் கார்கேஷ்வர் கோயில். (5) குட்டுடாபூர் சிவாலயம், இங்கு ஸ்வாமி மல்லாரி, மல்லன் எனும் அரணைக் கொன்றவர் என்று ஐதீகம்; தேவி மல்லாரிதேவி. (6) ஹாங்கல் இங்கு 3 சிவாலயங்கள் உண்டு, ராமலிங் கோயில், தாரகேஷ்வர் கோயில், விருபாட்சர் கோயில், மற்றும் ½ மைல் தூரத்தில் பிலேஷ்வர் சிவாலயமுளது. (7) ஹாரல்ஹல்லி இரண்டு சிவாலயங்கள், சோமேஷ்வர் கோயில். காமேஷ்வர் கோயில். (8) ஹத்திமட்டூர் போகேஷ்வர் சிவாலயம். (6) ஹவங்கி ராமேஷ்வர் சிவாலயம். (10) ஹெப்லி ஷம்புலிங்கேஸ்வரர் சிவாலயம். இது ஜெயின சில்பமமைந்தது. (11) ஹிரேமாநூர் விஸ்வேஸ்வரர் சிவாலயம். (12) ஹிரேகரூர் இங்கு 2 கோயில்கள் உள, வராஹ காலேஷ்வர் கோயில், விஷபானஹரேஷ்வர் கோயில். இக்கோயிலில் தரிசனம் செய்பவர்களுக்கு விஷபாதையில்லையென்பது ஐதீகம். (13) ஹொம்பால் போகேஷ்வர் கோயில். (14) ஹோஷல்லி சிவாலயம், ஸ்வாமி மல்லப்பா. (15) பாலம்பீட் இங்கு 2 சிவாலயங்கள்-கள்ளமஹேஷ்வர் கோயில், ராமேஷவர் கோயில். (16) பாளேஹல்லி, மயிலார்தேவ் கோயில், மல்லிகார்ஜுனர் கோயில். (17) பாலூர் ராமலிங்கேஷ்வர் கோயில். (18) பங்காபூர் சித்தேஷ்வர் சிவாலயம். (19) பார்டூர் பாரதேஷ்

வர் சிவாலயம். (20) பெல்வட்கி ராமலிங் கோயில். (21) பெல்வட்டி கோகுலேஷ்வர் கோயில். (22) பென்கன்கோண்டா, கால்மேஷ்வர் கோயில் சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்டது. (23) பாவி ஹால் சித்தேஷவர் கோயில். (24) பிதார்கட்டி சங்கமேஷ்வர் ஆலயம். (25) சப்பி மல்லிகார்ஜுனர் கோயில், பழையது. (26) சௌடாதாம்பூர் முக்தேஷ்வர் சிவாலயம். (27) சிகான்ஜி அமிர்தலிங்கேஷ்வர் கோயில். 500 வருடங்களுக்கு முந்தியது. (28) சிக்கனூர்த்தி கால்மேஷ்வர் சிவாலயம். (29) சிக்கரூர் சோமேஷ்வர் கோயில். (30) சின்முல்குண்ட் சிக்கேஷ்வர் கோயில்; மற்றும் ஒரு சிறுகுன்றில் சித்தேஷ்வர் சிவாலயம். (31) தாம்பல் காமேஷவர், சோமேஷ்வர் கோயில்கள்; இரண்டும் பாழடைந்திருக்கின்றன. சாளுக்கிய கட்டிடங்கள். (32) தேவிஹோரதூர் போகேஷ்வர் சிவாலயம். (33) எட்லாபாட் காமேஷ்வர் கோயில், செங்கல் கட்டிடம். சுயம்புலிங்கம் என்பர். (34) கடக் சோமேஷ்வர் ஆலயம், ராமேஷ்வர் ஆலயம். (35) திரிகூடேஷ்வர் சிவாலயம். இங்கு 3 லிங்கங்கள் சேர்ந்திருக்கின்றன. சாளுக்கிய சில்பம். (36) அம்லூர் சோமநாதர் சிவாலயம். (37) ஆடூர் கள்ளேஸ்வர் மஹாதேவ் கோயில். இவ்வூருக்கு பழைய பெயர் பாண்டிபுரம், கோயில் 1400 வருடங்களுக்கு முந்தியது. இதில் சளுக்கிய அரசன் கீர்த்திவர்மன் காலத்திய கல்வெட்டுகள் உள. பழைய கோயில். (38) அமர்கோல் ஷங்கர்லிங் கோயில். சளுக்கிய கட்டிடம். ஜக்கனுசாரியால் கட்டப்பட்டதென்பர். (39) அமின்பாவி இரண்டு சிவாலயங்கள், கார்மேஷ்வர் கோயில், மல்லிகார்ஜுனர் கோயில—இரண்டும் கருப்புக்கற்களால் கட்டப்பட்டவை. (40) அர்லேஷ்வர், கடம்பேஷ்வர் சிவாலயம். (41) அசுண்டி கல்மேஷ்வர் சிவாலயம். (42) பாவம்பீட் விஷபரிகாரேஷ்வர் கோயில்-சளுக்கிய கட்டிடம்.

**தாரகேஷ்வர்** :—கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டேஷன். வங்காளராஜதானி, கல்கத்தாவிலிருந்து 36 மைல்; ஹூக்ளி ஜில்லா, பெரிய சிவாலயம். சிவராத்ரியும், சைத்ரோத்சவமும் விசேஷம். இங்கு இரண்டு தர்மசாலைகள் இருக்கின்றன.

**தாரமங்கலம்** :—இதை தோரமங்கலம் என்று சிலர் அழைக்கின்றனர். ஓமலூர் தாலூகா, சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சேலத்திலிருந்து 16 மைல். இங்கு

2 கோயில்கள் இருக்கின்றன. (1) கைலாசநாதர் கோயில் (2) இளமீஸ்வரர் கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் இளமீசுரமுடையார் என்றிருக்கிறது. இது 1286-ம் வருஷத்திற்கு முற்பட்டகோயில். ராமநாதராசர் என்பவரால் முதலில் கட்டப்பட்டது. ஸ்வாமி மேற்கு பார்த்தது. சுமார் 300 வருடங்களுக்கு முன் கெட்டி முதலியார்களால் புதுப்பிக்கப்பட்டது. கைலாசநாதர் கோயில், மும்முடிக்கெட்டி முதலியாரால் ஆரம்பிக்கப்பட்டு, சியாளக்கெட்டி முதலியாரால் தொடரப்பட்டு, வணங்காமுடி கெட்டி முதலியாரால், வேலை முடிக்கப்பட்டது. இங்கு மும்முடிக்கெட்டி முதலியார்களுடையவுருவங்களும், அவர்களது மனைவிகளுருவங்களும் செதுக்கப்பட்டிருக்கிறது. கோயில் சரமல் ஆற்றங்கரையிலுள்ளது, முக்கிய உற்சவங்கள் இரண்டு, தை, வைகாசி மாதங்களில். பிரதான வாசலின் கதவுகளில் 120 இரும்பு பூண்கள் உள, அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியானது-கோயிலிலுள்ள ஒரு சில்பம் வாலிவதத்தைக் குறிக்கிறது; இதில் விசேஷமென்னவென்றால் வாலி உருவத்தினிடமிருந்து ஸ்ரீராமரை பார்க்கமுடியாது. ஸ்ரீராமருடைய உருவத்தினின்றும் வாலியைப் பார்க்கமுடியும்! கொடுங்கைகள் முதலிய இடங்களில் புலி, அனுமார் முதலிய உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன, பார்க்கத்தக்கவை.

**தாராசுரம்** :-தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, கோயில் தஞ்சாவூர் பிரஹதீஸ்வரர் கோயிலைப்போன்றது. விமானம் மிகவும் உன்னதமானது. அங்கிருப்பதுபோல் இங்கும்,முன் கோபுரம் சிறிதும் அகலமுமானது. விமானம் பெரியதும், உயரமுமானது. ஸ்வாமி ஐராவதேஸ்வரர். யமதீர்த்தம், யமன் சாபம் நீங்கிய தீர்த்தம், கோயிலின் முன் மண்டபத்தில் பல்லவ சிங்க ஸ்தம்பங்கள் இருக்கின்றன. உள் பிராகாரத்துக் கோபுரம் முற்றிலும் கருங்கல்லாலாயது. கோயில் மூன்றும் குலோத்துங்கன் (1178-1216) காலத்தில் புதுப்பிக்கப்பட்டதென்பர். கோயிலுக்கு முன் யமனுடைய சிலையிருக்கிறது. தென்மேற்கு மூலை மண்டபத்தில் சப்தமாத்ருக்கள் சிலைகளிருக்கின்றன. இக்கோயில் பூர்வகாலத்தில் ஸ்ரீரங்கத்தைப்போல் 7 பிராகாரங்களுடையதாயிருந்ததாம். இந்திரனுடைய யானையாகிய ஐராவதம் சாபம் நீங்கியபடியால்

ஐராவதேஸ்வரர் என்று ஸ்வாமிக்கு திருநாமம். குளம் 228 அடி சதுரம். இதற்கு காவிரியிலிருந்து ஒரு வாய்க்கால் வழியாக ஜலம் கிடைக்கிறது. யமனுடைய சாபம் நீங்க பரமசிவம் தனது சூலத்தையெறிந்து இக்குளத்தையுண்டாக்கியதாக ஐதீகம். இங்கு ஐராவதம், துர்வாசரால் கருப்பாகும்படி சபிக்கப்பட்டது, அந்நிறம நீங்கி, பழைய வெண்மைநிறம் பெற்றதாக ஸ்தலபுராணம். துவஜஸ்தம்பத்தின் அருகிலுள்ள விநாயகர் கோயிலின் மூன்று படிகளை முறையே தட்டினல் மூன்றுவிதமான ஸ்வரங்கள் பேசுகின்றன. இங்குள்ள அலங்கார மண்டபம் மிகவும் அழகிய சித்திர வேலைப்பாடுடையது. தெற்கு பிரகாரத்தில் சரஸ்வதி ஆலயமிருக்கிறது. வடமேற்கிலுள்ள வசந்த மண்டபம் அழகிய சில்பங்கள் அமைந்தது. அம்மன் கோயில், ஸ்வாமி கோயிலுக்கு வடக்கிலுள்ளது. இவ்விரண்டு கோயில்களையும் சுற்றி முற்காலம் பெரிய பிரகாரம் இருந்திருக்கவேண்டும். அம்மன் சந்நிதியிலுள்ள ஜன்னல்கள் பார்க்கத்தக்கவை. இங்குள்ள கல்வெட்டொன்றில் 1018-1022-ல் ஆண்ட ராஜராஜன் எனும் சோழ அரசன் பம்பாய் ராஜதானியிலிருந்து ஒரு விக்ரஹத்தைக் கொண்டுவந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கோயிலுக்கு பழைய பெயர் ராஜ ராஜேஸ்வரம் என்று ஒரு கல்வெட்டினல் அறிகிறோம். இப்பெயர் சுருக்கமாய் ராராசுரம் என்று செறுக்கப்பட்டிருக்கிறது. பிறகு ராராசுரம், தாராசுரம், என்ருயதென்பர். மெகென்ஜி (Mackenzi) கையேடுகளில் பழையகாலத்தில் இங்கு ரிஷப வாஹன உற்சவம் நடந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்கோயிலின் கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் வடக்குபக்கம் 63 நாயன்மார்களுடைய சரித்திரம் சில்பத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கோயிலிலுள்ள அர்த்தநாரீஸ்வரருக்கு 8 கைகளுண்டு. பெரிய உற்சவம் ஆவணிமாதம்.

**தாருகாபுரம்** :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். சிவலிங்கம் அப்புலிங்கம் எனப்படுகிறது.

**தாருகாவனம்** :—இங்கு ஒரு ஜோதிலிங்கம் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

**தால்குண்டா** :—மைசூர் ராஜ்யம், ஷிமோகா ஜில்லா, ஷிகார்பூர் தாலூகா, பிரணவேஸ்வரர் கோயில், பிரம்மாவி

னல் கட்டப்பட்டதென்பது ஐதீகம். இங்கு 5 முக்கிய லிங்கங்கள் உள; இவை பிரம்மா, இந்திரன், சந்திரன், யமன், அக்னியால் பூஜிக்கப்பட்டனவாம். கோயில் 450 வருடங்களுக்குமுன் இருந்ததென டார்டர் கிருஷ்ண எண்ணுகிறார். சசவாஹனன் எனும் அரசன் இங்கு பூசித்ததாக சொல்லப்படுகிறது. இந்த தாலகுண்டா சிவாலயம்தான் திராவிட சிலபமமைந்த ஆலயங்களில் மிகவும் பூர்வீகமானது என்று காலஞ்சென்ற நரசிம்மாசாரியார் எண்ணுகிறார்.

தாலகட்டா :—கிருஷ்ண ஜில்லா, சென்னை ராஜதானி, காளமேஸ்வரர் கோயில் 1231-ம் வருடம் கட்டப்பட்டது.

தானிப்பரம்பா :—மலையாளம், சென்னை ராஜதானி, கண்ணனூருக்கு 14 மைல் வடக்கு சிவாலயம். இங்குள்ள சிவலிங்கம், பார்வதி தேவியாரால் அயோத்தி அரசனுக்கு ஆதியில் கொடுக்கப்பட்டதென்பர். பரசுராமர் இக்கோயிலைப் புதுப்பித்ததாகச் சொல்லப்படுகிறது. இங்குள்ள கோபுரங்கள் மஹம்மதியர்களால் சிதைவுண்டன; ஸ்வாமி தாளிப்பரம்பா தம்பிரான், தேவி அன்னபூரணிதேவி.

தான்தன் :—மிட்னபூர் ஜில்லா, வங்காள ராஜதானி, பெங்கால்—நாக்பூர் ரெயில்வே ஸ்டேஷன் சிவாலயம். ஸ்வாமி - ஸ்யாமளேஸ்வர்—போஜராஜனல் இக்கோயில் கட்டப்பட்டதாம். கோயிலின் வாயிலில் நான்கு கால்களும் வெட்டப்பட்ட பெரிய நந்தியிருக்கிறது. இரண்டு தீர்த்தங்கள், வித்யாதர தீர்த்தம்-சசாங்க தீர்த்தம். இங்கு தர்ம சாலையுண்டு.

திங்களூர் :-வைப்புஸ்தலம். தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருப்பழனத்திற்கு ½ மைல், திருவையாறுக்கு 2 மைல். திருப்பழனக்கோயில்போல் கட்டப்பட்டது. செங்கல் கட்டடம், பாழடைந்திருக்கிறது. ஸ்வாமி விஷம்தீர்த்தநாதர், தேவி பூங்கோதை—காவிரி தீர்த்தம், அப்பூதி அடிகள் சரித்திர சம்பந்தமான ஸ்தலம்.

திட்டைக்குடி :—விருத்தாசலம் தாலுகா, தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி வைத்யநாதஸ்வாமி, தேவி அம்பிகை. இவ்வூருக்கு

வசிஷ்டகுடி என்று பெயர் இருந்ததாம். இங்குள்ள நடராஜருடைய சபை அழகியது.

**திண்டிவனம்** :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, இதன் சமஸ்கிருத பெயர் திண்திருணிவனம், புளிக்காடு எனப் பொருள்படும். சிவாலயம், ஸ்டேஷனுக்கு 1 பர்லாங்கிலுள்ளது. கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருத்திண்டீஸ்வரர் என்றிருக்கிறது; தேவி மரகதவல்லி. இங்குள்ள பல கல்வெட்டுகளில் ஒன்று 994-ம் வருடம் வெட்டப்பட்டதாம்; ஆகவே கோயில் 1000 வருடங்களுமுன் பட்டது. இங்கு சத்திரங்கள் உண்டு; முசாபர் பங்களாவும் உண்டு.

**திண்டுக்கல்** :—சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். காளத்தீஸ்வரர் கோயில்-கிரிசர். இங்கு இரண்டு பெரிய சத்திரங்கள் உண்டு; முசாபர் பங்களாவும் உண்டு.

**தித்தாண்டதாளம்** :—(?) தித்தாளம் என்றும் பெயருடையது. ராமநாதபுரம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் மிகவும் பழையது. பண்டித சோழராஜாவால் கட்டப்பட்டதென்பர். ஸ்வாமி ஸர்வதீர்த்தமுடையார்.

**திம்மலாபுரம்** :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இங்குள்ள கல்வெட்டொன்றால் கோயில் ராமப்பையர் என்பவரால் கட்டப்பட்டதாக அறிகிறோம். தற்காலம் பூஜையில்லை. இங்கு கோட்டைக்குள் மல்லிகார்ஜுனர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

**திமிலா** :-விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி நக்னேஸ்வரர் (நக்னம் = நிர்வாணம்) அதஸ்தியருக்கு ஸ்வாமி வஸ்திரமின்றி தரிசனம் அளித்ததாக ஐதிகம்.

**திராட்சாராமம்** :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, ராமச்சந்திரபுரத்திற்கு 5 மைல் தென்கிழக்கு, தட்சன் இங்கு யாகம் செய்ததாக ஐதிகம். ஆகவே இதற்கு

தட்ச தபோவனம் என்று பெயர் உண்டு. சிவாலயம்—லிங்கம் 12 அடி உயரம். இது ஆரிய பிரதிஷ்டை என்பர். இங்கு வியாசர் பிரதிஷ்டைசெய்த மற்றொரு லிங்கமுமுளது. ஸ்வாமி பீமேஸ்வரர், தேவி மாணிக்க அம்மாள். சப்தரிஷிகள் பூசித்த க்ஷேத்திரம். தீர்த்தம்-சப்த கோதாவரி, ருத்திர தீர்த்தம். ஆலயம் சோழக் கட்டிடம்; ஆயினும் சில சாளுக்கிய தூண்கள் உள. இவ்வூருக்கு தென்காசி என்றும் பெயர். கோயிலில் 1055-ம் வருடம் ஆண்ட ராஜராஜன் காலத்திய கல்வெட்டொன்றுளது.

**திரிசந்தி** :—வட இந்தியா சிவாலயம். நைமிசாரண்யத்திற்கருகிலுள்ளது. ஸ்வாமி திரியம்பகர், சுயம்புலிங்கம்.

**திரிசூலம்** :—சைதாப்பேட்டை தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி தர்மபுரீஸ்வரர். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருச்சுரமுடைய நாயனார் என்றிருக்கிறது.

**திரிபுவனம்** :—தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன், சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திருவிடைமருதூருக்கு அருகாமையிலுள்ளது. இங்கு சோழப் பிரம்மஹத்தி நீங்கின சோழன் ஸ்வாமியின் கட்டளையால் திரும்பிப்பார்த்த இடமாகையால் திரிபுவனம் என்று பெயர் வந்ததென்பர். கோயில் 12-ம் நூற்றாண்டில் மூன்றாவது குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது. இவரது பட்டப்பெயர் திரிபுவனவீர தேவர், அதனின்றும் திரிபுவனம் என்றும் வந்திருக்கலாம். ஸ்வாமி கம்ப ஹரேஸ்வரர், (நடுக்கத்தைத் தீர்த்தவர் என்று பொருள்படும்) தேவி அறம் வளர்த்த நாயகி. கர்ப்பக் கிரஹத்திற்குப் போவதற்கு மிகவும் நீண்டதான மண்டபத்தைக் கடந்து செல்லவேண்டும். இங்கு பரமசிவத்தின் சரபாவதாரத்திற்கு மூலவிக்ரஹமும், உற்சவ விக்ரஹமுமுண்டு. தர்மபுர ஆதீனத்திலடங்கியது. பங்குனி மாதம் பெரிய உற்சவம். தீர்த்தவாரி வீரசோழன் ஆற்றில் விசேஷம்.

**திருக்கட்டளி** :—தென் இந்தியா, திரு + கல் + தளி = கற்கோயில். புதுக்கோட்டைக்கு 2 மைல் கிழக்கு, சிவாலயம்.

திருச்சுழி :—ராம்நாத் ஜில்லா, தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி ஸ்ரீ தனநாதர், தேவி துணை மலையம்மன். கௌதமர், நந்திகேஸ்வரர், பூசித்த ஸ்தலம். கோயிலின் 8 திக்குகளிலும் 8 லிங்கங்கள் உள. பிரபலமான கோயில்—வருஷத்தில் 3 பிரம்ம உற்சவங்கள் உண்டு. சூலதீர்த்தம், பூமிதீர்த்தம், ஞானவாபி, திரிலோசன தீர்த்தம், முதலிய 9 தீர்த்தங்கள் உள. இங்கு அருகில் மற்றொரு சிவாலய முண்டு. ஸ்வாமி பெயர் சிவகாளேஸ்வரர்.

திருக்கோணமலை :—திரிகோண மலையெனவும் வழங்கப்படுகிறது. இலங்கைத் தீவில் கிழக்குக் கரையிலுள்ளது. சிவஸ்தலம். பழையகாலத்தில் இங்கிருந்த ஸ்வாமிக்கு கோணேசர் என்று பெயர். கி. பி. பத்தாம் நூற்றாண்டிற்குப்பின் சோழ அரசர்கள் இங்கு ஒரு பெரிய சிவாலயத்தைக் கட்டிவைத்தனர். அதற்கு முன்பு இங்கிருந்த புராதன சுயம்புலிங்கம் அந்தர்த்தானமானதாக சரித்திர வரலாறு. திருஞான சம்பந்தர் இந்த ஸ்தலத்தைப்பற்றி பாடியுளார். ஆகவே சிவாலயம் கி. பி. 650 வருஷத்திற்கு முந்தி யிருந்திருக்கவேண்டும். லிங்கம் ராவணேஸ்வரனால் கைலையிலிருந்து கொண்டுவரப்பட்டது என்பது புராண வரலாறு. பூகைலாஸ் என்னும் கதையைப்போன்ற கதை; திருமால் பிராம்மண வடிவத்துடன் ராவணனை வஞ்சித்து அந்த லிங்கத்தைப் பெற்று இங்கு அதைப் பிரதிஷ்டை செய்ததாக வரலாறு. 17-ம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களால் இக்கோயில் பாழாக்கப்பட்டது. அக்கோயிலில் 7 நிலைகளுடைய கோபுரம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தற்காலம் ஸ்வாமிமலை எனும் பிரடரிக் கோட்டைக்குள் மலைச்சரிவில் ஒரு முக்கோணமான மாளிகையில் கோணேசலிங்கம் இருக்கிறது. இதற்கு நேராயுள்ள மலையிலிருந்தே இப்பொழுது சோம சுக்கிரவாரங்களில் இதற்கு பூஜை நடக்கிறது. இந்திரன் பூஜித்த ஸ்தலம். இதற்கு தட்சிண கைலாசம் என்று பெயர் உண்டு. ஸ்வாமி கோணேசர் தேவி மாதுமையாள் அம்மை. கௌரி தீர்த்தம், வாயுவினால் பறித்துத் தள்ளப்பட்ட மேருவின் மூன்று சிகரங்களுள் இது ஒன்றும். (மற்ற இரண்டு திருக்காளத்தி, திருச்சிராமலை). இதற்கு 10 மைல் தூரத்தில் **தம்பிலகாமம்** எனும் இடத்தில் சிவாலயமுண்டு.

திருச்சாற்றுறை :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, உடையவனேஸ்வரர் கோயில்.

திருச்சானூர் :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி. இது சிறுத்தானூர் என்றும் வழங்கப்படுகிறது. சிவாலயம் ஊரின் மேற்குபாகம் உள்ளது. இப்பாகத்திற்கு போகிமங்கலம் என்று பெயர். ஸ்வாமி பெயர் திப்பலா தீஸ்வரமுடைய மஹாதேவர் என்று கல்வெட்டுகளில் இருக் கிறது. தற்காலம் ஸ்வாமி பெயர் பராசரேஸ்வரர் என்று வழங்கப்படுகிறது. இவ்வூருக்கு கல்வெட்டுகளில் பழைய பெயர் திருச்சோகினூர் என்றிருக்கிறது. பழைய கோயில்; சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்டது.

திருச்சுனை :—கருங்காலக்குடி என்றும் பெயர் உளது. மதுரை ஜில்லா, மேலூர் தாலூகா, சென்னை ராஜதானி, மேலூருக்கு 8 மைல். சிவாலயம் ஒருசிறு குன்றின்மீதுளது. ஸ்வாமி அகஸ்தீஸ்வரர்.

திருச்சூர் :—கொச்சி தேசத்தின் தலைநகர். சிவாலயம் மலையாள தேசத்திலுள்ள சிவாலயங்களுக்குள் மிகவும் பிரபலமானது. விசாலமான கோபுரங்களுடையது. இங்கு கூத்தம்பலம் எனும் சபாமண்டபம் உளது, பெரும்பாலும் மரத்தாலாயது—வடக்குநாதர் கோயில். ஸ்வாமி வடக்கு நாதர், தேவி பார்வதி, பரசுராமர் பூசித்த ஸ்தலம். பெரிய உற்சவம் சித்திரை மாதம். சிவராத்திரி மிகவும் விசேஷம். கேரள தேசத்தில் இதுதான் மிகவும் புராதனமான கோயில். இங்கு முசாபர் பங்களா உண்டு.

திருத்தணிகை :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி, ரெயில் ஸ்டேஷன். வீரட்டானேஸ்வரர் ஆலயம். ரெயில் ஸ்டேஷனுக்கு அருகாமையில் கிழக்கிலுள்ளது. கோயில் 9-ம் நூற்றாண்டின் கடைசியில் பல்லவ அரசன் அபராஜித் என்பவர் காலத்தில் இருந்த நம்பிஅப்பி என் பவரால் கட்டப்பட்டது. பல்லவ சிற்பமமைந்தது. விமானம் 4½ கஜம் சதுரம்; கர்ப்பக்கிரஹம் சதுரம்; மேல்பாகம் கஜப்பிருஷ்ட ஆகிருதி; கிழக்குபார்த்தது; ஜன்னல்கள் இல்லை; போதிக்கட்டைகள் வளைவு உடையன. லிங்கத்தின்

பின்புறம் சோமாஸ்கந்தமூர்த்தி செதுக்கப்பட்டிருக்கிறது. கோயில் முழுவதும் கருங்கற் கட்டிடம்.

**திருத்துருத்தி** :—மாயவரத்தருகிலுள்ளது. தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**திருத்தான் தோன்றீசம்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயவரத்துக் கருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி சுயம்புநாதர், சப்தமாத்ருக்களி லொருத்தியாகிய பிராமி பூசித்த ஸ்தலம்.

**திருத்துறைபூண்டி** :—திருத்தருபூண்டி சரியான பெயர். சென்னை ராஜதானி, (தரு=விருட்சம்) இதற்கு மற்றொரு பெயர் வில்வவனம் (திரு) சிவாலயம். ரெயில் ஸ்டேஷன். தேவி கமலாம்பாள், ஸ்வாமி வில்வவனேசர்.

**திருந்து தேவன்குடி** :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருவிடைமருதூருக்கு 4 மைல் வடமேற்கு. ஊர் அழிந்துவிட்டது, கோயில்மாத்திரம் இருக்கிறது. சிவாலயம், ஸ்வாமி கர்க்கடேஸ்வரர், தேவி அருமருந்தம்மை; பங்கய தீர்த்தம். கோயிலைச்சுற்றி ஒரு தடாகம் உண்டு. நண்டு பூசித்து முத்தியடைந்த க்ஷேத்திரம் (கர்க்கடகம்=நண்டு) லிங்கத்தின் உச்சியில் நண்டு உருவம் காணப்பெறும்; திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது. குதிரை பூசித்து முத்தி பெற்ற ஸ்தலம்.

**திருநக்கரா** :—இது திருணகரா எனவும் அழைக்கப் படுகிறது. திருவாங்கூர் ரா்ஜ்யம், சிவாலயம்.

**திருநின்றவூர்** :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, லட்சுமிபுரீஸ்வரர் கோயில்.

**திருப்பத்தூர்** :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி காளத்தீஸ்வரர்.

**திருப்பத்தூர்** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, முசிறி தாலூகா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி கைலாசநாதர், புலிபாச்சி தீர்த்தம். பங்குனிமாதம் சூரியபூஜை. இங்கு கருங்கல்லாலாகிய ரதம் உண்டு.

**திருப்பத்தூர்** :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜ தானி, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி பிரம்மேஸ்வரர், தேவி பிரஹந்நாயகி, பிரம்மோற்சவம் பங்குனி மாதம். பிரம்மா பூஜித்த ஸ்தலம், ஆகவே இதற்கு பிரம்ம புரி என்றும் பெயர் உளது.

**திருப்பத்தூர்** :—லால்குடி தாலூகா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, பிட்சாண்டார் கோயிலி லிருந்து 12 மைல். கோயில் பல்லவ கட்டிடம். ஸ்வாமி திருத்தளிநாதஸ்வாமி.

**திருப்பதி** :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, கபிலேஸ்வர் கோயில், கபில தீர்த்தம். மலையின் கீழ்பாகம் கோயில். இது ராயன் ராஜேந்திர சோழன் அல்லது பிரம்மராயன் முனயதரயன் என்பவரால் கட்டப்பட்டது. திருப்பதிக்கு 1½ மைல் தூரம். கோயிலில் 1013—1045-ம் வருடத்தில் ஆண்ட ராஜேந்திர சோழன் காலத்திய கல் வெட்டொன்றுளது. கபில தீர்த்தம் தற்காலத்தில் ஆழ்வார் தீர்த்தம் அல்லது சங்கு தீர்த்தம் என வழங்கப்படுகிறது. சிவதீர்த்தமாயிருந்தது, 1531-ம் வருடம் விஜயநகரத்தரசர் ஒருவரால் வைஷ்ணவ தீர்த்தமாக மாற்றப்பட்டது. கல் வெட்டுகளில் ஸ்வாமி பெயர் கபிலேஸ்வரமுடைய நாயனர் என்றிருக்கிறது. திருப்பதி மேலைமலைக் கோயிலும் ஆதியில் சிவாலயமாயிருந்ததென்பர். ஸ்டூவர்ட் என்பவர் எழுதிய டிஸ்டிரிக்ட் மான்யுவல் புஸ்தகத்தில் ஆதியில் இக்கோயில் சைவகோயிலாயிருந்ததெனக் கூறியிருக்கிறார். ராமானுஜர் இதை வைஷ்ணவ ஆலயமாக மாற்றியதாக எண்ணக் காரணங்கள் உள. பூர்வீக சிவாலயம் தொண்டைமான் சக்ர வர்த்தியால் கட்டப்பட்டதென்பர். மூல விக்ரஹத்திற்கு ஜடையும், சர்ப்பாபரணமும் நெற்றிக்கண்ணும் உண்டு. தற்காலமிருக்கும் சங்கு சக்கிரங்கள் தொடுப்புகள் என்பர்.

**திருப்பரப்பு** :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

**திருப்பறையாறு** :—திருவாங்கூர் ராஜ்யத்தில் வடக்கு பாகத்திலுள்ளது, சிவாலயம்.

**திருப்புடைமருதூர்** :—சென்னை ராஜதானி, திருநெல் வேலி ஜில்லா. சிவாலயம், ஸ்வாமி புடார்ச்சுன புரேஸ்வரர்,

நாறும்பூநாதர், தேவி மங்கைநாயகி, கோமதி; தாம்ரபர்ணி தீர்த்தம், லிங்கம் சாய்ந்திருக்கிறது. தைமாதம் பிரம்மோற்சவம்; தைப்பூசம் விசேஷம்.

திருப்புத்தூர் :—சென்னை ராஜதானி, ஜோலார்பேட்டைக்கு 5 மைல்; ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம், ஸ்வாமி புற்றீசர், தேவி நாகம்பாள்.

திருப்பூர் :-சென்னை ராஜதானி, கோயமுத்தூர் ஜில்லா, அவிநாசிக்கு 9 மைல், சிவாலயம்-ரெயில் ஸ்டேஷன்.

திருப்பூர் :—புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம். இங்கு முசாபர் பங்களா உண்டு.

திருப்பேர் :—பொன்னேரி தாலூகா, சென்னை ராஜதானி, ஸ்ரீ வரமூர்த்தி ஈஸ்வரர் கோயில்.

திருமலை :—திருவாங்கூர் ராஜ்யம், கோசக்கோடே சிவாலயம்.

திருமுக்கூடல் :—செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். இங்கு ஸ்வாமி பாணினிக்கு வியாகர்ணம் கற்பித்ததாக ஐதீகம்.

திருவங்கர தேசம் :—கொச்சி ராஜ்யம், சிவாலயம்.

திருவடிகுலம் :-செங்கல்பட்டுக் கருகிலுள்ளது. சென்னை ராஜதானி, சிவாலயம் மிகவும் பழையது. குறும்பர் காலத்திலிருந்து பூசிக்கப்பட்டதென்பர்.

திருவடிக்கிராமம் :—கூடலூர் தாலூகா, சென்னை ராஜதானி, தென் ஆற்காடு ஜில்லா, சிவாலயம், ஸ்வாமி வீரட்டானேஸ்வரர்.

திருவரங்குளம் :—புதுக்கோட்டை சமஸ்தானம், சிவாலயம். திரு ஆரூர் கோயில் முறைகளெல்லாம் இங்கு அனுசரிக்கப்படுகின்றன. ஸ்வாமி ஹரி தீண்டேஸ்வரர்(?) ஹரி தீர்த்தம்.

திருவள்ளூர் :—மேல்படி தாலூகா, ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன், சிவாலயம் பெரிய

குளக்கரையின் ஒரு பக்கம் உளது. ஸ்வாமி தீர்த்தீஸ்வரர் திரு + எவ்வளூர் = திருவள்ளூர் என்றாயது. பண்டிட் நடேச சாஸ்திரியார் அவர்கள், இங்குள்ள பெரியகுளம் ஆதியில் இச்சிவன் கோயிலைச் சார்ந்ததென்பர்.

திருவாங்கோடு:—ஸ்ரீ + வாழும் + கோடு, பத்மநாபபுரம் பிரிவு. திருவாங்கூர் ராஜ்யம். முற்காலத்தில் இது சில காலம் ராஜதானியாயிருந்தது. இங்கு ஒரு பழைய சிவாலய முளது.

திருவாசி :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜ தானி, ஸ்ரீரங்கத்தின் அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி சர்மிவனேஸ்வரர்.

திருவிசை நல்லூர் :-கும்பகோணம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம், ஸ்வாமி சிவ யோகநாதஸ்வாமி.

திருவிழாய் :—திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்.

திருவேத்தூர் :-திரு + வேத + ஊர்-வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம், ஸ்வாமி வேதபுரீஸ்வரர். செய்யாறுக்கு வடக்கரையிலுள்ளது, திருஞான சம்பந்தர் சமணர்களை வென்ற இடம். கருங்கல்லாலாகியமரம் ஒன்று இங்குண்டு; 8 அடி உயரம்.

திருவக்கோடு :—மைசூர் ராஜ்யம், சிவசமுத்திரத்திற் கருகிலுள்ள சிவாலயம். ஸ்வாமி பிரம்மேசர், தேவி கம லாம்பாள், அஸ்வத்த விருட்சம், பிரம்மா பூசித்த ஸ்தலம். கபில நதி காவிரியில் சங்கமமாகுமிடம்.

திரூர் :—மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவா லயம். இதற்குத் திருக்கண்டியூர் கோயில் என்று பெயர். பரசுராமரால் கட்டப்பட்டதென்பது ஐதீகம். இங்கு முசா பர் பங்களா உண்டு.

தில்லி :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன், இந்தியா வின் பிரதான பட்டணம். இங்கு இராணி தோட்டம் எனும் இடத்தில் ஒரு சிவாலயமுண்டு. ஸ்டேஷனுக்கு ½ மைலில் ஒரு தர்மசாலையுளது.

**தில்லைவிளாகம்** :-தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் ஸ்டேஷனுக்கு 2½ மைலில் கோயில். இங்கு சுமார் 50 வருடங்களுக்குமுன் அழகிய நடேசர் விக்ரஹமும் வயலில் கண்டெடுக்கப்பட்டது; இதற்கு தற்காலம் ஒரு சிவாலயம் கட்டப்பட்டிருக்கிறது.

**திலதைப்பதி** :—(திரு) இதற்கு மதிமுத்தம் எனும் பெயர் உண்டு. பேரளம் ஸ்டேஷனிலிருந்து 3 மைல், பூந்தோட்டத்திற்கு 1 மைல் மேற்கு, சென்னை ராஜதானி. சந்திரன் பூசித்த ஸ்தலம். மதிமுத்தம் என்பது, ராம லட்சுமணர்கள் தசரதருக்கு திலதர்ப்பணம் செய்தபடியால் திலதைப்பதி என்றாயதென்பர். இங்கு பிதுர்களுக்கு தர்ப்பணம் விசேஷம். ஸ்வாமி முத்தீஸ்வரர், மதிமுக்த நாதேஸ்வரர், தேவி பொற்கொடியம்மை. சந்திர தீர்த்தம்.

**திலிவள்ளி** :—தார்வார் ஜில்லா, சாந்தேஸ்வரர் கோயில், சிவாலயம் கிராமத்தின் மத்தியிலுள்ளது. சளுக்கிய சில்பம்.

**திலாஸ்மா** :—ராஜபுதனத்திலுள்ளது. சிவாலயம், மெய் சர்வேஷ்வர், 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.

**தியோகர்** :—(தேவகிரஹம் ?) வட இந்தியா, சிவாலயம் இங்குள்ள தட்சிணாமூர்த்தி அழகியது.

**தின்னனூர்** :-திருநின்றவூர், சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். இங்கு பழைய சிவாலயம் ஒன்றுளது. சோழக் கட்டிடம்; கஜப்பிருஷ்ட ஆகிருதி. சமீபகாலத்தில் புதுப்பிக்கப்பட்டது, சில கல்வெட்டுகள் உள. ஸ்வாமி ஹிருதயாலீஸ்வரர், தேவி மரகதவல்லியம்மன், சித்திரை மாதம் விருஷபவாஹன உற்சவமும், அதிகார நந்தி சேவையும் மாத்திரம் தற்காலம் நடக்கின்றது.

**தினரை** :—பாலக்காடு தாலுகா, மலபார் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**தினைநகர்** :-(திரு) தீர்த்தநகர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, ஆலம்பாக்கம் ஸ்டேஷனுக்கு 6 மைல் தென்மேற்கு, பரங்கிப்பேட்டை ஸ்டேஷனிலிருந்து

7 மைல். மறை முனிவர் பூசித்த ஸ்தலம். சிவாலயம், ஒரு பஞ்சம பக்தன் அருள்பெற்ற ஸ்தலம். ஸ்வாமி திருந்தீஸ்வரர், தேவி ஒப்பிலா நாயகி; திருந்து தீர்த்தம்—சாம்பவ தடாகம், மணிமுத்தா நதி, ஸ்வாமி பள்ளனுகிய பக்தனுக்காக தினைவிளைத்து பழுக்கும்படிச் செய்தபடியால் தினை நகர் எனப் பெயர் பெற்றது. சுந்தரர் பாடல் பெற்றது. கோயில் சிறியது. ஸ்வாமிக்கு சிறந்த நிவேதனம் தினையமுது.

தீப்தா :—வட இந்தியா, மஹாதேவர் கோயில், சுயம்பு லிங்கம்.

தீர்த்தநகரி :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, கடலூர் தாலூகா, சிவாலயம், சிவன்குரேஸ்வரர் கோயில், தீர்த்தகுளம்.

தீர்த்தஹல்லி :—மைசூர் ராஜ்யம், ஷிமோகா ஜில்லா, ஷிமோகா ரெயில் ஸ்டேஷனுக்கு 30 மைல். சங்கமேஷ்வர் கோயில். இங்கு சத்திரமுண்டு.

துடியலூர் :—கோயமுத்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம். ஸ்வாமி விருந்தீஸ்வரர்.

தும்கூர் :—மைசூர் ராஜ்யம் ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

துருவெகெரே :—திப்பூர் தாலூகா, தும்கூர் ஜில்லா, மைசூர் ராஜ்யம். இங்குள்ள கோயிலுக்கு கெவிகெங்காதரீஸ்வரர் கோயில் என்று பெயர். இங்குள்ள நந்தி பெரியது. சோமநாதரால் கட்டப்பட்டது.

துவாரகை :-வட இந்தியா, இங்கு ஒரு சிவாலயம் உண்டு. இதற்கருகில் இந்துசாகர சங்கமம் எனும் இடத்திலும் ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி சங்கமேஸ்வரர்.

துறையூர் :-திருச்சிராப்பள்ளி ஜில்லா, முசிறி தாலூகா, சென்னை ராஜதானி. இங்கு இரண்டு கோயில்கள் உள. நந்திகேஸ்வரஸ்வாமி கோயில், காசிவிஸ்வநாதஸ்வாமி கோயில்.

துறையூர் :—சென்னை ராஜதானி, விழுப்புரத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி சட்டநாதீஸ்வரர் அல்லது சோமநாதீஸ்வரர்.

**துறையூர்** :—(திரு) திருத்தரூர், திருந்தலூர் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, விரிஞ்சிபாக்கம் ஸ்டேஷனுக்கு 2 மைல் மேற்கு. பண்ணுருட்டி ஸ்டேஷனுக்கு 5 மைல் வடமேற்கு; சுந்தரமூர்த்திக்கு பரமசிவம் திருவடி சூட்டி குருவாயுபதேசம் செய்த க்ஷேத்திரம். நாரதமுனி பூசித்த ஸ்தலம். சிவஞான சித்தியார் இயற்றிய அருணந்தி சிவாசாரியார் அவதரித்து முத்திபெற்ற ஸ்தலம். சிவாலயம்—ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி பூங்கோதை நாயகி; பெண்ணை நதி—சுந்தரர் பாடல் பெற்றது.

**தூத்துக்குடி** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன்—சிவாலயம். ஸ்வாமி சங்கர ராமேஸ்வரர்.

**தூர்வாசபுரம்** :—திருமெய்யம் தாலூகா, புதுக்கோட்டை சமஸ்தானம், சென்னை ராஜதானி, சிவாலயம். லிங்கம் தூர்வாசரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பது ஐதீகம். இங்குள்ள பைரவர் சந்நிதி விசேஷம்; இவருக்கு உப்பில்லாமல் வடை சாற்றுகிறது விசேஷம்.

**தூர்வாசநல்லூர்** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, திருநெல்வேலிக்கு 15 மைல். ஸ்வாமி காளத்தீசர், தேவி பூங்கோதை. காளதீர்த்தம்-தூர்வாசர் பூசித்தது.

தெக்கலகோடா :-பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி, அமரேஸ்வரர் கோயில்; மிகவும் சிலமாயிருக்கிறது; ஒரு கல்வெட்டினால் 1511-ம் வருடம் இது கட்டப்பட்டதென அறிகிறோம். கோயில் மண்ணால் மூடப்பட்டிருக்கிறது பெரும்பாலும்.

தெங்கூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, திருநெல்லிக்கா ஸ்டேஷனுக்கு 2 மைல் தென்மேற்கு. நவக்கிரஹங்கள் பூசித்த க்ஷேத்திரம். கோயில் பிராகாரத்தில் 9 லிங்கங்கள் இருக்கின்றன. ஸ்வாமி வெள்ளிமலைநாதேஸ்வரர், தேவி பெரியநாயகியம்மை. சிவகங்கை தீர்த்தம்—திருஞான சம்பந்தர்பாடல் பெற்றது.

**தேண்டலூரு** :—எல்லூர் தாலூகா, கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சோமேஸ்வரர் சிவாலயம். இவ்வூருக்கு ஆதிகாலத்தில் வெண்டலூரு என்று பெயர் இருந்ததாக துப்றெயில் துரை நினைக்கிறார்.

**தேத்தி** :—தென் இந்தியா, சென்னை ராஜதானி, நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி அக்னீஸ்வரர்.

**தேமுனிகுரப்பா** :—பார்வதிபுரம் தாலூகா, விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி, ஸ்ரீ சோமேஸ்வரர் கோயில்.

**தேள்ளாறு** :-வந்தவாசி தாலூகா, வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம், ஸ்வாமி மூலேஸ்வரர்.

**தேள்ளூர்** :—வேலூர் தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**தேளிச்சேரி** :-(திரு) கோயிற்பத்து எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, பொறையார் ஸ்டேஷனுக்கு 1 மைல் வடமேற்கு. சிவாலயம், ஸ்வாமி பார்வதீஸ்வரர், தேவி சத்தியாம்பாள். சத்தி தீர்த்தம். பார்வதி தேவி தவஞ்செய்த ஸ்தலம். அர்ஜுனனுடன் சண்டையிட்டு பரமசிவம் வில்லடி பட்ட ஸ்தலம் என்றும் சொல்லுவர். திருஞான சம்பந்தர் புத்த நந்தியை வென்ற ஸ்தலம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. ஸ்வாமிக்கு பங்குனி மாதம் 3-ம் தேதி முதல் 10 நாள் சூர்யாபிஷேகம்.

**தேன்கரை** :-நிலக்கோட்டை தாலூகா, மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, சோழவந்தான் ஸ்டேஷன் அருகிலுள்ளது. சிவாலயம், இதற்கு ஆதிச்சிதம்பரம் என்றும், வில்வாரண்ய க்ஷேத்திரம் என்றும் பெயர்—ஸ்வாமி ஸ்ரீ மூலநாதர். தேவி அகிலாண்டேஸ்வரி. கோயில் வைகைக்கு அக்கரையிலுள்ளது.

**தேன்கரைக் கோட்டை** :—சேலம் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் சிலமாயிருக்கிறது.

**தென்காசி**:—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, ரெயில் ஸ்டேஷன். சிவாலயம், ஸ்வாமி விஸ்வநாதர், தேவி அன்னபூரணி; சுந்தரேஸ்வரர், லோகநாயகி. பெரிய கோயில், கோபுரம் 9 நிலையுடையது; சுமார் 100 வருடங்களுக்கு முன் தீப்பற்றி நடுவெல்லாம் அழிந்துபோயிருக்கிறது. இங்குள்ள பெரிய மண்டபத்தில், வீரபத்திரர், அகோர வீரபத்திரர், மன்மதன், ரதி, 2 நடனமாதர், நடராஜர், கிருஷ்ணன், பைரவர், பிரதோஷ நடராஜர், சட்டநாதர், தர்மராஜன், கர்ணன், காளி, ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி, முதலிய சிலைகள் பார்க்கத் தக்கவை. இவை 16-ம் நூற்றாண்டிய சில்பங்களென்று புரொபசர் ஹிராஸ் எண்ணுகிறார். கோயில் காசி பராக்கிரம பாண்டியனால், 1446-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டு, அரிகேசரி பராக்கிரம பாண்டியனால் 1463-ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. இங்கு லட்சுமி கணபதி, சிலையுண்டு. பிரம்மோற்சவம் மாசிமாதம்.

**தென்கரையூர்** :-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, திரு ஆரூருக்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஜட்டி முதலியார்களால் கட்டப்பட்டது. வானிநதியின் தென்கரையிலுள்ளபடியால் தென்கரை எனப் பெயர்பெற்றது.

**தென்காட்டூர்** :—(தேலூர் எனவும் வழங்கப்படுகிறது ?) தென் இந்தியா, சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி தேவகிவிநாதேஸ்வரர், தேவி மதுரபாஷிணியம்மை. பிரஹஸ்பதி தீர்த்தம், வாழை விருட்சம், பிரஹஸ்பதி பூசித்த க்ஷேத்திரம்.

**தென்குடித்திட்டை** :—(திரு) இதுவே திட்டை யென்பதாம். தஞ்சாவூர் ஜில்லா; தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்-சிவாலயம். கௌதமர், ஆதிசேஷன், காமதேனு பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி உலகநாயகியம்மை. சக்கர தீர்த்தம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

**தென்மலை** :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-ஆகாயலிங்கம்.

**தென்வாடானை** :-சென்னை ராஜதானி, ராமநாத் ஜில்லா, ராமநாதபுரம் ஸ்டேஷனுக்கு 22 மைல். சிவாலயம், ஸ்வாமி ஆதிரத்னேஸ்வரர், தேவி அபயவல்லி.

தென்னிலை :—கோயமுத்தூர் ஜில்லா, கரூர் தாலூகா, சென்னை ராஜதானி, பழைய சிவாலயம்.

தென்னேரி :—காஞ்சீபுரம் தாலூகா, செங்கல்பட்டு ஜில்லா, சென்னை ராஜதானி, வாலாஜாபாத் ரெயில் ஸ்டேஷனுக்கு 5 மைல் வடக்கு. சிவாலயம், ஸ்வாமி ஆபத்சகாயேஸ்வரர்; கோயிலில் கல்வெட்டுகள் உள; அவைகளில் ஸ்வாமி பெயர் திருவகந்தீசுரமுடையார் என்றிருக்கிறது. இங்கு இன்னொரு சிவாலயமுண்டு அதற்கு காந்தளீஸ்வரர் எனப்பெயர். ஆலயம் சிலமாயிருக்கிறது. இதன் கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் உத்தம சோழ ஈஸ்வரமுடையார் என்றிருக்கிறது.

தெனுலி :—கிருஷ்ணு ஜில்லா; சென்னை ராஜதானி, ராமலிங்கேஸ்வரஸ்வாமி கோயில.

தேவக்கோட்டை :—ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி. புதிய தேவாலயம்; நாட்டுக்கோட்டை செட்டிமார்களால் கட்டப்பட்டது.

தேவதாருவனம் :—வட இந்தியா, நைமிசாரணயத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம், ஸ்வாமி தண்டீசர், தேவி உமாதேவி.

தேவகிரஹம் :—(தியோகர்) கிழக்கு இந்தியா ரெயில் ஸ்டெஷன். சாந்தாள் பர்கணுவில் இருக்கிறது. இங்கு 22 சிவாலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் மிகவும் பழமையானது 'வைத்யநாத்' கோயிலாம். வடக்கு இந்தியாவிலுள்ள 12 முக்கிய லிங்கங்களில் இது ஒன்றாகும். சிவராத்ரி விசேஷம். ஸ்டேஷனுக்கு ½ மைல் தூரத்தில் 2 சத்திரங்களுண்டு.

தேவிகபுரம் :—ஆரணி தாலூகா, வட ஆற்காடு ஜில்லா, தென் இந்தியா, போளூர் ஸ்டேஷனுக்கு 9 மைல். சிவாலயம், கனாகிரி என்னும் மலையிலுள்ளது. மலை சமுத்திர மட்டத்திற்கு 400 அடி உயரம். ஸ்வாமி கனாகிரீஸ்வரர், தேவி பிரஹதாம்பாள், சுயம்புலிங்கம், பார்வதி பூசித்த

ஸ்தலம். கோயிலில் பல கல்வெட்டுகள் உள. கோயில் காடுவெட்டிய சோழனால் கட்டப்பட்டதாம். மலை அடிவாரத்தில் திருக்காமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுளது, சிறு கோயில். சோழ அரசன்மலை உச்சிக்குச் சென்று பூசித்துத் திரும்புமுன் கல்தச்சர்களால் கட்டப்பட்டதென்பர். கோயில் 20×11 அடி விஸ்தீரணம். ஒன்பதே கற்களாலாயது.

தேவி பட்டினம்:-இதற்கு நவபாஷாணம் என்றும் பெயர். ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் கடற்கரையிலுள்ளது. ஸ்வாமி திலகேஸ்வரர். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் போகீஸ்வரமுடைய நாயனார் என்றிருக்கிறது. தேவி மகிஷாசுர மர்த்தனி.

தேனீமலை :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

தையூர் :—சென்னை ராஜதானி, சிவாலயம், ஸ்வாமி குந்தேஸ்வரர், தேவி மரகதவல்லி. சந்திர புஷ்கரணி தீர்த்தம்.

தொட்டிக்கலை :—சென்னை ராஜதானி, ஆவடி ஸ்டேஷனுக்கருகிலுள்ளது; சிவாலயம், ஸ்வாமி சிதம்பரேசர், தேவி சிவகாமியம்பாள். சிவகங்கை தீர்த்தம். இவ்வூருக்கு கலைசையென்றும், கோவிந்த புரம் என்றும் பெயர்களுண்டு. பழய கோயில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. விநாயகருக்கு செங்கழுநீர்விநாயகர் என்று பெயர். இங்கு தியேகேசர் சந்நிதியுண்டு; தியாகருக்கு கவசத்தியாகர் என்று பெயர். இங்கு திருவொற்றியூரிலிருப்பதுபோல் நந்தியோடையுண்டு. பிரம்மா பூசித்து அமிர்த கலசம் பெற்ற ஸ்தலம்.

தௌலேஷ்வரம் :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, இங்கு 108 சிவாலயங்கள் பூமியின்கீழ் மறைந்திருப்பதாக ஐதீகம். கோதாவரி ஸ்டேஷனிலிருந்து 4 மைல். பெயர்பெற்ற ஸ்நான கட்டம், கோடிலிங்க ஸ்நான கட்டம் என்று பெயர். கோடிலிங்கங்கள் நதியின் கீழிருப்பதாக ஐதீகம். இங்கு அருகில் நாளம்வாரி தர்ம சத்திரம் ஒன்று உண்டு.

**தொண்டமநாடு** :-சென்னை ராஜதானி, காளஹஸ்திக்கு அருகிலுள்ள கிராமம். சித்தூர் ஜில்லா, சிவாலயம். கல்வெட்டுள்ளது.

**தொட்டகட்டவல்லி** :-மைசூர் ராஜ்யம், ஹசான் ஸ்டேஷனுக்கு 2 மைல் வடகிழக்கு. இங்குள்ள லட்சுமி கோயிலில், ஒரு சந்நிதியில் லிங்கப் பிரதிஷ்டையுளது. ஸ்வாமிக்கு பூதநடனர் (பூதநாதர்?) என்று பெயர். கோயிலைக்கட்டிய சில்பி மல்லோஜமணியோஜர்.

**தோகூர்** :—சென்னை ராஜதானி, திருச்சிராப்பள்ளி ஜில்லா, சிவாலயம்.

**நக்தா** :—வட இந்தியா, உதயகிரி ராஜ்யம், சிவாலயம் மிகச்சிறியது. ஸ்வாமி மஹாதேவர்.

**நகரி** :—சித்தூர் ஜில்லா, சென்னை ராஜதானி, அரக்கோணத்திலிருந்து 8 மைல் தூரம். ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்தில் சிவாலயம், ஸ்வாமி விஸ்வேஸ்வரர்; கோயில் கௌதம ரிஷியால் கட்டப்பட்டதென்பர். கோயிலுக்கு புக்கா கோயில் என்று பெயர். ஆலயத்தில் பரமசிவத்தின் விக்ரஹமும், விஷ்ணுவின் விக்ரஹமும் அக்கம் பக்கமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. கோயிலின் அருகில் பிரயாணிகளுக்கு வசதிகள் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. இங்கு அருகிலுள்ள பஞ்சகங்கை நீர் வீழ்ச்சி பார்க்கத் தக்கது.

**நகரி** :—வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி கர்க்கடேஸ்வரர். இங்கு பார்வதி மண்டபத்தில் 13 கோயில்களுடைய ஸ்வாமிகள் வருஷத்திற்கு ஒருமுறை சந்திக்கின்றன.

**நங்கைப்புரம்** :—நங்கவரம் எனவும் வழங்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் சோழக்கட்டிடம். அரிஞ்சிகை எனும் சோழ அரச குமாரத்தியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது. கோயிலில் ஜேஷ்டாதேவியின் விக்ரஹம் உளது. கல்வெட்டுகளில்

ஸ்வாமியின் பெயர் மரவனீஸ்வரர் என்றிருக்கிறது. ஸ்வாமி சுந்தரேஸ்வரர், 'தேவி கோமளேஸ்வரி.

**நஞ்சன்கோடு** :—நஞ்சுண்டவர் + கோடு = நஞ்சன்கோடு. மைசூர் ராஜ்யம். மைசூரிலிருந்து 16 மைல் தெற்கு. சிவாலயம், ஸ்வாமி நஞ்சுண்டேஸ்வரர், ஸ்ரீ கண்டேஸ்வரர், தேவி கிரிஜா. கபில தீர்த்தம். கோயில் 385 அடி நீளம். 160 அடி அகலம். கோயிலில் 147 ஸ்தம்பங்கள் உள. இங்குள்ள சில்பங்கள் அழகியவை. மைசூர் சமஸ்தானத்திலிருந்து இக்கோயிலுக்கு வருடம் 20,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. கோயிலின் மதில்சுவரில் பல தெய்வங்களின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் பெயர்கள் கீழே வரையப்பட்டிருக்கின்றன. கோயில் ஆதியில் சிறியதாயிருந்தது; அதை நந்தி ராஜாவும், பூர்ணையாவும் பெரிதாக்கிப் புதுப்பித்தனர்; இங்குள்ள கல்லாலாகிய தட்சிணாமூர்த்தி, அம்மூர்த்தியின் மூன்று பிரிவுகளும் கலந்தது-யோக தட்சிணாமூர்த்தி, வீணை தட்சிணாமூர்த்தி, வியாகர்ண தட்சிணாமூர்த்தி. விசேஷ உற்சவம் பங்குனி மாதம். 7 நிலைகளுடைய கோபுரம் 1845-ம் ௵ மும்மடி கிருஷ்ணதேவ உடையாரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் ஹைதர் ஆலியின் உத்திரவுபடி பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கம் ஒன்று உளதாம். இங்குள்ள சந்திரசேகரமூர்த்திக்கு பிரியாவிடை கிடையாது. இங்கு சத்திரய உண்டு.

**நடியாபிரிவு** :-வங்காள ராஜதானி, இங்கு மூன்று சிவாலயங்கள் உள. (1) சாந்திபூர் ஜாலேஷ்வர் கோயில் (ஜ்வாலேஷ்வர் ?) (2) சிப்நிபாஸ் (சிவ நிவாஸ் ?) இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. கோயில்கள் 60 அடி உயரம். சிவலிங்கம் 9 அடி, 7½ அடி உயரம்.

**நண்டூரா** :—மத்ய இந்தியா, ரெயில் ஸ்டேஷன். சிவாலயம், ஸ்வாமி மகாகாளர்.

**நம்பிதலைவன் பட்டயம்** :-திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, திருக்குறுங்குடிக் கருகிலுள்ளது, சிவாலயம் கிலமாயிருக்கிறது ; நித்யபூஜையில்லை. மூம்மூர்த்திகளெல்லாம் திருக்குறுங்குடிக் கோயிலில் தற்காலம் வைக்கப்பட்டிருக்கின்றன.

**நந்தபுரம்** :—விசாகபட்டணம் ஜில்லா, சென்னை ராஜ தானி, சிவாலயம். ஸ்வாமி சர்வேஸ்வரர்.

**நந்தலூர்** :-புல்லம்பேட்டை தாலூகா, கடப்பை ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம். ஸ்வாமி சமயாநந்தர்.

**நந்திக்கரை** :—திருவாங்கூர் ராஜ்யம், திருவநந்த புறத்திற்கு 30 மைல்—சிவாலயம். இங்கு 9-ம் நூற்றாண்டிய சித்திரங்கள் உள, பார்க்கத் தக்கவை.

**நந்திகுடி** :—சென்னை ராஜதானி, சிவாலயம்.

**நந்திகுண்டா** :-நஞ்சங்கோட் தாலூகா, மைசூர் ராஜ்யம், சிவாலயம். ஸ்வாமி மல்லேஸ்வரர்.

**நந்திட்டவரே** :—மைசூர் ராஜ்யம், சிவாலயம். ஸ்வாமி மாணிக்கேஸ்வரர்.

**நந்திமங்கை** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம். ஸ்வாமி ஜம்பு நாதர், தேவி அகிலாண்டவல்லி. நந்தி பூசித்த ஸ்தலம்.

**நந்திதுர்க்கம்** :—மைசூர் ராஜ்யம், கோலார் ஜில்லா, பெங்களூரிலிருந்து 31 மைல், மலை 456 அடி உயரம். நந்தி ரெயில் ஸ்டேஷனிலிருந்து 3 மைல். இந்த துர்க்கம் (மலை) ஸ்கந்தகிரி, பிரம்மகிரி, சென்னகேசவகிரி எனும் பாகங்களையுடையது. பெண்ணாறு, பாலாறு முதலிய நதிகள் இங்கு ஆரம்பமாகின்றன. இதன் நடுவில் அமிர்த சரோவரம் எனும் நீர் நிலையுளது. மலையடிவாரத்தில் இரண்டு கோயில்கள் உண்டு. (1) போகநந்தீஸ்வரர், அருணசலீஸ்வரர் போகநந்தீஸ்வரர் கோயில் பாண அரசன் வித்யாதரன் மனைவி ரத்னவளியால் சுமார் 810-ம் வருடம் கட்டப்பட்டதாம். அருணசலீஸ்வரர் கோயில் கேசவர் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் 3 அடி உயரமுள்ள விநயகர் உண்டு, இவருக்கு சிங்கமுகமும் மெல்லியயானைத் துதிக்கையும் உளது! அன்றியும் இங்கு ஹனுமார் வீணை வாசிப்பது போலவும், மணல் லிங்கத்தைப் பிடுங்குவதுபோலவும்; சிலைகள் உள. நாரதர் வீணை வாசிக்கும் சிலையும், ஸ்ரீ கிருஷ்ணன் வெண்ணெய் திருடும் சிலையும் பார்க்கத் தக்கவை. மத்சியாவதார விஷ்ணுவைக் கொல்லும் சிலையும்,

சப்தரிஷிகள் சிலைகளும் உண்டு. மலை உச்சியில் போகநந்திஸ்வரர் கோயில் உளது. உச்சிக்குப் போக 1775 படிகள். இக்கோயில் பல்லவ அரசர்கள் காலத்திற்கு முந்தியது என்று சிலர் எண்ணுகின்றனர். கோயில் சிலகாலம் ஜைன ஆலயமாயிருந்ததென எண்ணுவதற் கிடமுண்டு. பூர்வபெயர் நந்தகிரி. சோழர்கள் இதை நந்தகிரி, நந்தி துர்க்கம் என்று மாற்றினர். இவ்வாருயின் இங்குள்ள சிவாலயங்கள் 11-ம் நூற்ருண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஸ்டேஷனுக்கும் சுல்தான் பேட்டைக்கும் அருகில் மற்ருெரு சிவாலயமுண்டு.

**நந்திகிராமம்** :—வட இந்தியா, அயோத்தியிலிருந்து 14 மைல் தூரம், கௌரிசங்கர் மஹாதேவர் சிவாலயம்.

**நந்தியால்** :—சென்னை ராஜதானி ரெயில் ஸ்டேஷன், சிவாலயம். ஸ்வாமி மஹாதேவர், மங்கள தீர்த்தம்.

**நந்திவனம்** :—இதற்கு நந்திகேஸ்வரம் என்றும் பெயர். சென்னை ராஜதானி, செங்கல்பட்டு ஜில்லா, கூடுவாஞ் சேரிக்கு ½ மைல் தூரம் சிவாலயம். ஸ்வாமி நந்தீச்சுரர், தேவி சௌந்தர நாயகி. நந்தி தீர்த்தம். நந்தி பூசித்த ஸ்தலம்.

**நந்நிலம்** :—(திரு) நந்நிலத்துப் பெருங்கோயில் என்பது தேவார நாமம், மதுவனம் என்றும் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். கோயில் ஸ்டேஷனுக்கு 3 மைல் மேற்கி லுளது. ஸ்வாமி மதுவனேஸ்வரர், பிரகாசநாதர், தேவி மதுவனநாயகி, பிரகாசநாயகி. சூரியகாந்த தீர்த்தம். கோயில்கட்டு மலைமீதுளது. சூரியன் பூசித்த ஸ்தலம். கோச்செங்கட் சோழன் திருப்பணிசெய்த ஸ்தலம். பிரம் மோற்சவம் சித்திரை மாதம். சுந்தரர் பாடல்பெற்றது. இதற்கு 1½ மைல் தூரத்தில் திருக்கோணமீச்சரம் எனும் சிவாலயமுளது. சிறிய ஆலயம் 200+100 அடி விஸ்தீ ரணம், ஒரே பிராகாரமுடையது. இங்குள்ள அர்த்தமண்ட பத்திலுள்ள லிங்கத்தின் வலதுபுரம் ஒரு தேன்கூடு உளது இது விசித்திரமானது. இதிலுள்ள தேனீக்கள் ஒருவரை யும் ஹிம்சிப்பதில்லை. இதற்கு தினம் பூசை நடக்கிறது.

**நயினர்பட்டி**:—சென்னை ராஜதானி, மதுரை ஜில்லா சிவாலயம், ஸ்வாமி இட்சுவனேஸ்வரர், தேவி மங்களாம் பாள்.

**நயினர்கோயில்** :-ராம்நாத் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்—ஸ்வாமி நாகநாதர்; மஹம்மதிய ஊமைப் பெண்ணை பேசவைத்த ஸ்தலம். நயினர் என்பது லப்பைத் தமிழில் ஸ்வாமி என்று அர்த்தமாகும். இதற்கு மருதூர் என்றும் பெயர் உளது. கோயில் மேற்கு பார்த்தது.

**நயினர்கோயில்** :—(நாயனர் கோயில்) பாண்டிய நாட்டிலுள்ள ஸ்தலம். பரமகுடிக்கு 4 மைல், சிவாலயம். ஸ்வாமி சோமேஸ்வரர், தேவி பாதம்பிரியாள். வைகைநதி தீர்த்தம்.

**நரசமங்கலம்** :—சாமராஜநகர் தாலூகா, மைசூர் ராஜ்யம், சிவாலயம்—ஸ்வாமி ராமேஸ்வரர். கோயிலின் மேற்கு மூலையில் சப்தமாத்ருக்கள் சந்நிதியில் 11 அழகிய சிலைகள் உள. கோயல் கருப்புக்கல்லாலாயது, லிங்கமும் தூண்களும் மிகப்பெரியவை. கோயில் மிகவும் பாழாயிருக்கிறது.

**நரசராவ்பெட்** :—கிருஷ்ணை ஜில்லா, சென்னை ராஜதானி. பீமேஸ்வரர் கோயில் 1131-ம் ஆண்டில் கட்டப்பட்டது.

**நரசாபுரம்** :—மேற்கு கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்.

**நரசிபூர்** :—மைசூர் ராஜ்யம், மைசூரிலிருந்து 17 மைல். சங்கமேஷ்வர் ஆலயம். காவிரியும் கபிலையும் சங்கமாகுமிடமிருக்கிறது. **சோமேஸ்வரர்கோயில்**, இங்கு இரண்டு கருங்கற்களாலாகிய மறைவுப் பலகைகள் இருக்கின்றன. 6 அடி 9 அங்குலம் + 4 அடி ; இவைகளில் ராமாயணக் கதைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் அழகியவை.

**நல்லக்குடி** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, இதற்கு குயிலாலம் என்றும் பெயர். வைப்பு ஸ்தலம். மாயவரம் ஸ்டேஷனுக்கு 4 மைல் தூரம் உளது. சூரியன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி ஆலத்துறையப்பர், தேவி குயிலாண்ட நாயகி அல்லது மதுரவாக் விநோதினி. சூரிய தீர்த்தம்.

நல்லாத்துக்குடி :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, மாயூரக்கோவுக் கருகிலுள்ள சிவாலயம்.

நல்லான்றூர் :—சென்னை ராஜதானி, விழுப்புரத்திற்கு 8 மைல். சிவாலயம்-ஸ்வாமி சுவர்ணபுரீசர், தேவி திருவழகி. வைப்புஸ்தலம்.

நல்லகோண்டா :—நெல்லூர் ஜில்லா, சென்னை ராஜதானி, குகைக்கோயில். ஸ்வாமி கண்டி மல்லேஸ்வரர். கார்த்திகை சிவராத்ரி பூஜை; மற்றகாலம் பூஜை இல்லை. இவ்வாலயம் திருவாதுறை ஆதீன மேற்பார்வையுடையது.

நல்லூர் :—(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சுந்தரப்பெருமாள் கோயிலுக்கு 2 மைல் தெற்கு. சிவாலயம் மாடக்கோயில், ஸ்வாமி பெரியாண்டேஸ்வரர், தேவி திரிபுரசுந்தரியம்மை. ஸ்தலவிருட்சம்-வில்வம், வசுதேவர், ஸ்ரீ கிருஷ்ணன், பாண்டவர்கள் பூசித்த ஸ்தலம். சிவபெருமான் அப்பருக்குத் திருவடி சூட்டியருளிய க்ஷேத்திரம். அமர்நீதி நாயனர் முத்திபெற்ற ஸ்தலம். பிரம்மோற்சவம் மாசிமாதம். இங்கு பாபநாசம் ஸ்டேஷனுக்கு அருகில் 3 மைல் தூரத்தில் கலியாண சுந்தரேஸ்வரர் கோயில் உளது. செயற்கையாலாகிய சிறு குன்றின் மீதுளது இதற்கு சுந்தரகிரி என்று பெயர். இங்கு அகஸ்தியருக்கு பரமசிவன் கலியாணக்கோலம் காட்டியதாக ஐதீகம். கோயிலுக்கு எதிரிலுள்ள குளத்தில் குந்திதேவி ஸ்நானம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. குளக்கரையில் இது சித்திரிக்கப்பட்டிருக்கிறது. மூலஸ்தானத்தில் இரண்டு லிங்கங்கள் உள ஒரே அவுடையாரில். மூலஸ்தானலிங்கம் மெருகிட்டதுபோல் பளபளப்பாயுளது. இது தினம் ஐந்து முறை நிறம் மாறுவதாக ஐதீகம். கர்ப்பக் கிரஹத்தின் மேற்குபுறம் சிவ பார்வதி உருவங்களும், வடக்கில் விஷ்ணுவின் உருவமும், தெற்கில் பிரம்மா உருவமும் இருக்கிறது. இவ்வூருக்குப் பழைய பெயர் பஞ்சவன மஹாதேவி சதுர்வேதி மங்கலம். இங்கு நடராஜமூர்த்தி சதுர நடமாடும் திருக்கோலமுடையது. பல கல்வெட்டுகள் உள. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசுகள் பாடல்பெற்ற ஸ்தலம்.

நல்லூர் :—தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, விருத்தப்பிரயாகை என்றும் பெயர், இங்கு இரண்டு

ஆறுகள் சங்கமமாகின்றன. சிவாலயத்தருகில் பாண்டவர்கள் பூசித்த ஐந்து லிங்கங்கள் இருக்கின்றன.

நல்லூர்பெருமணம் :—(திரு) சென்னை ராஜதானி, கொள்ளிடம் ஸ்டேஷனுக்கு 3 மைல் கிழக்கு. ஆனைக்காரன் ஸ்டேஷனிலிருந்து இறங்கிச் செல்வது நலம். சிவாலயம்-ஸ்வாமி சிவலோகத்தியாகர், சிவயோகத்தியாகேசர், தேவி நங்கையுமையம்மை. பஞ்சாக்கர தீர்த்தம். திருஞான சம்பந்தர் திருக்கலியாண முடிந்தவுடன் மனைவியுடனும் அடியார்களுடனும் கோயில் சிவலிங்கஜோதியில் ஐக்கியமாகிய ஸ்தலம். திருஞானசம்பந்தர் பாடல்பெற்றது.

நவலிங்கபுரம் :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி நவலிங்கேஸ்வரர், தேவி சிவகாமி. தீர்த்தம் தாம்ரபர்ணிநதி.

நவீரம் :—சென்னை ராஜதானி, ஆற்காட்டிலுள்ள ஓர் மலை, இதன்மீது ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி பெயர் காரியுண்டக் கடவுள்.

நள்ளாறு :—(திரு) தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் காரைக்காலுக்கு 3 மைல், பிரஞ்சு இலாகாவில் உள்ளது. சிவாலயம்-ஸ்வாமி தர்மாரண்ய ஈஸ்வரர், தேவி போகமார்த்த பூண்முலையம்மை. நள தீர்த்தம், லிங்கம் தர்ப்பைக் கொழுந்துகள் சேர்ந்ததுபோ லிருக்கிறது. திருஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களுடன் வாதாடி அக்னியிலிடவும் வேகாமலிருந்த "போகமார்த்த பூண்முலையாள்' எனும் திருப்பதிகம் பாடிய ஸ்தலம். கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் திருநள்ளாறுடையார் என்றிருக்கிறது. இங்குள்ள சனிபகவான் கோயில் மிகவும் பிரசத்தியுடையது. நளன் பூசித்து கலிதோஷம் நீங்கிய க்ஷேத்திரம். சனிப்பெயர்ச்சி உற்சவம் விசேஷம். இது சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் ஒன்றும். ஸ்வாமி நகர (நகர் ?) விடங்கர், உன்மத்த நடனம். மூவர் பாடல்பெற்ற ஸ்தலம்.

நறையூர்சித்தீச்சரம் :-(திரு) தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, பேணுபெருந்துறைக்கு 2 மைல் மேற்கு. கும்பகோணத்திற்கு 5½ மைல் தென்கிழக்கு சிவாலயம். ஸ்வாமி

சித்தநாதேஸ்வரர், தேவி அழகாம்பிகை. பிரம தீர்த்தம் திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது.

நனிபள்ளி :—(திரு) இது தற்காலம் புஞ்சை என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, செம்பொனார் கோயிலுக்கு 2 மைல் வடகிழக்கு. இவ்வூர் திருஞானசம்பந்தர் தாயார் பிறந்த இடமாம். அஷ்டவசுக்கள் பூசித்த ஸ்தலம். பாலைவனத்திலிருந்து 8 மைல். ஞானசம்பந்தர் பாலைநிலமாயிருந்ததை நெய்தல் நிலமாகும்படி பாடியருளிய க்ஷேத்திரம். ஸ்வாமி நற்றுணையப்பர், தேவி பர்வதராஜபுத்திரி. சுவர்ண தீர்த்தம், மூவர் பாடல்பெற்றது.

நாகங்குளம் :—சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி நித்யசுந்தரேஸ்வரர், தேவி ஒப்பிலாநாயகி. சுந்தர தீர்த்தம்.

நாகநாதர் கோயில் :—வட இந்தியா, சௌண்டி ஸ்டேஷனுக்கு மேற்கேயுள்ளது.

நாகநாதபுரம் :—செட்டிநாட்டில் உளது. சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி நாகநாதர், தேவி பிரஹந்நாயகி.

நாகப்பூர் :—வட இந்தியா ரெயில் ஸ்டேஷன். சிவாலயம்-ஸ்வாமி நாகநாதர், தேவி நாகாம்பிகை. இதனருகில் தாதாவைத்யநாதம் என்னுமிடத்தில் ஓர் சிவாலயமுண்டு. ஸ்வாமி வைத்யநாதர், தேவி உமாதேவி.

நாகரேஸ்வரம் :-வட இந்தியா, சிவாலயம்-சுயம்புலிங்கம்.

நாகர்பார்க்கராபிரிவு :—சிந்து மாகாணம், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) சர்தாரா கிராமம், சிவாலயம் கருஞ்சர் எனும் குன்றின்மேலுள்ளது. ஸ்வாமி-மகாதேவர். (2) அஞ்சிலிசார் கிராமம் சிவாலயம்.

நாகர்கோயில் :—திருவாங்கூர் ராஜ்யம், பாளையங்கோட்டைக்கு 70 மைல் தெற்கிலுள்ள பிரபலமான சிவாலயங்களில் இது ஒன்று. ஸ்வாமி நாகேஸ்வரர், தேவி பார்வதி; வைப்பு ஸ்தலம். இதன்றி இங்கு சோழபுரம் எனும் இடத்தில் கோட்டார் எனும் சிவாலயமுண்டு, தற்காலம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

நாகர்கோட் :—காங்கிரா ஜில்லா, வட இந்தியா, பழைய கோயில் மகமத்கஜனியால் அழிக்கப்பட்டது. பிறகு கட்டப் பட்ட கோயில், 1905-ம் வருடம் பூகம்பத்தால் சிதைந்தது.

நாகாளேச்சுரம்:-சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழிக்கு அருகிலுள்ளது. தேவரா வைப்பு ஸ்தலம்; ராகு பூஜித்த ஸ்தலம். ஸ்வாமி நாகாளேஸ்வரர், தேவி மலை மங்கை. தோணியப்பர் ஆலயத்திற்கு வடமேற்கிலுள்ளது. நாகாளேஸ்வரமுடையார் கோயிலென வழங்கப்படுகிறது.

நாகூர் :-சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன் சிவாலயம். ஸ்வாமி நாகலிங்கஸ்வாமி, தேவி திருநாகவல்லி. வட்டார் தீர்த்தம். வைப்பு ஸ்தலம்.

நாகேந்திரபட்டணம் :—தென் இந்தியா. திரு எடுக்கத் தப்புவினர் என்றும் பெயர். ஸ்வாமி நீலகண்ட நாகேஸ் வரர், தேவி நீலாயதாட்சியம்மன். மணிமுத்தாநதி தீர்த்தம். திருநீலகண்ட பாணனர் முக்திபெற்ற ஸ்தலம். நாகராஜன் பூஜித்த ஸ்தலம், கோயிலில் ஒரு வெள் எருக்கஞ்செடி உளது.

நாகேஸ்வரம் :—சென்னை ராஜதானி, குண்ணத்தூருக்கு அருகிலுள்ளது, செங்கல்பட்டு ஜில்லா, கோயில் சேக்கிழா ரால் கட்டப்பட்டதென்பர். இங்கு கஜப்பிருஷ்ட ஆகிருதி யுடைய மற்றொரு சிவாலயம் பாழடைந்து இருக்கிறது.

நாகேஸ்வரம் :—தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலூகா, சென்னை ராஜதானி, தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன். செம்பகாரண்யம் என்பது இதன் பூர்வீகப் பெயர். நாகராஜன் பூசித்த ஸ்தலம். சிவாலயம் இந்திரன் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி செண்பகாரண்யேஸ்வரர், தேவி குன்றுமுலைநாயகி அல்லது கிரிகுசாம்பிகை. நாகதீர்த்தம், முருகதீர்த்தம், சேக்கிழாருடைய ஆத்மார்த்த ஸ்தலம். சூரியன், சந்திரன், ஐந்தலைநாகம் பூசித்த க்ஷேத்திரம். இரண்டாம் ராஜராஜனும், மூன்றாம் குலோத்துங்க சோழ னும் புதுப்பிக்கப்பட்டதாம், அழகிய கோயில். கோயில் முற்றங்களெல்லாம் தளவரிசை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய குளமுண்டு, அதைச் சுற்றிலும் அழகிய மண்டபமுண்டு. ஸ்வாமி கோயிலும் அம்மன் கோயிலும்

கிழக்கு பார்த்தவை. அம்மன் கோயில் ஸ்வாமி கோயில் பிராகாரத்திற்கு வெளியிலுள்ளது. அம்மனுக்கு அபிஷேக மில்லை, புனுகு சட்டம்மாத்திரம் சாற்றப்படுகிறது. சங்க நிதி பதுமநிதி சிலைகள் கோயிலிலிருக்கின்றன. ராஜ ராஜன் விக்ரஹத்திற்கு இரண்டு மனைவிகள் இருக்கின்றன. சிவராத்திரியில் இந்திரன் பூஜை முதல்காலம்-கும்பகோணம் நாகேஸ்வரர் சந்நிதியில்; இரண்டாம் காலபூஜை நாகேஸ் வரத்தில்; மூன்றாம்கால பூஜை நாகபட்டணத்தில், என் பது ஐதீகம். இக்கோயிலில் ஒவ்வொரு விக்ரஹத்தின் மேல் சுவரில் அதன் நாமம் எழுதப்பட்டிருக்கிறது. இங்கு வசிப்பவர்களுக்கு சர்ப்ப பயமில்லை என்பது ஐதீகம். கோபுரத்தின் மூலமாக சூரியபூஜை. சத்திரமுண்டு. மூவர் பாடல்பெற்றது. கோயிலில் பழைய பல கல்வெட்டுகள் உள. இக்கோயில் பூர்வகாலத்தில் ஜெயின ஆலயமா யிருந்ததாக சிலரால் எண்ணப்படுகிறது. கண்டராதித்யர் இதைச் சிவாலயமாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

**நாகாளேஸ்வரம்** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழி பெரியகோயிலுக்கு மேற்கிலுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி நாகேசர், தேவி மலைமங்கை. ராகு பூசித்த ஸ்தலம்.

**நாட்டரசன்கோட்டை** :—சென்னை ராஜதானி, திருப்பத் தூருக்கு 15 மைல் சிவாலயம். ஸ்வாமி திரிநேத்திரர், தேவி கண்ணுடை நாயகி.

**நாங்குநேரி** :—சென்னை ராஜதானி, திருநெல்வேலி ஜில்லா, சிவாலயம்.

**நாகை**:—மத்ய இந்தியா, சிட்டபூர் ரெயில் ஸ்டேஷ னுக்கு அருகிலுள்ளது நிஜாம் ராஜ்யத்தில்—சிவாலயம்.

**நாகேஸ்வரம்** :—திருநாகேஸ்வரம் என்றும் வழங்கப்படு கிறது. செங்கல்பட்டு ஜில்லா, ஸ்ரீபெரும் பூதூர் தாலூகா, குண்ணத்தூருக்கு சமீபத்திலிருக்கிறது. சிவாலயம்-ஸ்வாமி நாகேஸ்வரர், தேவி திரிபுரசுந்தரியம்மன். ஆலயம் சேக்கி ழாரால் கட்டப்பட்டதென்பது ஐதீகம். கும்பகோணத் தருகிலுள்ள திருநாகேஸ்வர் கோயிலின் பூஜையைப்போல் இங்கும் பூஜை நடக்கிறதென்பர்.

நாங்கூர் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சீர்காழிக்கு 6 மைல். இது மதங்கரிஷியின் ஆசிரமம். இங்கு அவர் தவத்தை அழிக்கவந்த விஷ்ணு, மோகினி ரூபத்தில் சங்கு சக்கரத்தோடு விளங்குகிறார். சிவாலயம் கிலமாயிருக்கிறது. சிவலிங்கத்திற்கெதிரில் மேற்கு நோக்கிய நந்தியருகில் கிழக்கு நோக்கிய ஒரு நந்தியிருக்கிறது. சேந்தனார் அவதரித்த ஸ்தலம். ஸ்வாமி மதங்கேஸ்வரர், தேவி மையாடு கண்ணி.

நாட்டரசன்கோட்டை :—சென்னை ராஜதானி, ராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கைக்கு 5 மைல். பழைய பெயர் பனசை ; பனைமரங்கள் மிகுதியாயிருந்தபடியால் அப்பெயர் வந்ததென்பர். சிவாலயம் கரிகாலன் சோழன் பிரதிஷ்டையென்பர்; ஆகவே ஸ்வாமி பெயர் கரிகால் சோழீசப்பெருமாள்.

நாகபட்டினம் :—நாகைக்காரோணம் என்பது தேவாரப் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவாலயம் பெரியது. ஸ்வாமி காயாரோகணேஸ்வரர், ஆதிபுராணேஸ்வரர், தேவி நீலாயதாட்சியம்மன். மாமரம் ஸ்தலவிருட்சம். தீர்த்தங்கள்-தேவ தீர்த்தம், சர்வ தீர்த்தம், புண்டரீக தீர்த்தம், காக தீர்த்தம் அல்லது அக்னி தீர்த்தம், பிரம தீர்த்தம், முனி தீர்த்தம், வச்சிர தீர்த்தம். சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. அதிபத்தநாயனார் முக்தி பெற்ற ஸ்தலம். சிவபெருமான் புண்டரீக மகரிஷியை காயத்தோடு கைலாயத்திற்கு ஆரோகணம்செய்த ஸ்தலம். காகராஜன் பூஜித்த ஸ்தலம். இங்கு நீலாயதாட்சியம்மன் அலங்காரம் பார்க்கத்தக்கது. கல்வெட்டுகளில் இந்த க்ஷேத்திரம் காரோணம் என்றே கூறப்பட்டிருக்கிறது. இங்கு தியாகராஜர் உண்டு. சுந்தரவிடங்க தியாகர் ; நடனம் அலைநடனம். கோயிலில் 5 முகங்களோடு கூடிய ஹேரம்ப கணபதியுண்டு. சட்டையப்பர் சந்நிதி கவனிக்கத்தக்கது. கர்ப்பக்கிரஹத்திலுள்ள அஷ்டதிக் பாலர்கள் சிலைகள் அழகிய சிற்பங்கள். பிரம்மோற்சவம் 18 நாள். இங்கு கைலாசநாதர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு.

நாசிக் :—கிழக்கு ஜி. ஐ. பி. ரெயில் ஸ்டேஷன், பம்பாய் ராஜதானி, ஊர் நாசிக் ஸ்டேஷனிலிருந்து 5 மைல். கோதாவரியின் அக்கரையில் பஞ்சவடியிலுள்ளது. இங்கு

பல சிவாலயங்கள் உள. (1) கபாலேஸ்வரர் கோயில். ஸ்வாமி கபாலேஸ்வரர், தேவி பார்வதி. சிவபெருமான் பிரம்மனது ஐந்தாம் தலையைக் கொய்த ஸ்தலமென்பது ஐதீகம். மற்ற கோயில்களிலிருப்பதுபோல் இக்கோயிலில் ஸ்வாமிக்கெதிரில் நந்தி கிடையாது. கோயில் ராமகுளத்துக்கருகிலுள்ளது. சிவராத்திரி விசேஷம். கோயில் 1738-ம் வருடம் புதுப்பிக்கப்பட்டது. (2) மேற்கில் 1 மைல் தூரத்தில் கோடீஸ்வரர் சிவாலயம். (3) உமாமஹேஸ்வரர் கோயில். மஹேஸ்வர மூர்த்தி 2 அடி உயரம். வலதுபுறம் கங்கையின் சிலை, இடதுபுறம் உமாதேவியின் சிலை; இவை மூன்றும் சாளக்கிராம சிலைகள். மஹாராஷ்டிரர்கள் இவைகளைக் கர்நாடகத்திலிருந்து சூறையாடிக் கொண்டுவந்தனராம். 1758-ம் ஆண்டில் பேஷ்வாவின் உறவினர் ஒருவரால் கட்டப்பட்ட கோயில். (4) நீலகண்டேஸ்வரர் கோயில், கோதாவரியின் வலது கரையில் உள்ளது. கோயிலிலுள்ள லிங்கம் மிகவும் பழமையானது. ஜனக மகாராஜாவால் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்பர். கோயில் 1747-ம் ஆண்டில் லட்சுமண சங்கரர் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது. (5) பஞ்சரத்னேஸ்வரர் கோயில், வீடுபோன்றது. சிவலிங்கம் ஸ்ரீராமர் பிரதிஷ்டை என்பர். அவர் பஞ்ச ரத்னங்களைக்கொண்டு பூசித்தபடியால் அப்பெயர்பெற்றது. 1758-ம் ஆண்டில் யக்னேஸ்வர தீட்சிதரால் புதுப்பிக்கப்பட்டது. (7) திலபாண்டேஸ்வரர் கோயில், நாசிக்கிலுள்ள சிவலிங்கங்களிலெல்லாம் இதுதான் பெரியது. கோயில் 1763-ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. (8) ம்ருகவியாதேஸ்வரர் கோயில், இங்கு காயத்ரி முதலிய நதிரூபங்கொண்ட தேவிகளை பிரமன் தொடர, அவர்களை சிவபெருமான் காத்தருளியதாக ஐதீகம். கோயில் 1770-ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. (9) நாரோசங்கர் தேவாலயம், இதற்கு ராமேஸ்வரர் கோயில் என்றும் பெயர். இங்குள்ள சில்பங்கள் அழகியவை. இக்கோயிலுக்கு 5 கோபுரங்கள். இங்கு 6 அடி சுற்றளவுள்ள ஒரு பெரிய மணியுண்டு. 1756-ம் ஆண்டில் நாரோசங்கர் என்பவரால் கட்டப்பட்டது. (10) முக்தேஸ்வரர் ஆலயம் (11) சந்திரமௌளீஸ்வரர் ஆலயம்—பஞ்சவடியிலுள்ளது. (12) பாதாளேஸ்வரர் சிவாலயம். (13) கர்ப்பூரேஸ்வரர் கோயில் இது வீரசைவர்களுடைய சிவாலயம். (14) திரியம்பகேஸ்வரர் கோயில் நாசிக்குக்கு 18 மைல் தூரம். யாத்ரீகர்கள் தங்க

இங்குபல தர்ம சாலைகளுண்டு—கபூர்த்தவர் தர்ம சாலை, தேவி மடம், சங்கராச்சாரியார் மடம் முதலியன கோதாவரியின் உற்பத்தி ஸ்தானத்திலுள்ளது. வட இந்தியாவிலுள்ள 12 ஜோதிலிங்கங்களில் இங்குள்ளது முக்கியமானதாம். தீர்த்தங்கள் குசலவ தீர்த்தம், வராஹம், கபோதம் முதலியன. ஒரே இடத்திலுள்ள மூன்று லிங்கங்கள் 3 கண்களைப் போன்றிருக்கின்றன. (திரியப்பகேஸ்வரர் மூன்று கண்களையுடைய ஈஸ்வரர்.) இங்குள்ள மலைக்கு திரியம்பக்கிரி என்று பெயர். இதில் பரமசிவத்தின் 5 முகங்களின் பெயர்களையுடைய 5 சிகரங்களிருக்கின்றன. இங்கு 6 தீர்த்தங்கள் உள. கோயிலுக்கு கோட்டைக்கிருப்பதுபோல் மதில்கள் உண்டு. கர்ப்பக்கிரஹத்தில் லிங்கபீடம் மாத்திரம் உளது, லிங்கம் இல்லை, நடுவில் ஒரு பள்ளம் மாத்திரம் உண்டு; இதில் பிரம்மா, விஷ்ணு, பரமசிவம் இவர்களின் லிங்கங்கள் இருப்பதாக ஐதீகம். கோயில் 1766-ம் ஆண்டில் நானு சாஹெப் என்னும் மஹாராஷ்டிரரால் புதுப்பிக்கப்பட்டதாம். ரதோற்சவம் விசேஷம்; அப்போது ரத்னகிரீடத்தை ஸ்வாமியின் பஞ்சமுகி முகவணிக்கு சார்த்தி புறப்பாடு செய்கிறார்கள். இங்குள்ள மற்ற சிவாலயங்கள்: கேதாரேஸ்வரர் கோயில், சித்திரேஸ்வரர் கோயில், திரிசக்தீஸ்வரர் கோயில், கஞ்சனேஸ்வரர் கோயில், ராமேஸ்வரர் கோயில், காசிவிஸ்வேஸ்வரர் கோயில்.

**நாட்டியத்தான்குடி (திரு)**:—தஞ்சாவூர் ஜில்லா, திருஆரூருக்கு 6 மைல், சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன், கோட்புலி நாயனார் சிவபூஜைக்காக வைத்திருந்த நெல்லை, அவரது பந்துக்கள் பஞ்சகாலத்தில் அபஹரிக்க, அவர்களை வாளால் வீசி தன்பக்தியைக்காட்டிய ஸ்தலம். இவரது சிலை கோயிலிலிருக்கிறது. நீலகண்ட ரிஷியும் யானையும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி ரத்னகிரீஸ்வரர், கரிநாதேஸ்வரர், தேவி மலைமங்கையம்மை, அல்லது மலர் மங்கையம்மை; சூரிய தீர்த்தம்.

**நாதத்வாரம்**:—நாதாத் என்று வழுங்கப்படுகிறது. இமய மலையிலுள்ள சிவஸ்தலம்.

**நாதெண்டலா**:—குண்டூர் தாலூகா, மேற்படி ஜில்லா சென்னை ராஜதானி, மூலஸ்தானேஸ்வரர் கோயில்.

**நாம்பாக்கம்** :—சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி பந்தேஸ்வரர், (?) தேவி சிவஞானம்பாள்.

**நாம்பூர்** :—குண்டூர் தாலூகா, மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி, மல்லேஸ்வரர் கோயில்.

**நாயடிவாக்கம்** :—சென்னைராஜதானி, சிவாலயம்.

**நாயர்** :—ஞாயர் என்றும் பானுபுரி என்றும் பெயர் உளது. சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி புஷ்ப புரீஸ்வரர், தேவி சுவர்ணாம்பிகை. சங்கிலி நாய்ச்சியார் பிறந்த ஸ்தலம்.

**நாரத்தாமலை** :—சென்னை ராஜதானி, சிவாலயம். புதுக் கோட்டையிலிருந்து 12 மைல்; புதுக்கோட்டை சமஸ்தானம். பல்லவ கட்டடம். கோயில் கிலமாயிருக்கிறது. இங்கு 8 குன்றுகள் உண்டு. அவற்றுள் ஒன்றிற்கு **சிவன்மலை** என்று பெயர்; இதில் பரமசிவத்திற்கும் விஷ்ணுவுக்கும் கோயில்களுண்டு. நகரத்தார் + மலை = நார்த்தாமலை என்றாயது. இங்குள்ள சிவாலயங்கள்: **கடம்பர்** கோயில் (2) மேலமலையில் இரண்டு குடைவரைக் கோயில்கள், பல்லவர்கள் காலத்தியவை. இவை முன்பு சமணர்கள் இருப்பிடமாக இருந்திருக்கலாம். இதன் பழைய பெயர் சமணகுடிலம். தற்காலம் விஷ்ணு ஆலயமாயிருக்கிறது. இதற்கு 50 அடி தூரத்தில் மற்றொரு குகைக் கோயில்-சிவாலயம். ஸ்வாமி பழியிலி ஈஸ்வரர். முன்பிருந்த மண்டபம் இடிந்திருக்கிறது. கல்வெட்டில் பல்லவ அரசனை நிருபதுங்க விக்ரமனது ஏழாம் ஆண்டில் விடேல் விடுகு முத்தரையன் மகன்சாத்தப் பழியிலி இக்கோயிலைக் குடைவித்தான் என்றறிகிறோம். அவன் மகள் "தமிழ்தியரையனுகை பல்லவன் அநந்தனுக்கு புக்க பழியிலி சிறியநங்கை" இக்கோயிலுக்கு மூகமண்டமும் பலிபீடமும் செய்வித்தாள் என்று கல்வெட்டினால் அறிகிறோம். சுமார் 9-ம் நூற்றாண்டியவையாம். (3) **கடம்பர்மலை** எனும் மற்றொரு குன்றில் ஒரு சிவாலயமுளது. ஸ்வாமி பெயர் கடம்பு உடைய நாயனார் என்று கல்வெட்டுகளில் இருக்கிறது. (4) **விஜயாலயசோளீஸ்வரம்** மேற்கண்ட இரண்டு குகைக் கோயில்களுக்கு எதிரிலுள்ளது. கற்கோயில்; மத்தியில் பிரதான கோயில் சுற்றிலும் 7 கோயில்களையுடையது. எல்லாவற்றையும் சூழ கல் மதில் உடையது. கோயில் மேற்கு பார்த்தது. மேற்கேயும்

வடகிழக்கேயும் இரண்டு வாயில்கள் உள்ளன. கர்ப்பக் கிரஹம் ஓங்கார வடிவமானது; 9 அடி அகலம், 8 அடி உயரம். இது 29 அடி சதுர மண்டபத்திலிருக்கிறது. மஹாபலிபுரம் தர்மராஜா ரதத்தைப்போன்ற கோயில். இதிலுள்ள நான்கு புரைகளில் கற்சிலைகளிருக்கின்றன; மேற்கில் பரமசிவமும் பார்வதியும், தெற்கில் வீணா தட்சிணாமூர்த்தி, கர்ப்பக்கிரஹத்துக்கு முன் ஒரு அர்த்த மண்டபமிருக்கிறது, இம்மண்டபத்தில் வாயிலைக்காக்கும் இரண்டு துவாரபாலகர்கள் இருக்கின்றனர். மூலக்கோயிலைச்சுற்றி இருக்கவேண்டிய 7 கோயில்களில் தற்காலம் ஆறுதானிருக்கின்றன. இவைகளில் சூரியன், சப்தமாத்ருக்கள். கணபதி, சுப்பிரமணியர், ஜேஷ்டாதேவி, சண்டேஸ்வரர், சந்திரன், சிலைகள் இருந்திருக்கவேண்டும். இக்கோயில் அஸ்திவாரம் முதல் ஸ்தூபிவரையில் கருங்கல்லாலாயது. கோயில் மிகவும்புராதனமானவைகளில் ஒன்று. கி.பி. 850-ம் ஆண்டில் கட்டப்பட்டிருக்கவேண்டுமென மதிக்கப்படுகிறது. கோயில் 8 அடி 5 அங்குலம் + 7 அடி 7 அங்குலம் × 6 அடி 8 அங்குலம் விஸ்தீரணம். இதற்கருகில் தளவரிசுனை என்று ஒரு சுனை இருக்கிறது, அதில் ஜ்வரஹரேஸ்வரர் ஆலயம் உளது. (தற்கால இங்கிருக்கும் மாரியம்மன் கோயில் மிகவும் பிரபலமுடையது).

**நாராயணன்கோட்டி** :—வட இந்தியா, அல்மோரா அருகிலுள்ளது. சிவாலயம் புதிதாகக் கட்டப்பட்டது.

**நாராயணவனம்** அல்லது நாராயணவரம் :-வடஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி, அகஸ்தீஸ்வரர் கோயில் இங்குள்ள மற்றொரு கோயில் பராசரர் கோயில் என்பதாம்.

**நாரையூர் (திரு)** :-விஷ்ணுவின் அம்சமாகிய நாராயண முனிவர் சாபத்தால் பெற்ற நாரையுருநீங்கிய ஸ்தலம் சென்னை ராஜதாணி, தஞ்சாவூர் ஜில்லா, சிதம்பரத்திற்கு 10 மைல் தென்மேற்கு. சிதம்பரத்தில் ஓர் அறையில் அடைபட்டிருந்த தேவாரத் திருப்பதிகங்களை நம்பியாண்டார் நம்பிக்கு அறிவித்த பொல்லாப் பிள்ளையார் இங்குளர். நாரை பூசித்த ஸ்தலமாதலால் நாரையூர் எனப் பெயர் பெற்றது. ஸ்வாமி சௌந்தரேஸ்வரர், தேவி திரிபுர

சுந்தரியம்மன். காருண்ய தீர்த்தம், புந்நாகவிருட்சம்-திரு ஞான சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது

**நாலூர்மயானம்** (திரு) :—கும்பகோணத்திலிருந்து 13 மைல். திருமெஞ்ஞானம் என்றும் பெயர். தற்காலம் நாத்தூர் என்றழைக்கப்படுகிறது. சென்னை ராஜதானி, குடவாசலுக்கு 3 மைல் வடக்கிலுள்ளது. ஆபஸ்தம்பர் பூசித்த க்ஷேத்திரம். சிவாலயம்-ஸ்வாமி பலாசவனேஸ்வரர் அல்லது பல்லவனேஸ்வரர்; தேவி பெரியாம்பிகை. சந்திர தீர்த்தம். இதற்கு 1 மைல் தூரத்தில் நாலூர் எனும் ஊர் உளது. அங்கும் ஒரு கோயில் உண்டு, சிவாலயம். நாலூர் வேறு, மயானம் வேறு, இவ்விரண்டு க்ஷேத்திரங்களுக்கும் திருஞான சம்பந்தர் ஒரேபதிகம் பாடியுளார்.

**நாவூர்** (திரு) **திருநாம நல்லூர்** :—ராஜாதித்தபுரம் எனவும் வழங்கப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா, திருக்கோயிலூர் தாலூகா, சென்னை ராஜதானி, பண்ணுருட்டி ஸ்டேஷனுக்கு 11 மைல் மேற்கிலுள்ளது. சுந்தரர் பிறந்த இடம். சுக்கிரன் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி திருநாவலேஸ்வரர், பக்தஜனேஸ்வரர், தேவி சுந்தரநாயகியம்மை, சிவகங்கை, கருடதீர்த்தம், நாகவல்லி விருட்சம். சடைய நாயனர், இசைஞானியார், புகழ்த்துணை நாயனர், நரசிங்க முனையரையர் முக்திபெற்ற ஸ்தலம். கல்வெட்டுகளில் திருத்தொண்டீஸ்வரம் என்றிருக்கிறது. ஸ்வாமி பெயர் ராஜாதித்த மஹாதேவர் என்றிருக்கிறது. ராஜாதித்த சோழனல் (907-946) கட்டப்பட்டது. கோயிலில் சுந்தரர்க்கு இரண்டு நாச்சியார் சிலைகளிருக்கின்றன.

**நிமார்பிரிவு** :—மத்திய மாகாணம். இங்கு அடியிற் குறித்த சிவாலயங்கள் உள. (1) **காண்ட்வா** கிராமம் சிவாலயம், குகைக்கோயில் போன்றது. (2) **மான்தாதா** கிராமம் **அமரேஷ்வரர்** கோயில்; **பிரிதேஷ்வர்** கோயில்; **சித்தநாத்** கோயில், பெரியது. மஞ்சள் நிறக்கல்லாற் கட்டப்பட்டது; **கௌரிசோமநாத்** கோயில், இது ஒரு தீவின் மத்தியிலுள்ளது; லிங்கம் வெண்மை நிறமாயிருந்தது. மகம்மதிய அரசனுகிய அவுரங்கஜீப் பார்வைபட்டு கருநிறமாகியதென்பர்!

**நியமம்** :—நன்னிலம் தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம்-ஸ்வாமி ஐராவதேஸ்வரர்.

**நிர்த்தனமங்கலம்** :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி, நாகப்பட்டிணத்திற்கு 10 மைல்-சிவாலயம்.

**நிர்வாங்னி** :—பூனா ஜில்லா, பம்பாய் ராஜதானி, மஹா தேவர் கோயில்.

**நின்றியூர் (திரு)** :—சென்னை ராஜதானி, ஆனை தாண் டவபுரத்திற்கு 2 மைல் வடகிழக்கு. லட்சுமி பூசித்த ஸ்தலம். சிவாலயம்-ஸ்வாமி மஹாலட்சுமீஸ்வரர், தேவி லோகநாயகி. லட்சுமி தீர்த்தம், நீலமலர்ப்பொய்கை. பூசல் நாயனார் அவதார ஸ்தலம்.

**நீடாமங்கலம்** :—தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடிக்கருகி லுள்ளது. ரெயில் ஸ்டேஷன்-சென்னை ராஜதானி, காசி விஸ்வநாதர் கோயில். பிரம்மோற்சவம் ஆனி மாதம். சத்திரமுண்டு; இங்கு முசாபர் பங்களாவும் உண்டு.

**நீடூர் (திரு)** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, ஆனைதாண்டவபுரத்திற்கு 1 மைல் தென்மேற்கு. காளி, இந்திரன், பூசித்த ஸ்தலம். ஸ்வாமி அருட்சோமநாதேஸ் வரர், தேவி வேயுறுதோளியம்மன். செங்கழுநீர்ஓடை தீர்த்தம். முனையடுவார் நாயனார் முக்திபெற்ற ஸ்தலம். சுந் தரர் பாடல்பெற்றது.

**நீர்பழனி** :—சென்னை ராஜதானி, புதுக்கோட்டைக்கு 21 மைல்-சிவாலயம். இங்குள்ள நந்தியருகில் 4 அடி 3 அங் குலம் × 1 அடி 8 அங்குலம் × 8 அங்குலம், அளவுள்ள கல்லாலாகிய சூலம் இருக்கிறது.

**நீரங்கி** :—தார்வார் ஜில்லா, பாங்கபூருக்கு 13 மைல், சித்தராமேஸ்வரர் கோயில் ஆதியில் விஷ்ணுகோயிலா யிருந்து பிறகு சிவாலயமாக்கப்பட்டதென மிஸ்டர்கசின்ஸ் எண்ணுகிறார்.

**நீலக்குடி (திரு)** :—தென்னங்குடி எனவும் வழங்கப்படு கிறது. திருவிடைமருதூருக்கு 5 மைல் தென் கிழக்கு. சென்னை ராஜதானி. வருணனும் தேவகன்னியரும் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி நீலகண்டேஸ்வரர், நல்லதாயகேஸ்வரர், தேவி உமையம்மை, அழகாம்பிகை. காவிரி தீர்த்தம், வன்னிமரம்-அப்பர் பாடல்பெற்றது.

**நீலகுண்டா** :—பல்லாரி ஜில்லா, ஹார்ப்பனஹல்லி தாலூகா, சென்னை ராஜதானி. சிவாலயம்-பீமேஸ்வரர்

கோயில்-சளுக்கிய கட்டிடம். இதில் விஷ்ணுவுக்கும் ஒரு சந்நிதியுண்டு.

நீலேஷ்வர் :—தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்-ஸ்வாமி நீலேஸ்வரர். இங்கு முசாபர் பங்களா உண்டு.

நுக்கேஹல்லி :—மைசூர் ராஜ்யம். சிவாலயம் சுமார் 1249-ம் ஆண்டில் கட்டப்பட்டது. கோயிலுக்கு சதாசிவக் கோயில் என்று நாமம். கிழக்கு பார்த்த லிங்கம். இங்குள்ள மஹிஷாசுர மர்த்தனி சிலை அழகியது. இங்கு சோமேஸ்வரர் கோயில் என்று மற்றொரு சிவாலயமுண்டு

நெடுங்களம் (திரு) :—திருநெட்டாங்குளமென வழங்கப் படுகிறது. சென்னை ராஜதானி, திருவெறும்பூருக்கு 7 மைல் தென்கிழக்கு, திருச்சிராப்பள்ளி ஜில்லா; ஓர் சோழ அரசனுக்கு பேரழகுடன் தரிசனம் அருள்புரிந்த ஸ்தலம். ஸ்வாமி நித்யசுந்தரேஸ்வரர், தேவி ஒப்பிலா நாயகியம்மை; சூரியதீர்த்தம்-திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது.

நெடுங்காடு :—தென் இந்தியா, சென்னை ராஜதானி தஞ்சாவூர் ஜில்லா. சிவாலயம்-ஸ்வாமி தான்தோன்றீஸ்வரர், தேவி நெடுந்தவவல்லி. அகஸ்தியர் பூசித்த ஸ்தலம். கோயிலில் அஷ்டலிங்கப் பிரதிஷ்டையுளது. வைப்பு ஸ்தலம்.

நெடுசால் :—கிராமம். கிருஷ்ணகிரி தாலூகா, சென்னை ராஜதானி. பழைய சிவாலயம் கிலமாயிருக்கிறது. பூஜையில்லை. இங்கு நடராஜமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, நால்வர் விக்ரஹங்கள் முதலியவை இருக்கின்றன—1942-ம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்டன.

நெடுபுரோலு :—பாபட்லா தாலூகா, குண்டூர் ஜில்லா, சென்னை ராஜதானி, சோணேஸ்வரர் ஆலயம்.

நெய்த்தாளம் (திரு) :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி, தில்லை ஸ்தானம் என வழங்கப்படுகிறது. திருவையாறுக்கு 1 மைல் மேற்கிலுள்ளது. சரஸ்வதி பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி நெய்யாடியப்பர் (சமஸ்கிருதத்தில் கிருதபுரீஸ்வரர்), தேவி வாலாம்பிகை அல்லது பாலாம்பிகை, காவிரி தீர்த்தம், சப்தஸ்தான க்ஷேத்ரங்களில் ஏழாவது.

**நெய்த்தானம்** :—சிறு கோயில் - ஆனல் மிகவும் பழமையானது; இதைப் புதிப்பித்தபோது புத்தி சாதுர்யமாக கர்ப்பக் கிரஹத்தை மாத்திரம் பழையபடியே இருக்க விட்டிருக்கின்றனர். இங்கு சில பழமையான கல்வெட்டுகள் வட்டெழுத்துகளில் இருக்கின்றன. சம்பந்தர், அப்பர் பாடப்பெற்ற க்ஷேத்திரம். கோயிலின் தென் புறத்தில் நிற்கும்தட்சிணமூர்த்தி உருவம் உளது. மைநாகப் பர்வதத்தில் பரமசிவம் நின்றுகொண்டு உபதேசம் செய்த படியால் தட்சிண மூர்த்தி இங்கு நிற்கும் கோலத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது. சுயம்புலிங்கம் பசுக்கள் நெய்கலந்த பாலினல் அபிஷேகம் செய்தபடியால் இது கிருத லிங்கேஸ்வரர் என்று பெயர் பெற்றதென்பர். விமானம் தஞ்சாவூர் கோயில் விமானத்தைப் போன்றது.

**நெய்யடிப் பாக்கம்** :—தென் இந்தியா, காஞ்சீபுரம் தாலுகா, செங்கல்பட்டு ஜில்லா, பிரீதிகங்கீஸ்வரர் கோயில்; கல்வெட்டுகளில் பிருதியங்கர உடையார் என்று ஸ்வாமியின் பெயர் கூறப்பட்டிருக்கிறது' இங்கு மருந்தீஸ்வரர் கோயில் என்று மற்ருெரு சிவாலயமுண்டு, ஸ்வாமி பெயர் மருந்தீஸ்வர முடைய நாயனர் என்றிருக்கிறது.

**நெய்வாசல்** :—புதுக்கோட்டை சமஸ்தானம் திருமையம் தாலூகா, சிவாலயம்.

**நெய்லூர்**:—(திரு) ஈஸ்ட்-இந்தியன் ரெயில் ஸ்டேஷன்-சிவாலயம்.

**நெல்லிக்கா** :—(திரு) திருப்பத்தூருக்கு தெற்கே 8 மைல். அற்பிசிமாசம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தி முதல் 7 நாளும், மாசி மாசம் 18 முதல் 7 நாளும் அஸ்தமன சமயத்தில் சூரிய கிரணங்கள் லிங்கத்தின்மீது விழுகின்றன. சந்நிதி மேற்கு பார்த்தது. ஸ்தல விருட்சம் நெல்லி மரம். இதன் காய்கள் ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யப்படுகின்றன. கோயிலுக்குத் தெற்கே பிரம தீர்த்தமும், வடக்கே சூரிய தீர்த்தமும் இருக்கிறது. பிரமன் பூசித்த ஸ்தலம். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. ஸ்வாமி நெல்லிவனேஸ்வரர், தேவி மங்களேஸ்வரி.

நெல்வாயில் :—சிவபுரி என தற்காலம் வழங்கப்படுகிறது. சிதம்பரத்திற்கு 3 மைல் தெற்கு; சென்னை ராஜதானி; தஞ்சாவூர் ஜில்லா; சிவாலயம். கண்வரிஷி பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி உச்சி நாதேஸ்வரர், தேவி கனகாம்பிகை, கிருபா சமுத்திர தீர்த்தம். இங்கு இரண்டு ஆலயங்கள் உள. வடக்கேயிருக்கும் ஆலயம் உச்சி நாதேஸ்வரர் கோவில், தெற்கேயிருக்கும் ஆலயத்தில் திருக்கழிப்பாலையிலிருந்த பால்வண்ண ஸ்வாமி லிங்க மமைக்கப்பட்டிருக்கிறது. திருக்கழிப்பாலையிலியிருந்த ஆலயம் கொள்ளிடத்தியினல் கொண்டுபோய் விடப்பட்டது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது.

நெல்வாயில் அறத்துறை :—(திரு) இதுவே திருவாத்துறையாம்; பெண்ணகடத்திற்கு 4 மைல், சென்னை ராஜதானி; திருஞான சம்பந்தருக்கு சிவபெருமான் முத்துச் சிவிகை முத்துக்கொடை, முத்துச் சின்னங்கள் அருளிய ஸ்தலம். சப்தரிஷிகளும் இந்திரனும் பூசித்த ஸ்தலம்; ஸ்வாமி அறத்துறைநாதர்; தேவி ஆநந்தநாயகி, கெடில நதி வெள்ளாறு தீர்த்தம். இதற்குப் போவதற்கு விருத்தாசலத்தி லிறங்கிப் போகலாம். மூவர் பாடல் பெற்றது.

நெல்வெண்ணெய் :—(திரு) நெய்வெண்ணெய் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி; மாம்பழப்பட்டு ஸ்டேஷனுக்கு 19 மைல் தென்மேற்கு; சனகாதி நான்கு ரிஷிகள் பூசித்த ஸ்தலம். ஸ்வாமி வெண்ணெயப்பர், தேவி நீலமலர்க்கண்ணியம்மை, பெண்ணை நதி; திருஞான சம்பந்தர் பாடல்பெற்றது.

நெல்வேலி :—(திரு) மேற்படி ஜில்லா, சென்னை ராஜதானி; இதற்கு வேணுவனம், பிரம விருத்தபுரம், தாருகாவனம் என்றும் பெயர். தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன்; பெரிய சிவாலயம்; ஸ்வாமி நெல்லையப்பர், அநவரத நாதர், சாலிவாடீஸ்வரர். வேணுவனேஸ்வரர்; தேவி காந்திமதியம்மன். தீர்த்தங்கள் பொற்றாமரை, கம்பாநதி, சிந்துபூந்துறை. ஹேமபுஷ்கரிணி, சர்வ தீர்த்தம், தாமிரபர்ணி நதி. இங்கு நடராஜப் பெருமானுக்கு பஞ்ச சபைகளில் ஒன்றாகிய தாம்ர சபை; நடராஜ விக்கிரகம் பெரியது. வேத

சர்மர் தமது நிவேதனத்திற்காக உலரவைத்த நெல்லை வெள்ளம் கொண்டுபோகாதபடி, ஸ்வாமி வேலிகட்டி காத்தருளிய ஸ்தலம். அகஸ்தியர், பிரம்மா, விஷ்ணு பூசித்த ஸ்தலம். பிரம்மோத்சயம் ஆனிமாசம் 45 நாட்கள்; நெல்லையப்பருடைய 9 நாள் உற்சவத்தில் 7-வது நாள் காலை அம்பிகை கிருஷ்ணவேஷ உற்சவம் பார்க்கத் தக்கது. நெல்வேலி கட்டின திருவிளையாடல் தைமாசம். திருக்கலியாணம் அற்பிசி மாசம். இங்கே கோயிலில் ஸ்வாமி சந்நிதியில் உள்ள சில கற்றூண்களைத் தட்டினல் சங்கீத ஸ்வரங்கள் பேசுகின்றன. பரமசிவத்தின் திருக்கலியாணக் கோலம் அழகியது. நடு மண்டபத்தில் பாண்டிய அரசர்களுடைய சிலைகள் இருக்கின்றன. மண்டபம் 756 அடி நிகளம், 58 அடி அகலம்; ஒரே காலத்தில கட்டப்பட்டது. நிகளத்தில் இரண்டு பிரிவாக்கப்பட்டு ஸ்வாமி கோயில் அம்மன் கோயில் அக்கம்பக்கமாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஸ்வாமி கோயிலில் 3 கோபுரங்களும் அம்மன் கோயிலில் மூன்று கோபுரங்களும் இருக்கின்றன. இவைகளுக் கிடையில் ஒரு கோபுரமுண்டு. இங்கு 1000-க்கால் மண்டபமுண்டு. 63 அடி அகலம் 520 அடி நிகளம் (10-100). அம்மன் கோயில் கோபுரம் ஸ்வாமி கோயில் கோபுரத்தை விடஉயர்ந்தது. ஸ்வாமி கோயில் கோபுரம் அகலம் அதிகம் (சிதம்பரம் கோயில் கோபுரத்தைப்போல்). ஸ்வாமி கோயிலில் தென்காசியிலிருப்பதுபோல் பெரிய சில்பங்களிருக்கின்றன. ஸ்வாமி கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் எதிரில், கூடாரம்போல் - கட்டப்பட்டிருக்கிறது. இது புதிய கட்டிடம். கோயிலுக்குள் ஒரு பெரியகுளமும் வசந்த மண்டபமுமுண்டு. ஸ்வாமி கோயில் மண்டபத்தில் இரண்டு பெரிய ஸ்தம்பங்கள் 100 சிறு தூண்களாக வெட்டப்பட்டிருக்கின்றன. கோயிலில் முக்கிய கணபதிக்கு நல்ல பொல்லாப் பிள்ளையார் என்று பெயர். இங்குள்ள தர்ம சபையில் மரத்தாலாகிய நடராஜர் விக்ரஹம் உளது. இதற்கு சந்தன நடராஜர் என்று பெயர்; இதற்கு சந்தனக் காப்பு ஒன்றுநாள். திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. இங்கு பல சத்திரங்கள் உண்டு; அவற்றுள் முக்கியமானவை லோகல்பண்டு சத்திரம், 2 அணு முதல் 5 அணு வரை குடிக்கூலி; ஸ்டேஷனுக்கு 1 பர்லாங். (2) வீரபத்திர செட்டியார் சத்திரம் 3 பர்லாங். (3) நாட்

டுக்கோட்டை செட்டியார் சத்திரம்-குறுக்குத்துறை (பிரபல சுப்பிரமணியர் க்ஷேத்திரம்)யிலுள்ளது. இங்கு சிந்துபூந்துறையில் ஒரு சிவாலயமுண்டு. வடக்கில் மூர்த்தீஸ்வரம் எனும் சிவாலயமுமுண்டு.

**நெற்குன்றம்**:—சென்னை ராஜதானி; சென்னைக்கு 4 மைல்-சிவாலயம் வைப்புஸ்தலம்.

**நேரூர்** :—கரூர் தாலுகா கோயமுத்தூர் ஜில்லா சென்னை ராஜதானி. இதற்கு அக்னிபுரம் என்றும் பெயர். சிவாலயம்-அக்னி பூசித்தது. சுயம்புலிங்கம்.

**நேரூர்** :—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; கரூருக்கு 5½ மைல், பழய சிவாலயம். கோயிலுக்குள் சதாசிவப் பிரம்மத்தின் சமாதியிருக்கிறது.

**நேமம்** :—சென்னை ராஜதானி திருச்சிராப்பள்ளி ஜில்லா; திருக்காட்டுப்பள்ளிக்கு 2 மைல். சிவாலயம்-ஸ்வாமி ஐராவதேஸ்வரர், தேவி அலங்காரி யம்மன். ஐராவதம் பூசித்த ஸ்தலம். ஊர்வசி சாபம் தீர்த்த ஸ்தலம்.

**நைமிசாரண்யம்** :—வட இந்தியா, சிவாலயம்-சுயம்புலிங்கம்; ஸ்வாமி தேவதேவேஸ்வரர்.

**நைஜாம் பட்டணம்** :—குண்டூர் ஜில்லா, தெனலி தாலுகா, சென்னை ராஜதானி- சிவாலயம்-ஸ்வாமி கோகர்ணேஸ்வரர்.

**நௌநகர்** :—இதற்கு ஜாம்நகர் என்றும் பெயர். வட இந்தியா ரெயில் ஸ்டேஷன்; சிவாலயம்.

**நௌகீகி** :—பல்லாரி ஜில்லா சென்னை ராஜதானி. இங்குள்ள குன்றின்மீது சிவாலயம். ஸ்வாமி மல்லீஸ்வரர்.

**பஞ்சாக்கை** :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா. சிவாலயம்-ஸ்வாமிபஞ்ச வர்ணேஸ்வரர், உமாதேவி-வைப்புஸ்தலம்.

**பகலூர்** :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. நங்கிலத்திற்கு 7 மைல். சிவாலயம்; கோயில் மூன்று பக்கம்

தெப்பக்குளத் தண்ணீரால் சூழப்பட்டிருக்கிறது. அப்பர் சிவசாயுஜ்ய மடைந்த ஸ்தலம், பிரம்மோற்சவம் சித்திரை மாசம்.

பகேஸ்வர் :—இதற்கு காறு என்றும் பெயர். பிர்பூம் ஜில்லா, வங்காள ராஜதானி. இங்குள்ள நதியோரம் ஒரு சிவாலயமுண்டு.

மங்கூரா பிரிவு :—வங்காள ராஜதானி. இங்கு 3 சிவாலயங்கள் உள. (1) பாஹாலாரா கிராமம்; சிவாலயம் பெரியது, செங்கல் கட்டடம. ஸ்வாமி சித்தேஸ்வர் மகா தேவ். (2) விஷ்ணுபூர் (விஷ்ணு புரம்) சிவாலயம் ஸ்வாமி மல்லேஸ்வரர், வங்காள சில்பம். (3) எட்டேஸ்வர் சிவாலயம், விஷ்ணுபுர அரசர்களால் கட்டப்பட்ட கோயில்; இங்கு ஒரு ஒரு கூபத்தில் சிவலிங்கம் இருக்கிறது. ஸ்வாமி அநாதிலிங்கேஸ்வரர், சுயம்பு என்பர். இதற்கு சித்திரை மாசம் சாரகி பூசை என்னும் விசேஷ பூசை நடக்கிறது.

பசுபதி :—கிராமம், நேபாள ராஜ்யத்தி லுள்ளது. இந்தியாவிற்கு வடக்கில்-சிவாலயம் வாக்மதி நதியின் வட கரையிலுள்ளது. காட்மாண்டுவுக்கு 3 மைல். இங்கு பல சிவாலயங்கள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானது பசுபதி நாதர் கோயில்-இங்கிருக்கும் சிவலிங்கம் மிகவும் பிர சித்தியானது. இங்குள்ளவர்கள் இதை காசிலிங்கத்திற் குச் சமானமாக எண்ணுகின்றனர். கோயில் மரத்தா லாயது; இரட்டைக் கூரை யுடையது; பர்மா, சீன தேசத்துக் கோயில்களைப் போன்றது. கோயிற் கதவுகள் வெள்ளியினால் வேய்ந்தவை. கோயிலுக்கெதிரில் நந்தி யிருக்கிறது. தற்காலக் கோயில் 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக எண்ணப்படுகிறது. கோயிலுக்கெதிரிலும் கூரையிலும் பெரிய திரிசூலம் வைக்கப்பட்டிருக்கிறது.

பஞ்ச நதிக் குளம் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி-சிவாலயம்.

பஞ்சதாரலா :—சரங்கித்தி தாலுகா, விசாகப்பட்டணம் ஜில்லா, சென்னை ராஜதானி. பஞ்சதார்லா-5 தாரைகள்-

சிவாலயம்-இங்கு பெரிய லிங்கத்தில் 1020 சிறு லிங்கங்கள் அடங்கியிருக்கின்றன. (12 + 85) இதற்குக் கோடிலிங்கம் என்று பெயர். ஸ்வாமி தர்மலிங்கேஸ்வரர்.

**பஞ்சமா தேவர்** :—கரூர் தாலுகா, சென்னை ராஜதானி. சிவாலயம் - பிரம்மாவுக்கு சிவமாகவும் விஷ்ணுவாகவும் காட்சியளித்த ஸ்தலமென்பர் - பஞ்சநாதர் + மாதவர் = பஞ்சமாதவர் என்றாயிற்றாம்.

**பட்டமடை** :—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜ தானி. சிவாலயம் ஸ்ரீ வல்லீஸ்வரம்-ஸ்வாமி வல்லீஸ்வரர்-வில்வநாதர், தேவி-உமையம்மை. இங்குள்ள கல்வெட்டொன்றினால் பூர்வகாலத்தில் உற்சவ காலத்தில் இங்கு தாசிகள் நாடக மாடினதாக அறிகிறோம். பத்துமடை பத்தமடை யென்றாய தென்பர். திருநெல்வேலிக்கு 10 மைல்; சேரமா தேவிக்கு 2 மைல். கன்னடிய காலே அடுத்தது.

**பட்டாளம்** :—தென் இந்தியா ரெயில் ஸ்டேஷன், சிவா லயத்திற்கு புலிப்புறக் கோயில் என்று பெயர். ஸ்வாமி திருப்புலீஸ்வரர் (புலீஸ்வரர் ?)

**பட்டீஸ்வரம்** : —தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜ தானி. கும்பகோணத்திற்கு 4 மைல் தென் மேற்கு-காம தேனுவின் புதல்வியாகிய பட்டி பூசித்த ஸ்தலம், எனவே பட்டீஸ்வரம் என்றாயது. பரமசிவம் திருஞான சம்பந்தர்க்கு முத்துப் பந்தல் அளித்த ஸ்தலம். ஸ்வாமி பட்டீசுரர், தேவி பல்வளை நாயகி, ஞானம்பிகை; ஞான தீர்த்தம் கருட தீர்த்தம்; வன்னி விருட்சம். கோயிலில் ஸ்ரீ ராமர் சிவபெருமானைப் பூசிப்பதுபோல் ஒரு சிற்பம் உண்டு. நாயக அரசர்களின் மந்திரி ஆகிய கோவிந்த தீட்சிதர் சிலை, அம்மன் சந்நிதியிலிருக்கிறது. இங்குள்ள அகோர மூர்த்தி பார்க்கத்தக்கது. திருஞான சம்பந்தர் தூரத்தில் எழுந்தருளியபோதே ஸ்வாமி நந்தியை விலகச் செய்து தர்சனம் கொடுத்த க்ஷேத்திரம். அம்பாள் தபஸ் செய்வது போலும், பிறகு லிங்கத்தை தழுவியதுபோலும் சிலைகளிருக்கின்றன; மிகவும் அழகியவை. திருஞான சம்பந்தர் பாடல் பெற்றது. திருஞான சம்பந்தர் உற்சவ

மூர்த்தி அழகியது. ஆனிமாசம் முத்துப் பந்தல் உற்சவம் மிகவும் விசேஷம்.

பட்டுக் கோட்டை :—இதற்கு அண்டமி என்றும் பெயர். சிவாலயம்-ருத்ரபதியார் அன்ன உற்சவம் ஐப்பசி மாசம் விசேஷம்.

படபாமுகம் :—வட இந்தியா, சுயம்புலிங்கம், ஸ்வாமி அனலேஸ்வரர்.

படவேடு :—வேலூர் தாலுகா, வட ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. (1) அம்மையப்பேஸ்வரர் கோயில், (2) சோமநாதேஸ்வரர் கோயில்.

படாஸ் :—வட இந்தியா ஜி. ஐ. பி. ரெயில் ஸ்டேஷன் சிவாலயம்-ஸ்வாமி நாகேஸ்வர். இங்கு தர்மசாலை யுண்டு.

படுவனம்பூர் :—மங்களூர் தாலுகா, தென் கன்னட ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்.

படேஸ்வர் :—வட இந்தியா, ஆக்ராவிலிருந்து எடாவாவுக்குப் போகும் வழியிலிருக்கிறது. பாஹ் ஸ்டேஷனிலிருந்து 5 மைல் வடமேற்கு, சிவாலயம்; ஸ்வாமி வடேஸ்வரநாதர், வட விருட்சம் (ஆலமரம்) கோயில் 1646ஞ கட்டப்பட்டது. ஜம்நா நதியின் வட கரையிலுள்ளது.

பண்டா ஜில்லா:—ஐக்கிய மாகாணம்-கலிஞர் கிராமத்தில் சிவாலயம்; ஸ்வாமி பல்கண்டி மஹாதேவர். லிங்கம் 6 அடி உயரம். கோயில் கோட்டைக்குள் உளது. பாதாள கங்கை தீர்த்தம், கோடி தீர்த்தம். இங்கு மற்றொரு சிவாலயமுண்டு. ஸ்வாமி நீலகண்டேஸ்வரா. குகைக்கோயில்-கருப்பு லிங்கம், 4 அடி 5 அங்குல உயரம். இதற்கு வெள்ளியினால் இரண்டு கண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

பசுபதீஸ்வரம் :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா, சிவாலயம் - சத்தமாத்ருக்களுள் ஒருத்தியாகிய வைஷ்ணவி பூசித்த ஸ்தலம். வள்ளலார் கோயிலுக்கும் தர்ம புரத்திற்கும் இடையிலுள்ளது.

பண்டார வடை :—சென்னை ராஜதானி, தஞ்சாவூர் ஜில்லா. சிவாலயம்-மச்சபுரீஸ்வரர் ஜகதாம்பாள். ரெயில் ஸ்டேஷன்.

பண்டில் கண்ட் பிரிவு:—வட மேற்கு மாகாணம், வட இந்தியா. இங்கு பல சிவாலயங்கள் உள. (1) அஜேகர் கிராமம் சிவாலயம், பஞ்சமுக லிங்கம். (2) மீரட் பிரிவு மாபூர் கிராமம். மாயா தேவியின் கோயிலுக்கருகில் ஒரு கிலமாய்ப்போன சிவாலயமுண்டு. (3) ஆக்ரா பிரிவு - ஈடா ஜில்லா, அத்ரஞ்சிகேரா கிராமம், சிவாலயம் பாழடைந்திருக்கிறது. மண்மேட்டின் மீது 5 சிவ லிங்கங்கள் உள; அதில் ஒன்று 6 அடி உயரம். (4) ஷிகோபாத் கிராமம், சிவாலயம்-பஞ்சமுக மஹா தேவர் கோயில்.

பண்டரீ புரம்:—மத்ய இந்தியாவிலுள்ளது; ரெயில் ஸ்டேஷன். (பிரபல விஷ்ணு ஸ்தலம்) வாடிஹாட்கி, ஷோலாபூர், குருட்வாடி மார்க்கமாய்ப் போகவேண்டும். சிவாலயம்-ஸ்வாமி மல்லிகார்ஜுனர், விட்டலர் கோயிலின் மஹாதுவாரத்திலிருக்கிறது. ராமசந்திர சதாசிவன் என்பவரால் கட்டப்பட்டதென்பர். அன்றியும் விட்டல மூர்த்தியின் சிரசில் சிவலிங்கம் உண்டென சிலர் எண்ணுகின்றனர்; அன்றியும் இக் கோயிலில் சித்தி விநயக மூர்த்தி யுண்டு. காள பைரவரின் தேவாலய முண்டு. மேலும் அருகாமையில் முரளீதரர் தேவாலயத்தைச் சார்ந்ததாய் வெள்ளைக் கல்லாலாய மஹாதேவ மூர்த்தியுளது. இது இரண்டாம் பேஷ்வா பாவா ஜிராவால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்குள்ள புண்டலீகன் கோயிலிலும் ஒரு சிவ லிங்கம் உண்டு. இதற்கு பித்தளை கலசமணிவித்து நகை வஸ்திரங்களால் அலங்காரம் செய்கின்றனர்.

பண்டாரநல்லூர்:—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி சிவாலயம். இங்குள்ள வெண்கல பிட்சாடன மூர்த்தி பார்க்கத் தக்கது.

பண்ணியூர்:—மலையாளம் ஜில்லா, சென்னை ராஜதானி. இங்குள்ள வாரஹ மூர்த்தி கோயிலுக்குள் ஒரு சிவ சந்நிதி யுண்டு.

பணகுடி:—திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி - சிவாலயம்.

பணமலை:—விழுப்புறத்திற்கு 15 மைல் தென் மேற்கு; தென் ஆற்காடு ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்

குகைக் கோயில்; பல்லவ சிற்ப மமைந்தது. ராஜ சிம்மன் எனும் இரண்டாவது நரசிம்மனால் (675—710) வெட்டப் பட்டது. லிங்கம் 16 பட்டைகள் அமைந்தது. லிங்கத் திற்குப் பின் சோமாஸ்கந்த மூர்த்தியும், பக்கத்தில் பிரம்ம விஷ்ணுக்களும் சேதுக்கப்பட்டிருக்கிறது. சிவாலயம் மலை உச்சியில் உளது. ஸவாமி தாளபுரீஸ்வரர்; அடிவாரத்தில் மஹிஷாசுரமர்த்தனி குகைக் கோயில் கர்ப்பக் கிரஹத்தைச் சுற்றிலும், காஞ்சி கைலாச நாதர் கோயிலி லிருப்பதுபோல் சிறுகட்டிடங்களுண்டு; கிழக்கும் மேற் கும் பார்த்தவை. இவைகளில் சிவலிங்கங்கள் உள. தூண்களில் சிங்கங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

**பத்ததாக்கல்**:—பம்பாய் ராஜதானி, பிஜபூர் ஜில்லா. இங்கு பல சிவாலயங்கள் உண்டு. (1) **விரூபாட்சர் கோயில்**, பழைய பெயர் லோகேஸ்வரர் கோயில், சாளுக்கிய அரசனாகிய இரண்டாம் விக்ரமாதித்யன் மனைவியாகிய லோகமா தேவியால் (733—747) வருஷங்களில் கட்டப்பட்டது. இதைப்பார்த்து தான் இதைப்போல் எல்லோராவிலிலுள்ள கைலாச கோயில் கட்டப்பட்டதென்பர். கோயில் நடுவில் சதுர விமான முடையது; அதில் மூன்று நிலைகள் உள. கோயிலின் வெளிப் பிராகாரம் 224 அடி நிகளம்; கிழக்கு மேற்கால், 105 அடி அகலம்; மேற்கில் கொஞ்சம் குறுகியிருக்கிறது. வெளிப் பிரகாரத்தைச் சுற்றிலும் சிறு கோயில்கள் இருக்கின்றன. இவற்றுள், சிலதான் இடியாமல் இருக்கின்றன. கோயில் கிழக்கு பார்த்தது; கர்ப்பக் கிரஹத்திற்கு முன்பாக மஹா மண்டபம் 50 அடி 8 அங்குலம் × 45 அடி 10 அங்குளம்; 16 ஸ்தம்பங்களை யுடையது. இதன் கூரையின் மத்தியில் ஒரு பெரிய நாகராஜனுடைய உருவமும் அவனது இரண்டு மனைவிகளின் உருவங்களும் உள. இம் மண்டபத்திற்குள் வெளிச்சம் வர 12 துவாரங்களையுடைய படல்கள் அமைக் கப்பட்டிருக்கின்றன; மிகவும் அருமையான வேலைப்பா டுடையவை. கர்ப்பக்கிரஹம் 12 அடி சதுரம். நடுவில் லிங்கம்; அந்தராளம் 10 அடி நிகளம். ஒருபுறம் சிவலிங்கத் தின் பக்கத்தில் பிரம்மாவும் விஷ்ணுவும் இருக்கின்றனர். குள்ள லிங்கோத்பவர் சிலை பார்க்கத்தக்கது. இதில் பிரம்மா மனுஷ்ய உருகில் இருக்கிறார் (அன்னப்பட்சியா

யிராமல்) கர்ப்பக்கிரஹத்தின் தென் புறம் தட்சிணா மூர்த்தி கிடையாது. கோயிலின் தூண்கள் மிகவும் அழகியவை. அவைகளில் ராமாயணக் கதை முதலியன சிற்பங்களால் காட்டப்பட்டிருக்கின்றன. இங்கு மல்லி கார்ஜுனர் கோயில் ஒன்று உண்டு; (737-746) கட்டப் பட்டது.

(2) சங்கமேஷ்வர் கோயில். பழைய பெயர் விஜயேஸ்வரர் கோயில், விஜயாதித்ய சத்யாஸ்ரயரால் (696-733) கட்டப்பட்டது. விருபாட்சர் கோயிலுக்கு கொஞ்சம் வட மேற்கிலுள்ளது. இக் கோயிலில் தற்காலம் பூசையில்லை; இடிந்திருக்கிறது.

(3) பாப்நாதர் கோயில். இது ஆதியில் சூரியன் கோயிலாயிருந்து, பிறகு வைஷ்ணவ கோயிலாகி, கடைசியில் சிவாலயமாக மாற்றப்பட்டதென்று மிஸ்டர் கசின்ஸ் (Cousins) எண்ணுகிறார். சுவரிலுள்ள விக்ரகங்களின் பெயர்கள் கீழே செதுக்கப்பட்டிருக்கின்றன. இது கி. பி. 700-ல் கட்டப்பட்டது.

(4) காசிவிஸ்வ நாதர் கோயில். (5) காலக நாதர் கோயில். வட இந்திய ஆரிய கட்டடம், அடிபீடம் விசித்திரமானது. ஆற்றுநீரால் அழிக்கப்படாதபடி கர்ப்பக்கிரஹத்தைச் சுற்றி உயரமான பீடம் கட்டப்பட்டிருக்கிறது.

(6) கட்சித்தேஸ்வரர் கோயில். வட இந்திய ஆரிய கட்டடம்.

(7) ஜம்புலிங்கம் கோயில். (8) சந்திரசேகரர் கோயில். (9) மல்லிகார்ஜுனர் கோயில்-சாளுக்கிய கட்டடம். (10) சங்கர நாராயணர் கோயில்.

பத்மநாத புரம் :—திருவாங்கூர் ராஜ்யம். சிவாலயம்.

பத்மநேரு :—நாங்குநெறி தாலுகா, திருநெல்வேலி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம்-சுவாமி நெல்லையப்பர்.

பத்ரவடம் :—வட இந்தியா கங்காத்வாரத்திற்கு அருகிலுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி பத்ரேசர்; சுயம்புலிங்கம்.

பத்ரி நாராயணம் :—வட இந்தியா, சிவாலயம் ஸ்வாமி பில்வகேத் மஹாதேவ்-இங்கு பல தர்மசாலைகளுண்டு.

பதான் :—(படான்?) வட இந்தியா, நேபாளராஜ்யத்தி லுள்ளது. சிவாலயம் மரத்தாலாயது-ஸ்வாமி மஹாதேவர். கோயில் பர்மா சீனு கட்டடங்களைப் போன்றது. கூரை இரண்டு அடுக்குகளுடையது, மரத்தாலாயது.

பந்தணை நல்லூர் :—(திரு) சென்னை ராஜதானி, திருவிடை மருதூருக்கு 8 மைல், வடகிழக்கு; சிவாலயம். ஸ்வாமி பசுபதீஸ்வரர், தேவி காம்பனதோளி யம்மை, ஸ்தல விருட்சம் கொன்றை, புஷ்கரிணி தீர்த்தம்; தேவ கன்னியரும், காமதேனுவும் பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமியின் மணவாளக்கோலம் பார்க்கத் தக்கது. அம்மன் சந்நிதி வடக்கு பார்த்தது.

பத்துப்பூர் :—ஜி. ஐ. பி. ரெயில்வே ஸ்டேஷன்; கத்ரீ-பீனு பிரிவு. சிவாலயம் 1781-ௐ கட்டப்பட்டது-ஸ்வாமி ஜகேஷ்வர் மஹாதேவ்.

பம்பர்டே :—பம்பாய் ராஜதானி, பூனைவுக் கருகி லுள்ளது. சிவாலயம்-ஸ்வாமி பாஞ்சாலேஷ்வரர்.

பம்பாய் :—பம்பாய் ராஜதானியின் முக்கிய பட்டணம். இங்கு அடியிற் கண்ட சிவாலயங்க உண்டு. (1) பூலேஷ்வர் கோயில், பாய்தோணி எனும் இடத்தி லுள்ளது; சரியான பெயர் போலேஷ்வர். கோயில் கருப்புக்கல்லாலாயது. பூலேஷ்வர் கோயில் 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது; 1830-ௐ புதுப்பிக்கப்பட்டது. சுயம்பு லிங்கம் என்பர்; தேவி பார்வதி. (2) வால்கேஷ்வர் கோயில். வாலுகா = மணல், ஸ்ரீ ராமர் பூசிப்பதற்காக லட்சுமணரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் என்பது ஐதீகம். (3) மங்களேஷ்வர் கோயில் - பழைய கோயில் போர்த்துகேயரால் இடிக்கப்பட்டது; புதிய கோயில் 1715-ௐ கட்டப்பட்டது ராமகாமத் என்பவரால். (4) பாபுல்நாத் கோயில். சிலாஜி எனும் தட்டானல் 1770-ௐ கட்டப்பட்டது; ஸ்வாமி-மஹாதேவர், கருப்பு லிங்கம் 1840-ௐ புதுப்பிக்கப்பட்டது. சிராவண மாசத்தில் நெய் பூஜை விசேஷம்.

கோயிலுக்குள் போக 100 படிகள் ஏறிப்போகவேண்டும். கர்பக்கிரஹத்திலுள்ள சிவலிங்கத்தின் பேரில் ரூபாய்களாலாய கலசம் உளது. எதிரிலுள்ள நந்திகேஸ்வரருக்கு வெள்ளிக் கொம்புகள். இங்குள்ள சபா மண்டபத்திற்கு கைலாச மென்று பெயர். இது மலபார் குன்றில் இருக்கிறது, (5) மஹாலட்சுமி கோயிலின் சுற்றுப்புரத்தில் மயூரேஷ்வர், ராமேஷ்வர், தக்லேஷ்வர் எனும் மூன்று சிவ சந்நிதிகளுண்டு- (6) மம்பா தேவி கோயில் பிரகாரத்தில் மஹாதேவர் சிவாலயமுளது.

பர்ணசாலா :—கோதாவரி ஜில்லா, சென்னை ராஜதானி. சிவாலயம் (இங்குதான், ராவணன் சந்யாசியாக சீதையைக் கவர்ந்ததாக ஐதிகம்.)

பாப்பு :—திரி பரப்பு என வழங்கப்படுகிறது. திருவாங்கூர் ராஜ்யம், சிவாலயம்-ஸ்வாமி-மஹாதேவர்.

பயற்றூர் :—(திரு) பயற்றங்குடி என வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி; விற்குடிக்கு 3 மைல் கிழக்கு. வெட்டாறு ஸ்டேஷனிலிருந்து 6½ மைல். தஞ்சாவூர் ஜில்லா; சிவாலயம், ஸ்வாமி-திருப்பயற்றீஸ்வரர் தேவி - காவியங்கண்ணியம்மை. பைரவ ரிஷி பூசித்த க்ஷேத்திரம்; அப்பர் பாடல் பெற்றது.

பர்லிவயிஜ்நாத் :—வட இந்தியா, சிவாலயம். 12 ஜோதி லிங்கங்களில் ஒன்று இங்குளதாம்.

பர்கானுக்கள் .—21 பர்கானுக்கள், வங்காள ராஜதானி; இங்கு அடியில் குறித்த சிவாலயங்கள் உள. (1) தட்சிண பாரா செட் கிராமம்; சிவாலயம், ஸ்வாமி-ஆதிய மஹேஸ்வர் கோயில் சௌத்ரி குடும்பத்தாரால் 180 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. (2) கமர்கட்டி கிராமம்; இதில் 12 சிறு சிவாலயங்கள் உண்டு. (3) கார்டா- இங்கும் 12 சிறு சிவாலயங்கள் உள.

பர்ட்வான் பிரிவு:—வங்காள ராஜதானி. இங்கு பல சிவாலயங்கள் உள. (1) பாகன் பாரா கிராமம், கோபேஸ்வர் சிவாலயம். (2) பாராகர்-இங்கு 4 சிவாலயங்கள் உள.

(3) கால்னு கிராமம், இங்கு சிவாலயம், மஹாராஜா சந்திர பஹதூரால் கட்டப்பட்டது. இங்கு 109 சிவலிங்கங்கள் இருக்கின்றன - 66 வெளிப் பிரகாரத்தில் - 42 உட்பிரகாரத்தில் - நடுவில் 1 வெள்ளியாலாகிய லிங்கம். (4) மாளடேஷ்வர் கிராமம் சிவாலயம், ஸ்வாமி-மாள்டேஷ்வர்.

பர்ஹாம்பூர் :—சென்னை ராஜதானி, கஞ்சம் ஜில்லா. சிவாலயம்.

பரகலி :—பல்லாரி ஜில்லா, சென்னை ராஜதானி; கள்ளேஸ்வர் கோயில், சாளுக்கிய கட்டிடம். இதற்குப் பழைய பெயர் காளிதேவ ஸ்வாமி கோயில். இதில் 1000 வருடங்களுக்கு முந்திய கல் வெட்டுகள் உள.

பரக்காலக் கோட்டை :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. பட்டுக் கோட்டைக்கு 8 மைல். இதற்குப் புது ஆவுடையார் கோயில் என்றும் பெயர், திங்கட் கிழமை அர்த்த ராத்திரியில் சிதம்பரத்திலுள்ள ஈஸ்வரர் இங்கு வருவதாக ஐதீகம்.

பாங்கூர் :—வட இந்தியா, சீரா தாலுகா; சிவாலயம்.

பரங்கிமலை :—தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன். சென்னை ராஜதானி. காசி விஸ்வநாதர் கோயில்.

பரசலூர் :—தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானி. மாயவரத்திற்கு 5 மைல் கிழக்கு, சிவாலயம். தட்சன் யாகம் செய்த ஸ்தல மென்பர்.

பரங்குன்றம் :—(திரு) மதுரை ஜில்லா, சென்னை ராஜதானி, ரெயில் ஸ்டேஷன் (சுப்பிரமணியர் தெய்வயானையை மணந்த க்ஷேத்திரம்) சிவாலயம்; ஸ்வாமி-பரங்கிரி நாதர், தேவி ஆவுடை நாயகி, சரவணப்பொய்கை தீர்த்தம். கோயில் மலையில் குடையப்பட்டிருக்கிறது. திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற க்ஷேத்திரம். இங்கு வெள்ளியாலாகிய சிவாலயம் ஒன்றிருந்ததாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறது. பரங்கிரி மலைக்குத் தெற்கில் உமையாண்டாள் கோயில் எனும் சிவாலயமுண்டு.

ஸ்வாமி - சத்யகிரீஸ்வரர், தேவி - கோவர்த்தனம்பிகை; குகைக்கோயில், கல்வெட்டுகளில் ஸ்வாமி பெயர் சுந்தர பாண்டிய ஈஸ்வர முடையார் என்றிருக்கிறது. மாரவர்மன் பாண்டியனால் 1216-ஆல் வெட்டப்பட்டதாயிருக்கலாம். மண்டபம் 19 × 17 × 9 அடி; கர்ப்பக்கிரஹம் 8 அடி சதுரம். இங்குள்ள நடராஜர் சிலை அழிந்திருக்கிறது. மலையின் மீது ஒரு சுனை இருக்கிறது. அதன் பக்கம், சிவலிங்கம் நந்தி வெட்டப்பட்டிருக்கிறது - விஸ்வநாதர் - விசாலாட்சி. இதற்குப் பூஜை செய்ய குருக்கள் ஜலத்தில் நீந்திக்கொண்டு போகவேண்டும். இங்குள்ள மீன்கள் பல வர்ணமுள்ளவை. பெரிய கோயிலின் முன் மண்டபத்திலுள்ள சுப்பிரமணியர் தெய்வயானை திருமணக் கோலம் பார்க்கத் தக்கது; அழகிய சில்பம். இங்கு பல சத்திரங்கள் உண்டு.

**பரமதி**:—திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி, சிவாலயம் பழமையானது; இதில் பல கல் வெட்டுகள் உள.

**பரமேஸ்வர மங்கலம்** :—சென்னை ராஜதானி சிவாலயம். ஸ்வாமி-கைலாசநாதர், தேவி-சௌந்தர நாயகி. குபேர தீர்த்தம், லக்ஷ்மி பூசித்த க்ஷேத்திரம்.

**பராபர் மலை** :—பாட்னா-கயா ரெயில்வேயிலுள்ள பேலா ஸ்டேஷனுக்கு 7 மைல் கிழக்கு. மலையின் உச்சியில் சிவாலயம்; ஸ்வாமி-சித்தேஸ்வரர், லிங்கம் இரவில்தான் பூசிக்கப்படுகிறது. அநந்த சதுர்த்தி பூஜை விசேஷம்.

**பராய்த் துறை** :—(திரு) திருச்சிராப்பள்ளி ஜில்லா, சென்னை ராஜதானி; எழுமனூர் ஸ்டேஷனுக்கு $1\frac{1}{2}$ மைல், வட கிழக்கு. இந்திரன், குபேரன், சப்த ரிஷிகள், பூசித்த ஸ்தலம். இவ்வூருக்கு அகண்டகாவேரி யெனவும் பெயர்-சிவாலயம், ஸ்வாமி-பராய்த்துறை நாதேஸ்வர், தேவி-பொன்மயிலாம்பிகை யம்மை; காவிரி நதி, பராய் விருட்சம். மிகவும் பழைய கோயில். திருஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. இங்கு மற்றொரு கோயில் தாருகாவனேஸ்வர் கோயில்.

பரிதி நியமம் :—திருப் பரித்தியப்பர் கோயில் எனவும் வழங்கப்படுகிறது. சென்னை ராஜதானி, சாலிய மங்கலம் ஸ்டேஷனுக்கு 9 மைல் தென் மேற்கு. சூரியன் (பரிதி) பூசித்த க்ஷேத்திரம். ஸ்வாமி-பரிதியப்பேஸ்வரர், தேவி-மங்களநாயகி, சூரிய தீர்த்தம்; திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. (நியமம் = கோயில்.)

பருவலூர் :—பரவலூர் என்றும் கூத்தராயன் பேட்டை என்றும் அழைக்கப்படுகிறது. சிவாலயம்-பெரிய நாகேஸ்வரர், தேவி-மீனாட்சியம்மை, சக்தி பூஜித்தது; சென்னை ராஜதானி.

பரோச் :—வட இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் சிவாலயம், ஸ்வாமி-மூகதேவர். நர்மதை தீர்த்தம், நர்மதைக் கரையில் அநேகம் லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன.

பரோடா ராஜ்யம் :—பம்பாய் ராஜதானி; இங்கு அடியிற் கண்ட சிவாலயங்கள் உள. (1) பரோடா பட்டணம், காசி லிங்கேஸ்வர் ஆலயம். (2) பெட்லாட் கிராமம், ராமநாதர் கோயில், சோமநாதர் கோயில். (3) கார்வான் கிராமம், காயாரோஹணர் கோயில், விஸ்வேஸ்வர் கோயில், கோடேஷ்வர் கோயில், ராமநாத் மஹாதேவ் கோயில், வாக்நாத் மஹாதேவ் கோயில், பஞ்சநாத் மஹாதேவ் கோயில், பீம்நாத் மஹாதேவ் கோயில், நக்லேஷ்வர் கோயில், இங்குள்ள சிவலிங்கம் மூம் மூர்த்திகளும் காணப்படும்படியான சில்பம். (4) கார்நாலி, சோமேஷ்வர், குபேரேஷ்வர், பாவகேஷ்வர் கோயில்கள். (5) சினேர் கிராமம், பத்ரேஷ்வர், அங்காரகேஷ்வர் கோயில்கள். (6) திலகவாடா கிராமம், மணிநாகேஷ்வர், திலகேஷ்வர் கோயில்கள். (7) காம்ரேக் கிராமம்; கோடேஷ்வர் ஆலயம், தபதிக் கரையிலுள்ளது, மோட்சநாத மாஹேஷ்வர் கோயில, இதுவும் தபதிக் கரையிலுள்ளது. (8) வியாரா கிராமம். நாரத் கங்கையும் தபதியும் சங்கமமாகுமிடத்தில் மஹாதேவர் சிவாலயம். (9) வாகிபூர், உத்கண்டேஷ்வர் மஹாதேவ் கோயில் லிங்கத்தினின்றும் சதா தீர்த்தம் வந்துகொண்டிருப்பதாக ஐதீகம், சிவராத்திரி விசேஷம். (10) கடி கிராமம், உதயேஷ்வர் மஹாதேவ் ஆலயம் பழையது; பீமநாத் கோயில், பிம்பலேஷ்வர் கோயில். காசி விஸ்வநாத் கோயில்; இம்

மூன்றும் புதியவை. (11) பட்டன் கிராமம், உமாமஹேஷ்வர் ஆலயம்; வன்ராஜ் என்பவரால் 746-ஆம் கட்டப்பட்டது. (12) சித்பூர் கிராமம், இங்குள்ள சிவாலயத்திற்கு ருத்திர மாலா என்று பெயர்: பாழடைந்திருக்கிறது. சித்தேஷ்வர் கோயில், நீலகண்ட மஹாதேவ் கோயில், மற்றும் சரஸ்வதி நதிக்கரையில் பூத்நாத மஹாதேவ் கோயில்; பிரம்மாண்டேஷ்வர் மஹாதேவ் கோயில், அர்படேஷவர் மஹாதேவ் கோயில், வால் கேஷ்வர்மஹாதேவ் கோயில், சித்தநாத் மஹாதேவ் கோயில், பிந்து சரோவர தீர்த்தம்; மண்டிகேஷ்வர் கோயில். (13) விஸ்நகர்; பீம்நாத மஹாதேவர் ஆலயம், சோமநாத் மஹா தேவர் ஆலயம், ஜாலேஷ்வர் மஹாதேவ் ஆலயம். (14) வத் நகர், ஹடகேஷ்வர் கோயில், சோம்நாத் கோயில், காலேஷ்வர் கோயில், அஜபாஸ் மஹாதேவர் கோயில், தூளேஷ்வர் மஹா தேவ் கோயில்.

பல்நாரு ஜில்லா:—மத்ய மாகாணம். இங்குள்ள சிவாலயங்கள்: (1) அமராபூர் கிராமம்; சிவாலயம் இடிந்திருக்கிறது, ஹேமாத்பண்ட் கட்டடம். (2) சண்டோல் கிராமம், இங்கு இரண்டு சிவாலயங்கள் உள. கர்ப்பக்கிர ஹங்கள் 8 கோண முடையவை. (3) சக்லி பட்டணம்; மஹாதேவர் கோயில். (4) தோத்ரா கிராமம் சிவாலயம், ஹேமாத்பண்ட் கட்டடம்; நான்கு வாயில்கள் கோயிலுக்கு இருந்த போதிலும் கிழக்கு வாயில் மாத்திரம்தான் திறக் கப்படுகிறது, மற்ற மூன்று வாயில்களும் எப்பொழுதும் மூடப்பட்டிருக்கின்றன. (5) ஜாபோட் கிராமம் சிவாலயம். (6) கோதாலி கிராமம். சிவாலயம்; ஹேமாத்பண்ட் கட்ட டம், கோயில் சாளுக்கிய கோயில்களைப்போல் 3 சந்நிதிகளை யுடையது. விஸ்வகங்கைக்கரையி லுள்ளது. கோயில் பாழாயிருக்கிறது. இங்கு சிந்தாமணி மஹாதேவர் கோயில் ஒன்றுண்டு. (7) மதா கிராமம், ஹேமாத்பண்ட கட்டடம் சிவாலயம். (8) மால்கி கிராமம் சிவாலயம். (9) ராஜுரா கிராமம் சிவாலயம்; ஸ்வாமி-பரமேஷ்வர், கோயில் மேற்கு பார்த்தது. (10) சாகே கேவான் கிராமம் சிறிய சிவாலயம் (விஷ்ணு ஆலயத்திற்கருகி லுள்ளது). (11) சேந்தர்ஜுன் கிராமம் சிவாலயம், ஹேமாத்பண்ட் கட்டிடம். (12) வார் வாண்ட கிராமம், இங்கு சிவாலயத்திற்கு ஏக்நாத் ஆலயம் என்று பெயர். இது சுமார் 800 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது.